வெற்றித்திருமகன் எம்.ஜி.ர்.நூல்வரிசை - 6

எம்.ஜி.ஆர் ஒரு ஜீவ நதி



முனைவர் செ. இராஜேஸ்வரி

எம்.ஏ.,எம்.ஃபில்., பிஹெச்.டி


பதிப்பகம்

சந்திரோதயம் பதிப்பகம்

3,462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு,கம்பர் சாலை,

தினமணி நகர், மதுரை – 625 018

தொலைபேசி எண் : 7010997639



பதிப்பகம்

சந்திரோதயம் பதிப்பகம்
3,462 முதல் மாடி, கம்பர் *2*வது தெரு,கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – *625 018*
தொலைபேசி எண் : *7010997639*

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 6

எம்.ஜி.ஆர் ஒரு ஜீவ நதி

முனைவர் செ. இராஜேஸ்வரி
எம்.ஏ.,எம்.ஃபில்., பிஹெச்.டி

பதிப்பகம்

சந்திரோதயம் பதிப்பகம்
3,462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு,கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018
தொலைபேசி எண் : 7010997639

நூல் விவரம்

நூலின் பெயர்	:	எம்.ஜி.ஆர் ஒரு ஜீவ நதி
நூல் வரிசை	:	6
ஆசிரியர்	:	முனைவர் செ.இராஜேஸ்வரி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3,462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை, தினமணி நகர், மதுரை – 625 018 தொலைபேசி எண் : 7010997639
பதிப்பு	:	முதல் (ஜனவரி 2019)
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	128
விலை	:	200

அன்பு காணிக்கை

எம்.ஜி.ஆர். உடன் அன்னையாக, மனைவியாக, காதலியாக, தங்கையாக, குழந்தையாக நடித்த பெண்களுக்கு இந்நூல் அன்பு காணிக்கை.















நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழிபெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஒங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டார். 1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Eco Vision and Mission, Neuro Ophthalmology Articles போன்ற பனுவல்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணை பதிப்பாசிரியராக [Associate editor] பணியாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியை தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் இன்று மூன்று பாகங்களாக வெளிவந்துள்ளது. அங்கு வெளிநாட்டு மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1987 முதல் எபிரேய தமிழ் அகராதி; கிரேக்க தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து பல ஆண்டுகள் தீவிரமாக பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி,

மதுரை அமெரிக்கன் கல்லூரிகளிலும் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராக பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்க பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழிபெயர்ப்பாளராகவும் தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றியபோது அங்கு வந்த வெளி மாநிலம் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த கண் மருத்துவர்களுக்கு தமிழ் கற்பிக்க ஒரு பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்த பாட நூல் அங்கு பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்கு செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க ஒரு ஆங்கில பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் ஆங்கிலமும் தமிழும் கற்பித்தார். தற்போது மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கிறார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்ட்டீஸ் என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக பற்றி நிறைய தெரிந்து வைத்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர் பற்றிய தகவல்களை நிறைய தொகுத்து வைத்திருந்தார். மொழியின் கலையும் பண்பாடும் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலை உருவாக்கியவிதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிய அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களை பார்க்க திரையரங்குக்கு அழைத்து சென்றார். திரை அரங்கில் ரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து போய் எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும்

பேராசிரியை ஒருவரும் ஆராய்ச்சி செய்ய தொடங்கினர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றை தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர் பற்றி நூறு கட்டுரைகளுக்கு தகவல் சேகரித்து வைத்திருக்கும் இவர் விகடன்.காமில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இதழில் எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி என்ற பெயரில் 16 கட்டுரைகளை வெளியிட்டார். அதனை தொடர்ந்து பெண்கள் போற்றும் பெருந்தலைவர் எம்.ஜி.ஆர். என்ற பெயரில் ஒரு கட்டுரை தொடரை அதே இணைய இதழில் எழுதி வருகிறார். எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஒரு நூல் எழுதும் முயற்சியில் தகவல்களை திரட்டி வருகிறார்.

எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுதவேண்டும் என்பது இவர் இலட்சியம். இவர் எம்.ஜி.ஆர் குறித்து மூன்று நூல்கள் வெளியிட்டுள்ளார். அவை வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும். 2.எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம், 3.எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகளை விளக்கும் சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா, 4. வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட 5. மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர், ஆறாவதாக "எம்.ஜி.ஆர் ஒரு ஜீவ நதி" என்ற இந்நூல் வெளிவந்துள்ளது. அடுத்ததாக ஏழாவதாக "கலியுகப்போராளி எம்.ஜி.ஆர். என்னும் நூல் வரவுள்ளது.

இவர் எழுதிய சிறுகதைகள் இணைய இதழ்களில் வெளிவந்தன. இப்போது நூலாக தொகுக்கப்பட்டுள்ளன.

உள்ளடக்கம்

1. எம்.ஜி.ஆர். படங்களில் அண்ணன் தங்கை பாசம்

எம்.ஜி.ஆரின் ரசிகர்கள் அவரை நேரில் பார்க்கும்போது அண்ணே என்று தான் அழைப்பார்கள். பல நடிகர், நடிகைகளும் அவரை அண்ணே என்று அழைப்பதுண்டு. தெலுங்கு சூப்பர் ஸ்டாரும் முன்னாள் முதல்வருமான என்.டி.ஆர்., எம்.ஜி.ஆரை அண்ணன்காரு என்று அழைப்பார். கன்னட சூப்பர் ஸ்டார் ராஜ்குமார் எம்.ஜி.ஆரின் மீது நீங்காப் பற்றுடையவர் அவரும் எம்.ஜி.ஆரை அண்ணா என்று தான் அழைப்பார். கட்சிக்காரர்களும் அவரை அண்ணே என்று தான் அழைப்பார்கள். படங்களில் நகைச்சுவை நடிகர்கள் எம்.ஜி.ஆரை அண்ணே என்று அழைக்கும் படங்கள் பல உண்டு.

ஜோதி பிரபாவின் கடிதம்

எம்.ஜி.ஆர் பெண்களின் மதிப்பையும் அன்பையும் பெற்ற மக்கள் தலைவராக விளங்கியது பற்றி அறிவதற்கு ஒரு பானைக்கு ஒரு சோறு பதம் போல ஒரு சகோதரியின் கடிதம் காணக் கிடைக்கிறது. அவர் சத்யா ஸ்டூடியோவில் வேலை பார்த்த ஒரே பெண் ஊழியர். எம். ஜி. ஆர். அண்ணா திமுக ஆரம்பித்த பிறகு அவருக்கு நிறைய போன்கால்கள் வந்ததனால் அதனை கவனித்துக்கொள்ள ஒரு பெண்ணை டெலிபோன் ஆபரேட்டராக நியமித்தனர். அவர் பெயர் ஜோதி பிரபா. அவர் சினேகிதி என்ற மகளிர் இதழுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

எம்.ஜி.ஆர். முதல்வராவதற்குப் பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு சத்யா ஸ்டூடியோவில் பணிக்கு சேர்ந்தார். அங்கு 14

வருடங்கள் வேலை பார்த்த தன் அனுபவத்தில் எம்.ஜி.ஆரை பற்றி அறிந்துகொண்ட செய்திகளை தொகுத்து ஒரு கடிதம் வாயிலாக கூறியிருந்தார். அந்த கடிதத்தில் குறிப்பிட்டு இருக்கும் சில முக்கியமான விஷயங்களை இங்கு பகிர்ந்து கொள்வோம். எந்த நிலையிலும் அதிகார தோரணையுடன் இருக்கமாட்டார். ஆடம்பரமாக நடந்து கொள்ள மாட்டார்.

சத்யா மூவிஸின் டெய்லர் ஒருவர் மைசூரில் இறந்துவிட்ட போது அவருடைய மூன்று பெண் குழந்தைகளுக்கும் எம்.ஜி.ஆர். எவ்வித விளம்பரமும் இன்றி திருமணம் முடித்து வைத்தார். அவர் சத்யா ஸ்டூடியோவில் இருப்பதாகத் தெரிந்தால் அங்கு நிறைய குருவிக்காரர்கள் நரிக்குறவர்கள் அவரை பார்ப்பதற்காக வந்துவிடுவார்கள். அவ்வாறு வரும்போது ஒருநாள் வாயிற்காவலாளி அவர்களை வெளியேற்ற முனைந்த போது இந்த தகவல் தெரிந்து எம்.ஜி.ஆர். உடனே காவல்காரரைச் சத்தம் போட்டு அந்த குருவிக்காரர்களையும், நரிக்குறவர்களையும் உள்ளே வரவழைத்து அவர்களோடு பேசி சிறிது நேரம் இருந்துவிட்டு போட்டோ எடுத்துக்கொண்டு பிறகு அவர்களுக்கு பணம் கொடுத்து அவர்களுக்கு காபி டிபன் கொடுத்து அனுப்பி வைத்தார். தனது அம்மாவின் நினைவு நாள் அன்று மௌன விரதம் இருக்கும் அவர் தன்னுடைய கழுத்தில் அம்மா படம் பொறித்த டாலரை அணிந்து இருப்பார். தினமும் அந்த படத்துக்கு சந்தனம் தொட்டு வைத்து பிறகு தன் பனியனுக்குள் அணிந்து கொள்வார். பெரிய விருந்துகள் அங்கு நடக்கும் போது அவர் சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு ஒவ்வொருவர் சாப்பிடுவதையும் பார்த்து அவர்களிடம் அன்பாக பேசி நிறைய சாப்பிடுங்கள் என்று சொல்வார்.

ஒருமுறை ஜோதி பிரபா டெலிபோனில் கருணாநிதி பேசினார் என்று சொன்னபோது எம்.ஜி.ஆர். அவ்வாறு சொல்லக்கூடாது கலைஞர் என்றுதான் அவரை அழைக்க வேண்டும் என்று திருத்தி இருக்கிறார். வயதானவர்கள் ஏழையாக இருந்தாலும் பணக்காரர்களாக இருந்தாலும் அவர்களிடம் அவர் மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்வார். மற்றவர்களும் மரியாதையுடன் நடக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவார்.

ஒரு முறை அவர் வீட்டில் ஒரு பிறந்த நாள் விழா ஏற்பாடு செய்திருந்த போது கேக் வெட்டுவது மெழுகுவர்த்தியை ஊதி அணைப்பதும் மேலைநாட்டு பண்பாடு அதை நாம் செய்யக்கூடாது. எரிகின்ற விளக்கை ஊதி அணைப்பது சரியல்ல. எனவே விளக்கை ஏற்றி வைத்து கடவுளை வணங்கி கோவிலுக்கு போய்விட்டு வந்து பெரியோர்களிடம் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் வாங்கிக் கொண்டு தன்னால் இயன்ற உதவிகளை இல்லாதவர்களுக்கு செய்ய வேண்டும். அப்படித்தான் பிறந்தநாள் கொண்டாடவேண்டும் என்று எடுத்துக் கூறினார்.

ஜோதி பிரபாவின் சித்தப்பாவின் பெயர் ராமலிங்கம். அவர் தான் ஜோதி பிரபாவை எம்.ஜி.ஆரின் சத்யா ஸ்டூடியோவில் வேலைக்குச் சேர்த்துவிட்டார். எம்.ஜி.ஆர் இராமலிங்க வள்ளலார் மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்ததால் ராமலிங்கம் என்று பெயரிட்டு அழைக்காமல் அவரை செல்லமாக வள்ளலார் என்றே அழைத்து வந்தாராம். இவை அனைத்தும் அவருடைய நீண்ட கடிதத்தில் இருந்து எடுக்கப்பட்ட சாராம்சம் ஆகும். இதுபோல் நிறைய சம்பவங்கள் நமக்கு கடிதங்கள், ஏராளமாக பத்திரிகைகள் வாயிலாகவும் பேட்டிகள் வாயிலாகவும் கிடைக்கின்றன. இந்த சினேகிதி பத்திரிகையை வாசிக்கும் பெண்கள் ஜோதி

பிரபாவின் கடிதத்தின் மூலமாக எம்.ஜி.ஆரை பற்றி நிறைய தெரிந்து கொள்வார்கள். ஏற்கனவே எம்.ஜி.ஆரை பற்றி தெரிந்தவர்கள் அவருடைய மனிதாபிமானம் அன்பு அடக்கம் குறித்து அறிந்து இன்னும் மகிழ்ச்சி அடைவர்.

எம்.ஜி.ஆரின் அன்பும் அடக்கமும்

பெண்களின் மனதை கவர்ந்தவராக அவர்களின் மதிப்பை பெற்றவராக எம்.ஜி.ஆர். விளங்குவதற்கு முக்கிய காரணம் அவரிடத்திலிருந்த அன்பும் அடக்கமும் பெண்கள்பால் அவர் வைத்திருந்த மரியாதையும் ஆகும். எம்.ஜி.ஆர். எந்த நிலையிலும் தன்னை பற்றி பெரிய அளவில் தம்பட்டம் அடித்துக் கொண்டதில்லை. எம்.ஜி.ஆர். தன்னுடைய படங்களில் அன்பான அண்ணனாக நடித்திருப்பதை பார்த்து இளம்பெண்கள் தனக்கு இப்படி ஒரு அண்ணன் இருந்திருந்தால் நன்றாக இருக்குமே என்று நினைக்க வைத்திருப்பார். இதற்கு முக்கிய காரணம் மற்ற நடிகர்கள் படங்களில் அண்ணனும் தங்கையும் பாசமாக வாழ்ந்தும் துன்பம் அனுபவிப்பர். ஒருவரோ அல்லது இருவருமோ செத்து போவார்கள். ஆனால் எம்.ஜி.ஆர். படத்தில் அப்படி அமைய கிடையாது எம்.ஜி.ஆர். தன் தங்கைகளை வாழ வைப்பார், சாக விட மாட்டார். இது தான் ஒரே வித்தியாசம்.

படங்களில் வரும் தங்கைகள்

எம்.ஜி.ஆருடைய படங்களில் பெரும்பாலும் அப்பா அண்ணன் தம்பி தங்கை போன்றோர், அதிக படங்களில் இருக்க மாட்டார்கள். தங்கை கதாபாத்திரங்கள் இடம் பெற்ற படங்கள் என்றால் என் தங்கை [31-5-1952] அரசிளங்குமரி [11-1-1961], காஞ்சித்தலைவன் [26-10-1963], தேர்த்திருவிழா [23-2=1908], கணவன் [15-8-68], பணக்கார குடும்பம் [23-4-64], தனிப்பிறவி [16-9-1966] என் அண்ணன் [12-5-1970] எங்கள் தங்கம் [9-10-1970] சங்கே முழங்கு

[4-2-1972] நான் ஏன் பிறந்தேன் [9-6-1972] இதயவீணை [20-10-1972] நினைத்ததை முடிப்பவன் [9-5-1975] ஆகியவற்றை கூறலாம்.

தங்கையாக விஜயகுமாரி

காஞ்சித்தலைவன், தேர்த்திருவிழா, கணவன் ஆகிய மூன்று படங்களிலும் விஜயகுமாரி எம்.ஜி.ஆருக்கு தங்கையாக நடித்து இருப்பார். இவற்றில் காஞ்சித் தலைவனில்

"ஒரு கொடியில் இரு மலர்கள் மலர்ந்ததம்மா; மலர்ந்ததம்மா
அண்ணன் தங்கை உறவு முறை வளர்ந்ததம்மா வளர்ந்ததம்மா"

என்ற பாடல் பலரின் மனம் கவர்ந்த பாடல் ஆகும். தேர்த்திருவிழாவில் சினிமா பட இயக்குனர் முத்துராமனை நம்பி தன் பெண்மையை பறிகொடுத்த தன் தங்கையை வாழவைப்பதற்காக சென்னைக்குப் போய் அந்த இயக்குனரை கண்டுபிடித்து இருவரையும் சேர்த்து



வைப்பதுதான் முக்கிய கதையாகும். கணவன் படத்தில் திருமணமாகாத விஜயகுமாரி ஒரு அனாதைக் குழந்தையை எடுத்து வளர்க்க போய் அவரே அக்குழந்தையின் தாய் என்று தவறாக நினைத்து பெண் பார்க்க வந்தவர்கள் திரும்பிப் போய் விடுவார்கள். அந்த அனாதைக் குழந்தையை அதனுடைய உண்மையான தாயிடம் ஒப்படைத்துவிட்டு முதலில் பெண் பார்க்க வந்தவர்களை எம்.ஜி.ஆர். அழைத்து வந்து உண்மையை எடுத்துச் சொல்லி அந்த மாப்பிள்ளையோடு தன் தங்கைக்கு திருமணத்தை முடித்து வைப்பார் என்றார்.

எம்.ஜி.ஆரோடு விஜயகுமாரியை ஜோடி சேர்க்கலாம் என்று தயாரிப்பாளர்கள் கருதிய போது எம்.ஜி.ஆர். என் தம்பி எஸ்.எஸ்.ஆர். விஜயகுமாரியை ஆசை ஆசையாக காதலித்து திருமணம் செய்திருக்கிறார் அதனால் அவருடன் ஜோடியாக நடிக்க கூடாது என்று சொல்லிவிட்டார். நடிப்பு என்றாலும் அதிலும் ஒரு கன்னியம் இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தவர் எம்.ஜி.ஆர். இதை விஜயகுமாரியும் ஒரு டிவி நிகழ்ச்சியில் சொல்லியிருந்தார். அதனால் அவருக்கு தங்கை வாய்ப்பு அதிகமாகக் கிடைத்தது. மூன்று படங்களில் எம்.ஜி.ஆருக்கு தங்கையாக நடித்திருந்தார். விவசாயி படத்தில் கே.ஆர்.விஜயாவுக்கு அக்காளாக நடித்திருந்தார்.

எம்.ஜி.ஆர். படத்தில் தங்கைகளின் பொது இயல்பு

பொதுவாக எம்.ஜி.ஆர். படங்களில் அவரது தங்கைமார், மிக நல்லவர்களாக அமைதியானவர் அன்பானவர் அண்ணன் மீது மிகுந்த பாசம் உடையவர் மற்றும் அண்ணனை முழுக்க முழுக்க நம்பி இருப்பவர்களாகவே காட்டப்படுவார்கள். இதற்கு விதிவிலக்காக அமைந்த ஒரே ஒரு படம் நான் ஏன் பிறந்தேன். அதில் தங்கையாக நடித்திருக்கும் ஜி. சகுந்தலா மாற்றாந்தாயின் மகளாக

வருவார். அவர் வாயாடியாக அண்ணன் அனுப்பி வைக்கும் பணத்தை திருடிக்கொள்ளும் திருடியாக உணவுப் பொருட்களை ஒளித்து வைத்துவிட்டு தன் அண்ணன் குழந்தைகளுக்கு தன் தம்பி தங்கைகளுக்கும் தராத ஒரு சுயநலக்காரியாக நடித்திருப்பார். இந்த ஒரு தங்கையை அதுவும் மாற்றாந்தாயின் மகளாக வரும் இவரைத் தவிர மற்ற அனைத்து படங்களிலும் எம்.ஜி.ஆரின் தங்கை கதாபாத்திரம் ஒரு முன்மாதிரி பாத்திரமாகவே அமைக்கப்பட்டிருக்கும்.

முன்மாதிரி இளம்பெண்ணாக வரும் தங்கைகள்

எம்.ஜி.ஆரின் தங்கை என்றால் அவள் ஒரு முன்மாதிரியான இளம் பெண்ணாகவே தன் படத்தில் அமைவதைத்தான் அவர் விரும்பினார். அடங்காப்பிடாரியான பெண் கதாபாத்திரங்களை அவர் தன் படத்தில் அமைப்பது கிடையாது. மிக அரிதாக ஓரிரு படங்களில் ஆரம்பத்தில் கதாநாயகிகள் அப்படி இருப்பதுண்டு. பொதுவாக எம்.ஜி.ஆர். படத்தில் கொலைகாரி கொள்ளைக்காரி போன்றவர்களை கெட்ட குணங்களும் கேவலமான எண்ணங்களும் கொண்ட பெண்களை பார்க்க இயலாது. இதுவே அவர் பெண்ணின் பெருமையை நிலை நிறுத்த வேண்டும் என்று நினைப்பதற்கான ஒரு சான்றாக அமைகிறது. இதய வீணை மற்றும் இதயக்கனியில் வில்லிகளாக வரும் பெண்களைக் கூட அவர் வெறுக்கத்தக்க வகையில் அமைக்கவில்லை. கெட்டவர்கள் என்று நினைக்கும்படியாக மட்டுமே அமைத்திருந்தார்.

முன்மாதிரி அண்ணனாக எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். படங்களில் வரும் தங்கைகள் விதவை கிடையாது. வாழாவெட்டியாக வந்திருந்தாலும் எம்.ஜி.ஆர். முயன்று அவர்களை வாழ வைத்து விடுவார். கணவனோடு

சேர்த்து வைத்து விடுவார். அதுவே அவரது முதல் கடமையாக இருக்கும். எனவே ஒரு குடும்பத்தில் தன்னை நம்பியிருக்கும் தாயையும் தங்கையையும் காப்பாற்ற வேண்டியது அவர்களை மகிழ்ச்சியாக வாழ வைக்க வேண்டியது ஒரு ஆணின் கடமையும் பொறுப்பும் ஆகும் என்பதை அவர் தன் படங்களில் ஆழமாக வலியுறுத்தினார். ரசிகர்களுக்கு எம்.ஜி.ஆரை போன்ற ஒரு அண்ணன் இருந்திருந்தால் நம்முடைய வாழ்க்கை சிறக்கும் மகிழ்ச்சியாக இருக்கும் என்ற எண்ணம் ஆரம்பத்திலிருந்தே தோன்றிவிட்டது.

கொடுமைக்காரப் பெண்கள் கிடையாது

எம்.ஜி.ஆர். படத்தில் தங்கையை கொடுமைப்படுத்தும் கொடுமைக்கார அண்ணி “மூலி அலங்காரிகள்” கிடையாது. சொத்து பிரச்சனை செய்யும் அக்காள் தங்கை கிடையாது. சொத்துக்காக கொலை செய்யும் பெண், சண்டையிடும் பெண், குடும்பத்தில் கோள் மூட்டும் எந்தப் பெண்ணும் எம்.ஜி.ஆர். படத்தில் இருக்கமாட்டார். நடத்தை கேடு உள்ள தங்கைகளும் கிடையாது. எம்.ஜி.ஆர் குடும்பத்தைச் சேர்ந்த வேறு பெண்களும் மோசமானவர்களாக இருக்கமாட்டார்கள்.

என் தங்கை படத்தில் எம்.ஜி.ஆர் .

எம்.ஜி.ஆர். படத்தில் என் தங்கை தவிர வேறு எந்தப் படத்திலும் தங்கைமார் இறந்து போகவில்லை. இது மிகப் பழைய படம். பொதுவாக எம்.ஜி.ஆர். படங்களில் தங்கைமார்களை வாழ வைக்க வேண்டும் என்பதே எம்.ஜி.ஆரின் கொள்கையாக இருக்கும். எம்.ஜி.ஆர். படத்தில் அவருடைய குடும்பத்தில் பெண்களுக்குள் சண்டை போட்டுக் கொள்வது கிடையாது மாமியார்-மருமகள் சண்டை கூட இருப்பதில்லை.

என் அண்ணன் படத்தில் வரும் மாமியார் மருமகளை தன் மகள் போல பாவிப்பார் தன் கணவனை கொன்றவனின் மகள் என்று தெரிந்ததும் அந்தப் பெண்ணை விலக்கி வைத்து விடுவார். இது மாமியார் மருமகள் பிரச்சினை கிடையாது. கணவனை கொன்ற கொலைகாரனின் மகள் என்பதனால் அந்தப் பெண்ணை விலக்கி வைத்து விடுவார். கொடுமைக்கார மாமியார் படத்தில் இல்லை. படத்தில் எம்.ஜி.ஆரால் தங்கைக்கு நல்ல வாழ்க்கை அமையும். எனவே படம் பார்க்கும் இளம்பெண்களுக்கு எம்.ஜி.ஆர். மீது மிகுந்த நம்பிக்கையும் நன்மதிப்பும் ஏற்பட்டது.

இதய வீணை என்ற ஒரு படத்தில் மட்டும் தங்கையின் கணவராக நடித்த சிவகுமார், எம்.ஜி.ஆர். தன் சொந்த மைத்துனர் என்பது தெரியாமல் அவர் மீது சந்தேகப்படுவார். அதற்கான சூழ்நிலைகளும் படத்தில் இருக்கும். சங்கே முழங்கு படத்தில் எம்.ஜி.ஆர். கொலைகாரர் என்ற செய்தியை அறிந்த பிறகு அவர் தங்கையின் கணவர் சொத்துக்கள் கிடைக்காது என்ற காரணத்தினால் எம்.ஜி.ஆரின் தங்கைக்கு வீட்டு செலவுக்கு பணம் கொடுக்காமல் அலட்சியப்படுத்துவார். பின்பு உண்மை தெரிந்த பிறகு மன்னிப்பு கேட்டு தன் மனைவியை நல்ல முறையில் வைத்து குடும்பம் நடத்துவார்.

வறுமையிலும் செம்மையாக வாழும் தங்கைமார்

எம்.ஜி.ஆர். படங்களில் வரும் தங்கைமார் பசியாலும் நோயாலும் வாடினாலும் அவர்கள் நன்னடத்தையும் அன்பாலும் அறத்தாலும் ரசிகர்களின் மதிப்பை பெற்றவர். சங்கே முழங்கு, நான் ஏன் பிறந்தேன், படங்களில் வரும் இ.வி சரோஜா, ஜெய கௌசல்யா, குட்டி பத்மினி போன்றோர் மிகச் சிறப்பாக தங்கை கதாபாத்திரத்தில் நடித்திருப்பர்.

தங்கையின் காதலும் திருமணமும்

தங்கையின் திருமணம் பல படங்களில் ஒரு பிரச்சனையாக காட்டப்பட்டிருக்கும். தங்கையின் காதல் அதைத் தொடர்ந்து வரும் திருமண பிரச்சனை திருமணத்துக்கு பின்பு சேர்ந்து வாழ முடியாமல் கணவரோடு ஏற்படும் பிணக்கு போன்றவை நான்கைந்து படங்களில் முக்கிய சிக்கலாக இடம்பெற்றதுண்டு.

அரசிளங்குமரி பத்மினி வேலைய்யா என்பவனை ஒரு போர்வீரனாக நினைத்து காதலித்த பின்பு அவன் அவளை கைவிட்டுவிட்டு அந்த நாட்டின் அரசிளங்குமரியை மணந்துகொண்டு நாட்டின் அரசனாக வேண்டும் என்று திட்டம் தீட்டுவான். அப்போது எம்.ஜி.ஆர். புகுந்து தளபதியாக இருக்கும் அவனை அழைத்து வந்து தன் தங்கையுடன் சேர்ந்து வாழ வைப்பார். இதில் பத்மினியின் ஜோடியாக நம்பியார் நடித்திருப்பார்.

கெட்டவர்களிடம் இருந்து தங்கை கணவர்களை மீட்டல்

தனிப்பிறவி படத்தில் எம்.ஜி.ஆர். தன் தங்கையான ரேவதியை அவர் காதலிக்கும் ஆனந்தனுக்கே திருமணம் செய்து வைத்துவிடுவார். அதுவரை தாடி வளர்த்து வருவார். தங்கை திருமணம் முடிந்ததும் எடுப்பேன் என்பார். பின்பு எடுத்துவிடுவார். பின்பு தன் தங்கையின் கணவன் கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்து இருப்பதை அறிந்த எம்.ஜி.ஆர். அவரை அந்த கூட்டத்திலிருந்து விலக்கி வெளியே கொண்டுவர அரும்பாடு படுவார். தங்கைக்கு தெரியாமலேயே இந்த காரியத்தை அவர் செய்து முடிப்பார்.

எங்கள் தங்கம்

எங்கள் தங்கம் படம் எம்.ஜி.ஆர்., கருணாநிதியின் வீட்டுக்கடனை அடைப்பதற்காக இலவசமாக நடித்து

கொடுத்த படமாகும். இப்படத்திலும் கண் தெரியாத தங்கை புஷ்பலதாவின் கணவனாக வரும் ஏ.வி.எம். ராஜன் பூட்டு திறப்பதில் கில்லாடி என்பதால் கொள்ளைக் கூட்டம் அவரை அழைத்து பூட்டுகளை திறக்க சொல்வதை அறிந்த எம்.ஜி.ஆர். அவர் செய்த தவறுக்கு தான் பழி ஏற்றுக் கொண்டு திருடன் என்ற பெயரில் ஒளிந்து மறைந்து வாழ்ந்து பின்பு உண்மையை கண்டறிந்து தன் தங்கையையும் தங்கை கணவரையும் சேர்த்து வைப்பார்.

தனிப்பிறவி, எங்கள் தங்கம் ஆகிய இரண்டு படங்களிலும் சந்தர்ப்பவசத்தால் தங்கையின் கணவர்கள் கெட்டவர்களிடம் சிக்கிக் கொள்வார்கள். அப்போது அவர்களை மீட்டு கொண்டு வந்து தங்கையின் கண்ணீரைத் துடைப்பது அன்பான அண்ணனின் பணி என்ற பொறுப்பை நிறைவேற்றி காட்டுவார்.

தந்தைக்கும் தங்கைக்கும் மறு வாழ்வு

என் அண்ணன் படத்தில் செய்யாத கொலைக்கு பொறுப்பேற்று சிறையில் இருக்கும் தன் தந்தையின் மீது சுமத்தப்பட்ட கொலைப்பழியை நீக்கி உண்மையான குற்றவாளியை கண்டுபிடிப்பார். தன் தங்கையின் மாமனாரை கொன்றவர் தன் தகப்பன் அல்ல என்பதை நிரூபித்து தன் தங்கையை மீண்டும் அவள் மாமியார் வீட்டிற்கு போய் வாழ வைப்பார் கணவனோடு இணைந்து வாழ வைப்பார். இதில் தந்தையின் மீதுள்ள கொலைப்பழியும் நீக்கப்பட்டது; தங்கையின் கண்ணீரும் துடைக்கப்பட்டது. தங்கை மீண்டும் தன் கணவனோடு சேர்ந்து வாழ்கிறார்.

இந்தப் படம் நாகேஸ்வரராவ் நடித்து தெலுங்கில் வெளிவந்த ஒரு படத்தின் மறு படைப்பாகும். பொதுவாக தெலுங்கில் என்.டி.ஆர். நடிக்கும் படங்களை தமிழில்

எம்.ஜி.ஆர். நடித்து படைப்பாக வரும் ஆனால் இந்தப் படம் அண்ணன் தங்கை பாசத்தை விளக்கும் ஒரு வித்தியாசமான படமாக அமைந்தது.

காமெடியனுக்கு ஜோடியான தங்கை

பணக்கார குடும்பம் படத்தில் வரும் தங்கையான மணிமாலா படத்தின் ஆரம்பத்தில் தன் அப்பா இரண்டாவது திருமணம் செய்து கொள்ளப் போவதை அறிந்ததும் கோபித்துக் கொண்டு கிளம்பும் அண்ணனோடு சேர்ந்து இவரும் வீட்டைவிட்டு வெளியேறி விடுவார். இருவரும் நாகேஷின் வீட்டில் தங்கி இருப்பார்கள். மணிமாலா நாகேஷை காதலிக்க தொடங்கி விடுவார். எம்.ஜி.ஆர். தங்கையின் திருமணத்தையும் நடத்தி வைப்பார். சரோஜாதேவி எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக இப்படத்தில் நடித்திருப்பார். தங்கை மணிமாலா சரோஜாதேவியின் கல்லூரி தோழியாக நடித்தார்.

படத்தில் சரோஜாதேவியின் குழுவுக்கும் மணிமாலாவின் குழுவுக்கும் கல்லூரி நாட்களில் நடக்கும் சடுகுடு போட்டி அழகாக படம் பிடிக்கப்பட்டிருக்கும்.

வாடியம்மா வாடி வண்டாட்டம் வாடி
ஆத்தங்கர பக்கத்துல காத்திருப்பேன் வாடி

என்ற பாடல் எல்லோரது மனம் கவர்ந்த பாடல் ஆகும். இதில் மணிமாலா தமிழ் நாட்டைப் பற்றியும் சரோஜாதேவி கர்நாடகாவை பற்றியும் பாடுவதாக பாடல் வரிகளை கவிஞர் எழுதியிருப்பார்.

காவிரிப்பூம்பட்டினத்தை பார்த்து இருக்கியாடி
கண்ணகி வீடு எங்கள் வீட்டுப் பக்கம் தாண்டி

என்று மணிமாலா பாடவும் அதற்கு பதிலாக சரோஜாதேவி

காவேரி பொறந்தது எங்க ஊர் தாண்டி
காலால புலிகளை மிதிச்சவ தாண்டி
சீரங்க பட்டணத்தை பார்த்து இருக்கியாடி
திப்பு சுல்தான் பிறந்தது எங்க ஊர் தாண்டி

என்று கர்நாடகாவின் பெருமைகளை சரோஜாதேவி பாடுவதாக அமைந்திருக்கும் இந்த பாடல் ரசிகர்களால் மிகவும் பாராட்டப்பட்ட பாடலாகும். இப்படத்தில் தங்கை கதாபாத்திரத்தால் எவ்வித துன்பமும் ஏற்படவில்லை. மகிழ்ச்சியான நகைச்சுவை ஜோடியாக மணி மாலா, நாகேஷ் இந்த படத்தில் இடம் பெற்றார்கள்.

என் தங்கையின் கதையும் எம்.ஜி.ஆரின் இரக்க குணமும்

1952 இல் வெளிவந்த என் தங்கை என்ற படம் 350 நாள் ஓடிய படம். உலகம் சுற்றும் வாலிபன் படத்திற்கு அடுத்தபடியாக அதிக நாள் ஓடிய படம். இப்படத்தில்



எம்.ஜி.ஆருக்கு தங்கையாக நடித்தவர் பாவாடை சட்டை அணிந்து இருக்கும் சிறு பெண்ணாக வந்த இ. வி சரோஜா ஆவார். இவருக்கு பார்வை கிடையாது. பார்வையற்ற பெண்ணான சிறுமியை அவள் வாழ்நாள் முழுக்க எம்.ஜி.ஆர். வறுமையில் பாதுகாத்து கொண்டுவருவதாக அமைந்திருக்கும். தங்கை இறந்து போவதாக அமைந்த ஒரே படம் இதுதான். அதுவும் தங்கை பசியால் இறந்து போவாள்.

தங்கைக்கு உணவு வாங்கி வரும் வேளையில் எதிரே வரும் ஒருவர் “ஐயா பசிக்குது” என்று கையேந்தி கேட்கும் பொழுது எம்.ஜி.ஆர். தன் கையிலிருந்த உணவை அவரிடம் கொடுத்து விடுவார். கொடுத்துவிட்டு வேறு உணவு வாங்க காசில்லாமல் திரும்பி தங்கையிடம் ஓடி வருவார். தங்கை பசியால் இறந்து விடுவாள். பசி பசி என்று கதறிய தங்கைக்காக வாங்கி வந்த உணவை தன்னலம் கருதி அவளுக்கு கொண்டு போகாமல் எதிரே வந்தவர் பசி என்று சொல்லியதும் அவரிடம் கொடுத்து விடும் காட்சி நெஞ்சை தொடும் காட்சியாகும் காண்பவர் உள்ளத்தை நெகிழச்செய்யும் காட்சியாகும்.

என் தங்கை படம் எம்.ஜி.ஆரின் ஆரம்ப நாட்களில் வந்தது என்றாலும் அதுவும் கூட எம்.ஜி.ஆரின் கொடைத் தன்மையை பரப்புவதற்கு அச்சாரம் இட்டது. இப்படத்தில் எம்.ஜி.ஆரின் பெயர் ராஜேந்திரன் அவருடைய அண்ணன் எம்ஜி சக்கரபாணி எம்.ஜி.ஆரின் சொத்தை அபகரிக்கும் வில்லன் சித்தப்பாவாக நடித்திருப்பார். அதனால் இவர் குடும்பம் வறுமை பசி பட்டினி என்று அவதிப்படும். இப்படம் வந்த போது இவருடைய அண்ணனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு எம்.ஜி.ஆர். என் தங்கை படத்தின் ராஜேந்திரன் என்று தன் கதாபாத்திர பெயர் சூட்டி மகிழ்ந்தார். எம்.ஜி.ஆரின் அண்ணன்

குழந்தைகளுக்கெல்லாம் எம்.ஜி.ஆர். தன் படத்தின் பெயர்கள் சூட்டினார் இலங்கையில் இப்படம் ஒரு வருடம் ஒடியதாக சொல்வார்கள். அங்குள்ள தமிழர்களின் குடும்ப வாழ்க்கையை இப்படம் எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது.

இதே வருடத்தில் தான் சிவாஜி திரையுலகில் பராசக்தி மூலம் புகுந்தார். அந்தப்படமும் நூறு நாட்கள் ஒடி சாதனை புரிந்தது. அந்த சமயத்தில் அண்ணன் தங்கை பாசம் சொல்லும் கதைகள் கிராமப்புறங்களில் நல்லதங்காள் கதையை நினைவுபடுத்துவதாக அமைந்திருந்ததால் வெற்றி நடை போட்டன.

இன்னொரு மாற்று திறனாளி தங்கை

எம்.ஜி.ஆர். நடித்த நினைத்ததை முடிப்பவன் இந்தியில் வந்த சச்சா ஜூட்டா [உண்மையும் பொய்யும்] என்ற படத்தின் மறு படைப்பாகும். இப்படத்தில் மாற்றாந்தாயின் கொடுமைக்கு ஆளான மாற்றுத்திறனாளி தங்கையாக வரும் சாரதா மிக அருமையாக நடித்திருப்பார். அவருடைய நடிப்பின் சிறப்பை கண்ட எம்.ஜி.ஆர். படம் முழுவதும் அவருக்கு காட்சிகள் அமையும்படி அவருடைய கதாபாத்திரத்தை அதிகப்படுத்தும்படி இயக்குனரிடம் எடுத்துக் கூறினார்.

[மேலும் இந்தப் படம் முடிந்ததும் அவருக்கு சொந்த அன்பளிப்பாக சில ஏக்கர் நிலம் கொடுத்ததாகவும் அந்த நிலத்தை எக்காரணம் கொண்டும் தான் உயிரோடு இருக்கும் வரை விற்கக் கூடாது என்றும் சொந்தப் படம் எடுக்கக் கூடாது என்றும் இரண்டு உறுதிமொழிகளை அவரிடம் பெற்றுக்கொண்டதாகவும் அந்த இடத்தை இப்போது அவர் விற்பதற்கு ஆள் தேடிக் கொண்டிருப்பதாகவும் ஒரு நிலத்

தரகர் தெரிவித்தார் இந்த செய்தியில் எத்தனை சதவீதம் உண்மை என்பது தெரியாது ஆனாலும் இது ஒரு தகவல்].

இப்படத்தில் வரும் தங்கை சாரதாவுக்கு ஜோடி நம்பியார். மற்ற படங்களில் வில்லனாக வரும் நம்பியார் நினைத்தை முடிப்பவன் படத்தில் நல்லவராக நடித்திருப்பார். போலீஸ் அதிகாரியாக நடித்திருப்பார்.

தங்கையின் திருமண வாழ்த்து பாடல்கள்

எம்.ஜி.ஆர். படங்களில் இதயவீணை படத்திலும் நினைத்ததை முடிப்பவன் படத்திலும் இரண்டு திருமண வாழ்த்து பாடல்கள் இடம்பெற்றன. இதே நிலையில் தன் சொந்த தங்கையான லட்சுமியின் திருமணத்திற்கு நேரடியாக வர இயலாமல் ஒரு சாமியாரை போல மாறுவேடம் பூண்டு வந்து,

திருவளர்ச்செல்வி மங்கையர்க்கரசி

திருமணம் கொண்டாள் இனிதாக

இருவிழி போலே இருவரும் இன்று

இல்லறம் காணட்டும் நலமாக

என்ற இப்பாட்டு இன்றைக்கும் திருமண வீடுகளில் தாலி கட்டி முடிந்ததும் பாடப்படுகிறது.

நினைத்ததை முடிப்பவன் படத்தில் நடக்க தடுமாறும் தன் தங்கையை பணத்தாசை பிடித்த மாற்றான் தாயிடம் விட்டு வந்த எம்.ஜி.ஆர். தன் தங்கைக்கு நல்லபடியாக பணம் சேர்த்து திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நகரத்துக்கு வருகிறார். அங்கு யாரோ ஒரு பெண்ணின் திருமணத்தின் போது அந்த மணப் பெண்ணை தன் தங்கையாக கற்பனை செய்து கொண்டு மணமக்களை வாழ்த்திப் பாடுவதாக அமைந்த பாடல்



பூமழை தூவி வசந்தங்கள் வாழ்த்த

ஊர்வலம் நடக்கின்றது

கொஞ்சிடும் வண்ண தங்கையின் முகத்தில்

குங்குமம் சிரிக்கின்றது

இப்பாடல் காட்சி தாம்பரம் ராணுவப்பயிற்சி பள்ளியில் சிறப்பு அனுமதி பெற்று எடுக்கப்பட்டது. எம்.ஜி.ஆர்.

இசைக்கருவி வாசிப்பவராக இருந்ததனால் அங்குள்ள பேண்ட் வாத்திய கோஷ்டி சேர்ந்து அவர்களின் இசை கருவிகளை வாங்கி வாசித்தபடி செல்வார். இந்தப் பாட்டும் இன்றைக்கும் திருமண வீடுகளில் திருப்பூட்டு முடிந்ததும் இசைக்கப்படுகிறது.

தங்கை கதாபாத்திரத்துக்கு கௌரவம் அளிக்கும் வகையில் இப்பாடல்கள் இரண்டும் அமைந்துள்ளான. எம்.ஜி.ஆரே தன் தங்கையின் திருமணத்தில் வந்து வாழ்த்தி பாடுவதாக இப்பாடல்கள் திருமண மண்டபத்தில் ஒலிக்கின்றன.

அக்காள் தம்பி பாசம்

எம்.ஜி.ஆர். நடித்த படங்களில் மூன்று படங்களில் மட்டும் அவருக்கு அக்காள் கதாபாத்திரம் இடம்பெற்றுள்ளது. அந்தப் படங்களிலும் அக்கா கதாபாத்திரம் சோகமாகவே இருக்கும். பெரிய இடத்துப் பெண், எங்க வீட்டு பிள்ளை, ரிக்ஷாக்காரன் ஆகிய படங்களில் அக்காள் கதாபாத்திரங்கள் உள்ளன. இவற்றில் மூன்று அக்காளுமே துன்பப்படுவார்கள். இவர்களின் கண்ணீரை எம்.ஜி.ஆர். துடைப்பதாகக் கதை அமைக்கப்பட்டிருக்கும்.

பெரிய இடத்துப் பெண் படத்தில் படத்தின் தயாரிப்பாளரும் இயக்குனருமான ராமண்ணாவின் அக்கா டி.ஆர்.ராஜகுமாரி எம்.ஜி.ஆரின் அக்காவாக நடித்திருப்பார். இருவருக்கும் சேர்ந்து ஒரிரு காட்சிகள் மட்டுமே உண்டு. அவர் அக்காவை படத்தில் வில்லனாக வரும் கதாநாயகியின் அப்பா எம்.ஆர். ராதா கெடுத்துவிட்டதால் அவர் எம்.ஆர்.ராதாவை குத்திக் கொலை செய்ய வேண்டும் என்ற உணர்வோடு ஒளிந்து வாழ்ந்து கொண்டிருப்பார்.

இந்த உண்மை தெரிந்ததும் அக்காவுக்கு நீதி கிடைக்கும் வரை எம்.ஜி.ஆர். திருமணம் செய்துகொண்ட தன் மனைவி சரோஜா தேவியை விலக்கி வைத்துவிட்டு வில்லனை பழிவாங்கி விட்டு அதன் பின்பு மனைவியை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைப்பார். ஆனால் இவருக்கு பதிலாக இவருடைய அக்காவே வந்து எம்.ஆர்.ராதாவை குத்திக் கொன்று விடுவார்.

ரிக்ஷாக்காரன் படத்தில் எம்.ஜி.ஆரின் அக்காவான ஜீ.சகுந்தலாவை திருமணம் செய்து கொள்வதாக கூறி மேஜர் சுந்தர்ராஜன் ஏமாற்றி விடுவார். சகுந்தலா குழந்தை பெற்ற பின்பு அவருக்கு அசோகன் உணவில் விஷம் வைத்து விடுவார். இதை அறிந்ததும் சகுந்தலா தன் தோழியான பத்மினியிடம் வந்து தன் குழந்தையை கொடுத்துவிட்டு இறந்துபோவார். அந்தக் குழந்தையை வளர்த்து பின்னர் எம்.ஜி.ஆருக்கு திருமணம் செய்து கொடுப்பார். தன் அக்காவை ஏமாற்றிய நீதிபதி மேஜர் சுந்தர்ராஜனை மிரட்டி ஏமாற்றிக் கொண்டிருந்த அசோகனை எம்.ஜி.ஆர். நீதியின் கரங்களில் ஒப்படைப்பார்.

எங்க வீட்டுப்பிள்ளை படத்தில் பூஞ்சோலை ஜமீனின் குழந்தைகளான ராமு எம்.ஜி.ஆரும் அவரது அக்கா பண்டரிபாயும் நம்பியாரின் கைகளில் சிக்கி பயந்து கொண்டு வாழ்ந்து வருவார்கள். அப்போது அவர்கள் இருவரையும் கெட்டவர்களிடம் இருந்து மீட்டு நம்பியாரையும் திருத்தி பூஞ்சோலை எஸ்டேட் பணியாளர்களின் துன்பத்தையும் போக்கி அனைவருக்கும் நல் வாழ்க்கை தருபவராக இன்னொரு எம்.ஜி.ஆர். இளங்கோ வருவார். எம்.ஜி.ஆர். படங்களில் வந்த அக்காள்கள் மூவரும் மிகுந்த துன்பத்தை

அனுபவிப்பவர்களாகவே இருந்தனர். மூவரின் துன்பத்தையும் தீர்த்து வைத்தவர் எம்.ஜி.ஆர்.

நிறைவு

எம்.ஜி.ஆர். படங்களில் வரும் அக்கா தங்கை ஆகியோர் நல்லவர்களாகவே இருக்கின்றனர். எம்.ஜி.ஆரும் குடும்பத்தில் ஒருவராக இருந்து இறுதியில் அவர்களின் வாழ்க்கைக்கு பாதுகாப்பும் மகிழ்ச்சியும் அளிக்கும் பொறுப்பு உடையவராகவே காட்டப்படுகிறார். அக்காள், தம்பி, தங்கை என வரும் கதாபாத்திரப் படைப்புக்கள் தமிழ் ரசிகர்களுக்கு ஒரு முன்மாதிரி படைப்புகளாக இலட்சிய கதாபாத்திரங்களாகவே அமைந்துள்ளன. அவர் தான் மட்டுமல்ல தன் குடும்பத்தினரும் நல்லவர்கள் என்றே தனது படங்களில் சித்திரித்துள்ளார். இதனால் படம் பார்க்கும் ரசிக ரசிகையரும் தம்மை இந்த நல்ல கதாபாத்திரங்களுடன் இணைத்து நோக்குகின்றனர். இதனாலும் எம்.ஜி.ஆரின் செல்வாக்கு பெண்களின் மத்தியில் உயர்ந்த நிலை பெற்றுள்ளது.



2. எம்.ஜி.ஆரின் கூச்ச சுபாவம்

எம்.ஜி.ஆர். அறுபது வயதில் பதினாறு வயது பெண்ணோடு நடிக்கிறார். அவர் தன் வயதுக்கு ஏற்ற கதாப்பாத்திரங்களில் நடிக்க வேண்டும் . இப்படி சிறு பெண்களோடு டூயட் பாடக் கூடாது என்று பல விமர்சனங்கள் வந்த காலத்தில் அவற்றை பொருட்படுத்தாமல் 'நான் திரையில் பார்க்கும் பொது இளமையாக தோன்றுகிறேன்? அது தான் நடிப்பு இருபது வயதுக்காரர் எண்பது வயது கிழவராக நடிப்பதும், அறுபது வயதுக்காரர் இருபது வயதாக நடிப்பதும் நடிப்பு தான். படத்தில் நான் இளமையாக இருப்பதால் தானே ரசிகர்கள் படம் பார்க்கின்றனர். என் படங்கள் வெற்றி வாகை சூடி வசூலை குவிக்கின்றன' என்றார். இவ்வாறு இளம் பெண்களுடன் நடித்த எம்.ஜி.ஆர். உண்மையில் பெண்கள் என்றால் மிகவும் கூச்சப்படுவார். இது தான் அவரது நிஜ முகம். அவர் பெண்களிடம் அரட்டை அடிக்க, கதை பேச,



சிரித்து பேச, கும்மாளம் அடிக்க ஆசைப்படுகிறவர் கிடையாது. இவ்வாறு அவர் படப்பிடிப்பு தளத்தில் நடந்து கொண்டதாகவோ தனிப்பட்டமுறையில் யாரிடமும் பழகியதாகவோ நமக்கு ஒரு தகவல் கூடக் கிடைக்கவில்லை. மாறாக அவர் கூச்சசுபாவம் கொண்டவர் என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

எம்.ஜி.ஆரின் கூச்ச சுபாவம்

பெண்களின் உள்ளம் கவர்ந்த அரசியல் கட்சி தலைவராக, மக்கள் தலைவனாக, திரைப்பட நாயகனாக விளங்கும் எம்.ஜி.ஆர். உண்மையில் அதிக கூச்ச சுபாவம் கொண்டவர். அவர் பெண்களிடம் அதிகம் பேசுவதில்லை. பெண்களிடம் பேச வேண்டி இருந்தால் மிகவும் மரியாதையாக தன்னடக்கத்தோடு பேசுவது அவருடைய வழக்கம். பெண்களைப் பற்றி இழிவாக கேலி பேசுவதோ இரட்டை அர்த்தத்தில் அவர்களின் பெண்மையை இழிவுபடுத்தி பேசுவதோ பெண்களை ஒருமையில் அழைக்கும் பழக்கமோ அவரிடம் கிடையாது. அவர் காலத்தில் பெரிய நடிகர், கதாசிரியர் பாடலாசிரியர் நடிகைகள் ஆகிய அனைவரையும் ஒருமையில் அழைத்துப் பேசுவதும் பட்டப் பெயர் வைத்து அழைப்பதும் உண்டு. முண்டக் கண்ணா, குரங்கு என்று அழைப்பது, கணவர் முன்னிலையிலேயே நடிகையிடம் ஆபாசமாக பேசுவது போன்ற பழக்கங்கள் சில முன்னணி நடிகர்களிடம் இருந்து வந்தன. அவர்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டவர் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். நடிகையாக இருந்தாலும் நடிகைகள் அல்லாத வேறு பெண்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஒரு துன்பம் என்றால் உடனே அதை தீர்த்து வைக்க முயல்வார். பெண்கள் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். இதற்கு முக்கிய காரணம் அவருடைய தாயார்.

தைரிய லட்சுமியாக விளங்கிய தாயார் சத்தியபாமா

எம்.ஜி.ஆர். விவரம் தெரிந்த நாளிலிருந்து தன் தாயாரின் அரவணைப்பில் வழிகாட்டுதலில் வளர்ந்தவர் என்பதால் பொதுவாகவே பெண்கள் என்றால் ஒருவித பயமும் மரியாதையும் அதிகபட்ச அன்பும் அவருக்கு இருந்தது. எனவேதான் வயதான பெண்களை பார்க்கும் போதெல்லாம் அவர் தன்னுடைய தாயை பார்ப்பதாகவே உணர்ந்தார்; தன் தாய் அன்பை அவர்களிடம் அறிந்து கொண்டார்.

எம்.ஜி.ஆரின் தாயார் சத்யபாமா ஏழு வயதில் எம்.ஜி.ஆரை நாடகக் கம்பெனிக்கு அனுப்பி வைத்தார். பின்பு எம்.ஜி.ஆரும் அவர் அண்ணனும் பதினேழு பதினெட்டு வயதுக்கு பிறகுதான் தன் தாயாரோடு சேர்ந்து ஒரு வீட்டில் வசிக்கின்றனர். அப்போது அந்த பகுதியில் என்ன அநியாயம் நடந்தாலும் உடனே முதலில் அதை தட்டிக் கேட்டு எதிர்ப்புக் குரல் கொடுப்பவர் எம்.ஜி.ஆரின் அம்மா சத்யபாமா அம்மையார் மட்டுமே. அவர் எம்.ஜி.ஆரிடம் "நீ எதற்கும் பயப்படக்கூடாது. சாவுக்கு அஞ்சக்கூடாது. நாம் இந்த உலகில் பிறப்பதன் காரணம் முடிந்த பிறகுதான் சாவு நம்மை வந்தடையும். எனவே அஞ்சாமல் இரு" என்று அறிவுரை கூறி துணிவுடன் வளர்த்திருந்தார்.

எம்.ஜி.ஆரின் குடும்பம் குடியிருந்த வீட்டுக்கு முன்பு ஒரு கோபக்கார நாய் அலைந்துகொண்டிருந்தது. ஒரு நாள் அந்த நாய் அவ்வழியே போன ஒரு சிறுவனின் டிரவுசரை பிடித்து கடித்து விட்டது. டிரவுசரைக் கடித்தவுடன் அந்த சிறுவன் அலறிக் கொண்டு ஓடினான். அந்த நாயும் அவன் பின்னாலேயே டிரவுசரை பிடித்த பிடியை விடாமல் ஓடியது. தெருவில் உள்ள அனைவரும் நாயை அடிக்க கல்லெறிந்தனர். அடிக்க ஓடினர். ஆனால் நாயைப் பார்த்து பயந்து கொண்டு அருகில் போகாமல் எட்டி நின்று அதட்டினார்கள். இதை பார்த்துக் கொண்டிருந்த சத்யபாமா

அம்மையார் இடுப்பு சேலையை இறுக்கமாக சொருகிக்கொண்டு அந்த சிறுவனின் பின்னால் ஓடி அந்த நாயின் பின்னங்கால்களை பிடித்து இழுத்து மூன்று சுற்று சுற்றி தரையில் ஓங்கி அடித்தார். நாய் நினைவிழந்து விழுந்து விட்டது. சிறுவன் தப்பித்துவிட்டான். அந்த தெருவின் அனைவரும் சத்யபாமா அம்மையாரின் துணிச்சலை பார்த்து வியந்து போயினர். சத்தியபாமா அம்மாவை பாராட்டினர். இதனைக் கண்ட எம்.ஜி.ஆர். தனது தாயாருக்கு இருந்த துணிச்சலைக் கண்டு மகிழ்ந்து தன்னுடைய நான் ஏன் பிறந்தேன் என்ற சுய வரலாற்று நூலில் பதிவு செய்திருக்கிறார்.

பெண்கள் பயந்தவர்கள் கோழைகள்; ஆண்களை அண்டிப் பிழைப்பவர்கள் அல்லர். அவர்கள் துணிவு உடையவர்கள்; தனித்து வாழும் திறன் படைத்தவர்கள்; ஒரு குடும்பத்தை முன்னேற்றும் முனைப்பு கொண்டவர்கள்; என்பதை தன் குடும்பத்தை கொண்டு தன் தாயாரை கொண்டு அறிந்து கொண்டதனால் எம்.ஜி.ஆர். பெண்களிடம் மிகுந்த மரியாதையோடு நடந்து கொள்வது வழக்கம்.

திரையுலகில் எம்.ஜி.ஆர். பெண்களிடம் பழகுவதில் மிகவும் கண்ணியமானவர் என்பதை மற்றவர்களின் பேட்டி மற்றும் நடிகைகளின் பேட்டிகள் வாயிலாகவும் அறியலாம்.

எம்.ஜி.ஆரின் கூச்சம்

கலங்கரை விளக்கம் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோது மாமல்லபுரத்துக்கு அருகில் உள்ள கலங்கரை விளக்கத்திலிருந்து எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் எதிரெதிரே ஓடி வர வேண்டிய காட்சியை இயக்குனர் சங்கர் எம்.ஜி.ஆரிடம் விவரித்தார். அப்போது எம்.ஜி.ஆர். இருவரும் எதிர் எதிராக ஓடிவந்தால் குறுகிய

படிக்கட்டில் ஒருவர் மீது ஒருவர் இடித்துக் கொள்ள நேரிடுமே என்று சங்கோஜப்பட்டு கேட்டார். அதற்கு இயக்குனர் 'இடித்துக் கொண்டால் தான் என்ன? கதாநாயகனும் கதாநாயகியும் தானே? ரசிகர்கள் அதனை ஏற்றுக்கொள்வார்கள். நீங்கள் ஏன் இவ்வளவு கூச்சப்படுகிறீர்கள்? என்றார்.

நடிப்புக்காகக் கூட எம்.ஜி.ஆர். தன் ஆரம்ப கால படங்களில் நடிகையர் மீது கைவைத்து நடிக்கும் போது அவரது கையை பட்டும் படாமலும் தான் வைப்பார். அவர்களிடம் அத்துமீறி நடந்து கொள்ள மாட்டார் அவருடைய சிரித்துச் சிரித்து என்னைச் சிறையிலிட்டாய் கன்னம் சிவக்க சிவக்க வந்து கதை படித்தாய் பாட்டு காட்சியில் சரோஜாதேவியுடன் காரில் பயணிக்கும்போது



சரோஜாதேவியின் தோளில் கை வைத்திருக்கும் எம்.ஜி.ஆர். தன்னுடைய விரல்களை மடக்கி வைத்திருப்பார். விரல்களால் அவருடைய தோளை தொட்டபடி இருக்க மாட்டார்.

எம்.ஜி.ஆருடன் நடித்த பழைய நடிகைகள் 'அவர் நடிகைகளை தொட்டு நடிக்க மிகவும் கூச்சப்படுவார்' என்பதை தங்கள் பேட்டிகளில் குறிப்பிட்டுள்ளனர். பானுமதியுடன் நடிக்கும்போது அவர் மிகப் பெரிய நடிகை என்பதாலும் அவர் அஷ்டாவதானி என்பதாலும் அவர் மீது எம்.ஜி.ஆர். மிகுந்த மரியாதை வைத்திருந்தார். அவரைத் தொட்டு நடிக்க எம்.ஜி.ஆர். கூச்சப்பட்டார். பின்பு ஒருமுறை பானுமதியை தமிழ் இசை கல்லுரி முதல்வராக்கிய போது நடந்த விழாவில் அவரது சிறப்புகளை பட்டியலிட்டு பேசினார். பானுமதியே வியந்து போய்விட்டார்.

பெரும்பாலும் எம்.ஜி.ஆர். பெண் வேடம் போடுவதில்லை. புதுமை பித்தன், காதல் வாகனம் ஆகிய படங்களில் பெண் வேடமிட்டு நடனம் ஆடுவார். காதல் வாகனம் படத்தில்

என்ன மேன் பொண்ணு நான்

சும்மா சும்மா பார்க்காதே

என்ற பாடலுக்கு ஆங்கிலோ இண்டியன் பெண் போல நாகரிக உடையில் வந்து அசோகனை மயக்கி ஜெயலலிதாவை காப்பாற்றி செல்வார். இந்த பாட்டை எல்.ஆர்.ஈஸ்வரி பாடி இருந்தார்.

ஒருமுறை டைரக்டர் சோமு எம்ஜிஆரின் படப்பிடிப்பு தளத்திற்கு போயிருந்தபோது எம்ஜிஆர் பெண்வேடமிட்டு ஆடிக்கொண்டிருந்தார். அந்த டான்ஸ் காட்சியில் நடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த டைரக்டர் சோமுவை பார்த்ததும் நடிப்பை நிறுத்திவிட்டு உள்ளே

போய்விட்டார்.அவருக்கு பிறர் முன்பு பெண் வேடத்தில் இருப்பது கூச்சமாக இருந்தது என்று இயக்குனர் சோமு தெரிவித்திருந்தார்.

இன்னொரு முறை எம்.ஜி.ஆர். தன்னுடைய மேக்கப் அறையில் மேக்கப் போட்டுக் கொண்டிருந்தபோது டைரக்டர் சோமு உள்ளே வந்தார். அங்கு வேறு ஒருவர் எம்.ஜி.ஆருடன் பேசிக் கொண்டிருந்தார். எம்.ஜி.ஆரின் முழங்காலுக்கு கீழே ரோஸ் நிறத்தில் அவருடைய கெண்டை கால் செழிப்பாக இருந்தது. என்றும் அதை அங்கிருந்தவர் உற்று பார்த்த போது அவர் மிகவும் கூச்சப்பட்டார் என்றும் இயக்குனர் சோமு தன்னுடைய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அடிமைப்பெண் படத்தில் எம்.ஜி.ஆர். முழங்காலுக்கு மேல் ஆடை அணிந்து நடித்திருப்பார். நடிப்புக்காக அவர் இது போன்ற குட்டை உடைகளை அணிந்தாலும் அது அவரைப் பொறுத்தவரை ஆபாசமாகவோ பெண்களால் கண்திறந்து காண முடியாததாக இருக்காது. அதனால்தான் அந்தப் படம் பாடல் வெற்றி பெற்றது.

எம்.ஜி.ஆர். தன் முதல் படமான ராஜகுமாரி நடிக்கும்போது அதில் ஒரு கவர்ச்சி கதாபாத்திரத்தில் நடித்த தவமணி தேவி தன்னுடைய மேலாடையில் கழுத்தை மிகவும் கீழே இறக்கி வைத்து தைத்து இருந்தார். அப்போது இயக்குனர் 'அம்மா இந்த உடையை தணிக்கையாளர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்' என்று கூறியபோது அவர் அந்த இறக்கப்பட்ட கழுத்தின் அளவை மறைப்பதற்காக ஒரு பெரிய செயற்கை பூவை சொருகிக்கொண்டு நடித்தார். அவருடன் நடிக்கும் காட்சிகளில் எம்.ஜி.ஆர். மிகவும் கூச்சப்பட்டதாகவும் எம்.ஜி.ஆரின் கைகளை எடுத்து தன் தோளில்

வைத்துக்கொண்டு தவமணி தேவி வசனம் பேசியதாகவும் அவர் பேட்டியளித்துள்ளார்.

ஆரம்ப கட்டங்களில் எம்.ஜி.ஆர். நடிப்புக்காக கூட பெண்களை தொட்டு நடிக்க விரும்பவில்லை. மிகவும் கூச்ச சுபாவம் கொண்டவராகவே இருந்தார். இவருடைய கூச்ச சுபாவம் பற்றி ''எனக்கு மட்டுமே தெரிந்த எம்.ஜி.ஆர்.'' என்ற கட்டுரைத் தொடரில் அவருடைய மனைவி வி.என்.ஜானகி அம்மையார் குறிப்பிட்டிருக்கிறார்.

அமெரிக்காவில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்த எம்.ஜி.ஆருக்கு சிறுநீர் குழாயில் 'கத்திட்டர்' பொருத்தப்பட்டிருந்தது. அந்தக் கத்திட்டரை நீக்கிவிட்டு வேறு ஒன்றை புதிதாக பொருத்துவது செவிலியரின் பணி. எம்.ஜி.ஆர். நினைவு தப்பி இருந்த நாட்களில் செவிலியர் தன் கடமையை செய்து கொண்டிருந்தனர். எம்.ஜி.ஆருக்கு நினைவு வந்த பிறகு அவர் தன் மனைவியை அழைத்து 'இந்த வேலையை எல்லாம் நீயே செய்; நர்சுகளை செய்ய சொல்லாதே' என்று சொல்லிவிட்டார். செவிலியர் தாய்மை உணர்வோடு தியாக உள்ளத்தோடு இத்தகைய பணிகளை செய்தாலும் கூட எம்.ஜி.ஆருக்கு இருந்த கூச்ச சுபாவத்தால் அவர் செவிலியரை இந்தப் பணியைச் செய்யக் கூடாது என்று சொல்லிவிட்டு தன் மனைவியிடம் அப்பொறுப்பை ஒப்படைத்தார்.

சினிமாவில் இளம்பெண்களுடன் ஆடிப்பாடி கேலியாக பேசி சிரித்து விளையாடும் எம்.ஜி.ஆர். அந்த காட்சி முடிந்ததும் அவர்களிடம் தொழில் சம்பந்தமாக பேசுவதாக இருந்தால் மட்டுமே பேசுவார். படப்பிடிப்பு தளத்தில் அவர் இருக்கும் போது யாரும் சிரித்து பேசி விளையாட மாட்டார்கள். இது தொழில் செய்யும் இடம் என்று எம்.ஜி.ஆர். அதட்டுவார். நடிகைகளோடு சிரித்து பேசி

கொண்டிருந்தவர்களை கடுமையாக கண்டித்து இருக்கிறார். நடிகைகளுக்கும் அறிவுரை சொல்லி திருத்தி இருக்கிறார். எப்போதும் பெண்களின் மீது மிகுந்த மரியாதை கொண்டிருந்தார்.

எம்.ஜி.ஆர். தன்னுடைய ஆண் நண்பர்களுடன் இருக்கும்போதுகூட யாரையும் கேலி கிண்டல் செய்து பேசுவதோ, பாலுறவு சொற்களை பயன்படுத்துவது, அசிங்கமான வார்த்தைகளை ஆபாசமான விஷயங்களைப் பேசுவது கிடையாது. யாராவது பேசினால் கூட அவர் நமக்கு ஏன் வம்பு என்று சொல்லி நிறுத்திவிடுவார். அவர்கள் பேசுவதை ஊக்கப்படுத்தி அதைக் கேட்டு சிரித்து மகிழ மாட்டார்.

சிறு வயதில் அவருடைய தாயார் அவருக்கு கற்றுக் கொடுத்த நல்ல பழக்க வழக்கங்களில் இதுவும் ஒன்று. யாரையும் கேலி பேச கூடாது; குறிப்பாக பெண்களை பற்றி ஆபாசமாகவும் அவதூறாகவும் பேசக்கூடாது என்று அவருடைய தாயார் கற்றுக் கொடுத்திருந்தார்.

திரைப்படங்களில் எம்.ஜி.ஆர். காதலைப் பற்றியோ கல்யாணத்தை பற்றியோ அவர் அம்மாவிடம் பேசும் போது வெட்கப்படுவதாக சில காட்சிகள் வரும் அன்னமிட்ட கை, குடியிருந்த கோவில், தாய் சொல்லை தட்டாதே போன்ற படங்களில் தன்னுடைய காதலை வெளிப்படுத்தும் காட்சிகளில் அல்லது காதல் தானாக வெளிப்பட்டுவிடும் காட்சிகளில் எம்.ஜி.ஆர். தன் தாயாரிடம் மிகவும் வெட்கப்பட்டு நாணி கோணி நடிப்பார். இது படத்துக்காக எடுக்கப்படும் காட்சியாக இருந்தாலும் உண்மையிலேயே அவர் பெண்களிடம் பழகுவதில் மிகுந்த கூச்ச சுபாவம் உள்ளவர் என்பதால் இக்காட்சி தத்ருபமாக அமைந்திருக்கிறது.

காதலை வெளிப்படுத்துவதில் கூச்சம்

எம்.ஜி.ஆர். நாடகங்களில் நடித்துக் கொண்டு சினிமா பட வாய்ப்பு தேடிக் கொண்டிருந்த காலத்தில் அவருக்குள் ஒரு காதல் முகிழ்த்தது. பக்கத்து வீட்டில் இருந்த ஒரு இளம்பெண் மீது அவருக்கு காதல் வந்தது. ஆனால் அந்தப் பெண்ணைப் பார்த்து தன்னுடைய காதலை வெளிப்படுத்த அவருக்கு தயக்கமாக இருந்தது. காரணம் அவர் தாயார் அதை ஏற்றுக் கொள்வாரோ இல்லையோ என்ற அச்சம் அவருக்குள் உறைந்து கிடந்தது. இதனால் இவர் தன்னுடைய உள்ளக்கிடக்கையை தன்னுடைய காதலை அப்பெண்ணுக்கு உணர்த்தும் வகையில் ஒரு ஆர்மோனியப் பெட்டியை வைத்துக்கொண்டு சத்தம் போட்டு பாட்டு பாடுவார். அவர் பாடும் பாடல்களை அந்த பெண் கேட்டு இவருடைய காதல் உணர்வை புரிந்து கொள்வாள் என்பது இவருடைய கணிப்பாக இருந்தது.

சில நாட்கள் எம்.ஜி.ஆரின் பாடும் பாட்டுக்களைக் கேட்டுகொண்டிருந்த அவருடைய தாயார் ஒரு நாள் 'ஏன் இப்படி சத்தம்போட்டு பாடுகிறாய்' என்று கேட்டார் 'அம்மா நாடகத்தில் சத்தமாக பாடினால்தான் வாய்ப்பு கொடுப்பார்கள், அதனால் நான் சத்தமாக பாடுகிறேன்'. என்றார். சத்யபாமா அம்மையார் இன்னும் சில நாட்கள் கவனித்துக்கொண்டிருந்தார். இவர் அந்தப் பெண் தன் வீட்டுப் பக்கம் வரும் நேரத்தில்தான் இவ்வாறு சத்தமாக பாடுகிறார் என்பதை புரிந்துகொண்ட சத்யபாமா அம்மையார், ஒருநாள் மிகுந்த கோபம் கொண்டு இவர் தலையில் ஒரு குடம் தண்ணீரை கடகடவென்று கொட்டினார். அன்றோடு எம்.ஜி.ஆர். ஆர்மோனிய பெட்டியை வைத்து பாட்டு பாடுவது நின்று போயிற்று.


முதல் காதல்

எம்.ஜி.ஆர். பிரபலம் அடைந்த பிறகு ஒரு பேட்டியின்போது நிருபர் 'உங்களுக்கு காதல் அனுபவம் உண்டா' என்று கேட்கிறார். அப்போது எம்.ஜி.ஆர். 'அதைப்பற்றி மட்டும் கேட்காதீர்கள். அது மிகவும் சோகமானது' என்று பதிலளித்தார். இந்த சோகத்துக்கு காரணம் என்னவென்றால் அவருடைய கூச்ச சுபாவம் தான். அவர் தன் காதலை அந்த பெண்ணிடம் வெளிப்படுத்தி இருந்தால் ஒருவேளை அவருடைய திருமணம் நடந்திருக்கலாம். ஆனால் அந்த காதல் வெளிப்படுத்தப்படாத சிப்பிக்குள் இருக்கும் முத்தாகவே முடிந்துவிட்டது. பின்பு தன்னுடைய மனைவிமார் அடுத்தடுத்து அவர் திருமணம் செய்து ஒவ்வொரு மனைவியாக இரண்டு மனைவிகளும் இறந்து போன பிறகு அவர் ஜானகி அம்மையாரை திருமணம் செய்து கொள்றார்.

தன்னுடன் நடித்த ஜானகியிடம் தன் காதலை தெரிவித்த பின்பு அவரை திருமணம் முடிக்க 12 வருடங்கள் எம்.ஜி.ஆர். காத்திருந்தார். பன்னிரண்டு வருடங்கள் காத்திருந்து பின்பு தன் காதலை கல்யாணத்தில் நிறைவேற்றிய எம்.ஜி.ஆர். அந்த கல்யாண நாளன்று வருடந்தோறும் புது மணமக்கள் போல புத்தாடை உடுத்தி மாலை மாற்றி தேவர் போன்ற பெரியவர்களிடம் ஆசி வாங்குவார்கள் ஒவ்வொரு வருடமும் எம்.ஜி.ஆர். தன் கல்யாண நாளை மிகச் சிறப்பாக கொண்டாடி ஜானகி அம்மையாருக்கு பெருமை சேர்த்தார்.

எம்.ஜி.ஆர். பற்றி வெளி இடங்களில், படப்பிடிப்பு தளத்தில் பெண்களிடம் தவறாக நடந்து கொண்டார் என்ற பேச்சு எதுவும் இல்லாததால் சமூகத்தில் அவருக்கு பெண்கள் மத்தியில் நல்ல மதிப்பு உண்டாயிற்று. படங்களில் பெண்களிடம் மரியாதையாக நடந்து கொண்டார். படமும் நிஜமும் ஒன்றிணைந்து அவருக்கு நல்ல பிம்பத்தையும்

பேரையும் பெண்களிடம் பெற்று தந்தது. அவை வாக்குகளாக மாறி அவரை அரசு கட்டிலில் உட்கார வைத்தது. அவரும் பெண்களின் நல்வாழ்வுக்கு பல நல்ல திட்டங்கள் தீட்டி செயல்படுத்தினார். இன்றுவரை பெண் இனம் போற்றும் பெருந்தலைவராக புகழ் பெற்றுள்ளார்.



3. எம்.ஜி.ஆர் பெண் எதிரிகளை எதிர் கொள்ளுதல்

எம்.ஜி.ஆர். படங்களில் கதாநாயகனுக்கு இருக்கும் முக்கியத்துவம் வில்லனுக்கும் தரப்பட்டிருக்கும். தனிப்பட்ட வாழ்விலும் பொதுவாழ்விலும் இடைஞ்சல் தரக்கூடியவனாக வில்லன் இருப்பான். கதாநாயகன் தனிப்பட்ட வாழ்விலும் பொது வாழ்விலும் நன்மை செய்யக் கூடியவராக இருப்பார். இந்நிலையில் ஒரு சில படங்களில் பெண்கள் எம்.ஜி.ஆருக்கு எதிராக நிற்கும் காட்சிகள் வந்ததுண்டு.

கெட்ட பெண்களை எதிர்கொள்ளும் உத்தி

எம்.ஜி.ஆர். சண்டை காட்சிகயில் யுத்த தர்மத்தை பின்பற்றுவார். பெண் வில்லிகளுடன் சண்ட போட வேண்டிய காட்சிகளில் அவர் மகாபாரத பீஷ்மரைப் போல அவர்களுடன் போர் இடுவதை தவிர்த்துவிடுவார்.

பெண்களை தம் படங்களில் கொடூரமாக தாக்குவது கிடையாது. மென்மையாகக் கையாளும் எம்.ஜி.ஆர். கெடுமதி உள்ள பெண்ணாக இருந்தாலும் அவரை அடிப்பதோ கொடுமைப்படுத்துவதோ வார்த்தைகளால் ஏசுவதோ புண்படுத்துவதோ கிடையாது. இதை ஒரு கொள்கையாக எம்.ஜி.ஆர். படங்களில் கடைப்பிடித்து வந்தார். பெண்களிடம் அவர் காட்டிய கண்ணியமும் அவர்களை கௌரவமாக நடத்திய பண்பும் பெண்களை மிகவும் கவர்ந்தது. அவர் எந்த படத்திலும் பெண்ணை ஏடி வாடி போடி என்று பேசியது கிடையாது. சிற்றன்னை கொடுமை இருக்கும் படங்களில் கூட அவர் சித்தி என்று மரியாதையாக அழைத்துப் பேசுவார்.

பெண்கள் தற்காப்பு கலைகளை கற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் முகராசி, பெரிய இடத்துப்பெண், மருத நாட்டு இளவரசி, மகாதேவி, மதுரை வீரன், அடிமைப்பெண் போன்ற படங்களில் காட்டியிருப்பார். ஆனால் எந்த பெண்ணும் வில்லத்தனமாக சண்டை போட்டு அவளை வெற்றி பெறுவதாக காட்சிகள் இல்லை.



இதயக்கனியில் ராஜசுலோச்சனா

ஒரு பெண் முழுப்படத்திலும் எம்.ஜி.ஆரை எதிர்த்து நின்றது இதயக்கனியில் மட்டுமே. ஆரம்பத்தில் இருந்து வில்லியாக அவரைக் காட்டாமல் கடைசி காட்சியில் மட்டும் வில்லியாகக் காட்டி அவர்தான் அந்தக் கொள்ளைக் கூட்டத்தின் தலைவி என்று தெரிவித்த உடன் போலீஸ் விசாரணைக்கு அவர் அழைத்துச் செல்லப்படுவார். வில்லியோடு அதாவது பெண்ணோடு எதிர்த்து எம்.ஜி.ஆர். சண்டை போடும் காட்சிகள் கிடையாது. அந்த பெண்ணை ஆண் போலீசாரோ பெண் போலீசார் அடிக்காமல் வதைக்காமல் ஐஸ் படுக்கையின் மீது படுக்கவைத்து குளிர் தாங்காமல் அவள் உண்மையைச் சொல்வதாக காட்சியை அமைத்து இருப்பார்கள்.



சண்டை காட்சியில் குமாரி பத்மினி

தயாரிப்பாளரான ஏ பி நாகராஜனுக்கு வேண்டப்பட்டவராக இருந்த குமாரி பத்மினிக்கு நவரத்தினம் படத்தில் எம்.ஜி.ஆரை எதிர்க்கும் ஒரு வேடம்

கொடுக்கப்பட்டிருந்தது. அப்படத்தில் ஒன்பது பெண்கள் எம்.ஜி.ஆர். வாழ்வில் குறுக்கிட்டாலும் அவர்களில் லதா மட்டுமே அவருக்கு ஜோடியாக இருப்பார். அந்த ஒன்பது பெண்களில் ஒருவராக குமாரி பத்மினி இடம்பெறாமல் வில்லியாக எதிர்த்து சண்டை போடும் ஒரு பெண்ணாக ஒரு கதாபாத்திரம் ஏற்று இருந்தார். அந்தக் காட்சியில் எம்.ஜி.ஆர். அந்த பெண்ணோடு நேருக்கு நேராக மோதாமல் அவரை அடித்து துன்புறுத்தாமல் சற்று விலகி அவருடைய தாக்குதலின் உக்கிரத்தை அவர் உணரும்படி செய்வார்.

அதாவது குட்டி பத்மினி எம்.ஜி.ஆரை தாக்க வரும்போது எம்.ஜி.ஆர். விலகிக் கொள்வார். குமாரி பத்மினி கீழே விழுந்து விடுவார். இவ்வாறு இரண்டு மூன்று முறை மாறி மாறி எம்.ஜி.ஆர். விலகிக் கொள்ளவும் குமாரி பத்மினி எம்.ஜி.ஆரை தாக்கும் வேகத்தோடு வந்து கீழே விழுந்து உருண்டு காயப்படுவதுமாக இந்த சண்டைக் காட்சி அமைக்கப்பட்டிருக்கும்.

ஒரு பெண் தன்னுடைய மென்மையை மீறி தவறான பாதையில் சென்று நல்ல வழியில் நடக்கும் ஆணை தாக்கி துன்புறுத்துவதாக ஒரு சூழ்நிலை ஏற்பட்டாலும் கூட ஒரு ஆண் அவளை எதிர் தாக்குதல் நடத்தி மடக்கக் கூடாது என்ற ஒரு நல்ல பாடம் இக்காட்சியின் மூலம் தெரிவிக்கப்படும்.

இன்னும் ஒரு பெண் எதிரி

பேபி ஷகிலாவை வில்லன் ஒரு பீரோவுக்குள் வைத்து பூட்டி விடுவார். அந்த குழந்தையை எம்.ஜி.ஆர். காப்பாற்ற வேண்டும். அப்போது அந்த பீரோவின் நடுவில் இருக்கும் கம்பியில் ஒரு தேளை வில்லன் விட்டுவிடுவார். அந்தக் குழந்தையை காப்பாற்ற முடியாதபடி தேள் ஊர்ந்துகொண்டிருக்கும். எம்.ஜி.ஆர். குழந்தையைக் காப்பாற்ற கையை

நீட்டினால் இந்த தேள் கொட்டி விடும் என்ற ஒரு ஆபத்தான சூழ்நிலையை வில்லன் உருவாக்கி இருப்பார். இதற்கிடையே அந்த பீரோவை பூட்டிய சாவியும் வில்லனின் துணைவியாக இருக்கும் பெண்ணிடம் கொடுக்கப்படும். கதவை உடைத்து திறந்தால் தேள் உள்ளே விழுந்து குழந்தையை கொட்டிவிடலாம். கதவை மெதுவாக திறக்கலாம் என்றால் சாவி அந்த பெண்ணிடம் இருக்கிறது.

எம்.ஜி.ஆர். அந்தப் பெண்ணிடம் ‘சாவியைக் கொடு’ என்று கேட்பார். ஆனால் அவளோ சிரித்தபடி தன்னுடைய ஜாக்கெட்டுக்குள் போட்டு விடுவாள். இப்போது எம்.ஜி.ஆரால் சாவியை எடுக்கவும் முடியாது; கதவை உடைக்கவும் முடியாது; இப்படி ஒரு சிக்கலான கிளைமாக்ஸ் காட்சியில் எம்.ஜி.ஆர். அந்த பெண்ணை தாக்காமலும் பீரோவை உடைக்காமலும் சாமர்த்தியமாக செயல்பட வேண்டிய ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டு விடும்.

எம்.ஜி.ஆர். மெதுவாக தேளின் வாலைப் பிடித்து தூக்கி அந்தப் பெண் மீது எறிவார். முதல் முறையாகப் படம் பார்க்கும் பெண்கள் ஐயோ என்று அலறுவர்; ஆண்கள் சிரிப்பார்கள். படத்தில் அந்தப் பெண் தன்மீது அந்த தேள் விழுந்து தன்னை கொட்டி விடுமோ என்ற அச்சத்தில் ஜாக்கெட்டுக்குள் இருந்த சாவியை எடுத்து எறிந்துவிடுவாள். பின்னர் எம்.ஜி.ஆர். தன் கையில் வைத்திருந்த தேளை வெளியே எறிவார். அதை நசுக்கி கொல்ல மாட்டார். அதாவது அவர் அந்தப் பெண் மீது எறிவது போல ஒரு பாவனை செய்து அந்தப் பெண்ணை பயமுறுத்தி இருப்பாரே தவிர உண்மையில் அந்தப் பெண் மீது எறிந்திருக்கவே மாட்டார். அவள் மட்டுமே அந்த சாவியை எடுத்து

கொடுக்க முடியும் என்பதால் அவளை கொஞ்சம் பயமுறுத்தி இருப்பார்.

பெண் எதிரியாலும் எம்.ஜி.ஆருக்கு பெண்களிடம் மதிப்பு

எதிரியாக இருந்தாலும் பெண்ணைத் தாக்காமல் ஏசாமல் பிறர் மூலமாகவும் கொடுஞ்செயல்களைச் செய்யாமல் நாகரீகமாகவும் கண்ணியமாகவும் எம்.ஜி.ஆர். தன் படங்களில் நடந்து கொள்வதை கண்டு ரசிகைகள் அவர் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தனர்.

கட்சியில் ஓர் பெண் எதிரி

அண்ணா திமுக கட்சி ஆரம்பித்த பிறகு ஒரு வேடிக்கையான சம்பவம் நடைபெற்றது. ஷீலா பஜாஜ் என்ற பெண் எம்.ஜி.ஆர். கட்சியில் சேர்ந்து பணி செய்வதற்காக வந்தார். படித்தவர் என்பதால் எம்.ஜி.ஆரும் வரவேற்று மகளிர் அணியில் பதவியும் அளித்தார். பொற்செல்வி என்று பெயரையும் மாற்றி அமைத்தார். மேடைகளில் நன்றாக பேசினார் பெண்களை ஒருங்கிணைத்து தீவிரமாக கட்சி பணி ஆற்றினார்.

மாநில மகளிர் அணி துணைச் செயலாளராக உயர்ந்தார். சென்னை மாவட்ட மகளிரணி பொறுப்பை ஏற்ற டாக்டர் பொற்செல்வி விரைவில் மாநில அளவில் உயர்வு பெற்றார்.

பொற்செல்வி பொதுக் கூட்டங்களில் பேசும்போது விலையுயர்ந்த ஆடை அணிந்து. கருப்புக் கண்ணாடி போட்டு முழு மேக்கப்புடன் இவர் தோன்றியதால் கட்சியினர் மத்தியில் இவருக்கு கொஞ்சம் வரவேற்பு கிடைத்தது. ஒரு சினிமா நடிகை போன்ற தோரணையுடன் இருந்தாலும் படித்தவர் என்பதால் இவருக்கு கட்சியினர் மிகுந்த மரியாதை செலுத்தினர். தன்னுடைய


கூட்டங்களுக்கு ஆட்கள் நிறைய வருவதைப் பார்த்த டாக்டர் பொற்செல்விக்கு சில மாதங்களிலேயே ஆணவம் தலைக்கேறி விட்டது. தன் போக்கில் செயல்பட ஆரம்பித்தார். தலைமைக்கு கட்டுப்படாமல் இவருடைய செயல்பாடுகள் இருப்பதை கண்டு கட்சி இவர் மீது நடவடிக்கை எடுத்தது.

பொற்செல்வி தனது ஆதரவாளர்களாக இருந்த சிலரை நம்பி அவர்களோடு சேர்ந்து அவர்களுடைய தூண்டுதலின் பெயரில் புரட்சி அண்ணா திமுக என்று ஒரு கட்சியைப் பதிவு செய்தார். பதிவு செய்ததோடு மட்டுமல்லாமல் எம்.ஜி.ஆர். மீது ஒரு புகார் பட்டியலை தயாரித்தார். இவரைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தவர்கள் இவரிடம் செலவழிக்க பணம் இல்லை என்று தெரிந்ததும் விலகிவிட்டனர். இவர் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போனார். காமராஜர் கருணாநிதி போன்ற பெரிய தலைவர்களுடன் அரசியல் செய்த எம்.ஜி.ஆர். இந்த டாக்டர் பொற்செல்வியை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. கட்சியினரும் பத்திரிகையாளரும் இதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. இப்போது அண்ணா திமுகவுக்கு வாரிசு உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கும் தீபா போல அன்றைக்கும் இந்த டாக்டர் பொற்செல்வி இருந்திருந்தார்.

எம்.ஜி.ஆருக்கு எதிரி என்றால்

எம்.ஜி.ஆர். பிரபல தமிழ் பத்திரிகையைத் தாக்கி எடுத்த படம் சந்திரோதயம். அதில் எம்.ஆர். ராதா ‘தினக்கவர்ச்சி’ என்ற பத்திரிக்கை அதிபராக இருப்பார். அப்போது அவரிடம் பேசும் ஒரு வசனத்தில் ‘என் எதிரி கூட எனக்கு சமமாக இருக்க வேண்டும் என்று நினைப்பவன் நான்’ என்பார். அது

அவரது வாழ்க்கைகளிலும் பின்பற்றி வந்த கொள்கை ஆகும். தன் எதிரி தனக்கு சமமானவராக இருக்க வேண்டும் என கருதுவார். இந்த கொள்கையை அவர் சினிமாவிலும் அரசியலிலும் பின்பற்றி வந்தார். இந்த கொள்கையை இவர் பின்பற்றியதால் தான் எம்.ஜி.ஆர். – சிவாஜி என்ற இருமை எதிர்வு *(Binary Opposition)* தோன்றியது. இல்லையென்றால் சிவாஜி, ஜெமினி கணேசன், எஸ் எஸ் ஆர் போன்றோர் சம அந்தஸ்தில் இருந்திருப்பார்கள்.



4. எம்.ஜி.ஆர். ஆத்ம நேசரா?

படிப்பறிவில்லாத பெண்கள் எம்.ஜி.ஆரை உண்மையான ஏழைகளின் தோழனாகவும் அனாதை இரட்சகராகவும் கருதி அவரிடம் தங்கள் மனதைப் பறி கொடுத்து விடுகிறார்கள். அவர் உருவாக்கிய சினிமா பிம்பத்தை உண்மை என நம்பி இவர்கள் நிஜவாழ்வில் ஏமாந்து போகிறார்கள், என்று எம்.ஜி.ஆர். வாழ்ந்த காலத்திலேயே சில அறிவுஜீவிகள் அவரை விமர்சித்து கட்டுரைகளும் கதைகளும் எழுதி வெளியிட்டனர். எம்.ஜி.ஆரை பெண்கள் ரகசியமாக காதலித்தனரா? அவ்வாறு காதலித்திருந்தால் அது தவறா/அதை விமர்சிக்கலாமா? இது போன்று கணவன் அல்லாத அன்னிய ஆடவரை காதலிக்கும் பழக்கம் தமிழ் நாட்டில் இருந்ததா? அதுவும் விமர்சிக்கப்பட்டதா என்று பல கேள்விகள் இங்கு எழுகின்றன. இவற்றுக்கான பதில்களை விளக்கமாக அறிய முனைவோம்.

பெண்களுக்கு தனி காட்சி

எம் ஆர் ராதாவால் எம்.ஜி.ஆர். சுடப்பட்டு பின் சிகிச்சை பெற்று சுகமடைந்து வந்த பிறகு நடித்து வெளிவந்த படம்



காவல்காரன். இந்தப் படத்தில் எம்.ஜி.ஆர். முன்பிருந்ததை விட ஒல்லியாக இளமையாக அழகாக தோற்றமளித்தார். ஆனால் குரல் மட்டும் மாறி இருந்தது. எம்.ஜி.ஆர். இறந்து விடுவார் என்ற புரளியிலேயே திமுக சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று தமிழக அரசின் ஆட்சியை பிடித்தது. காவல்காரன் படமும் வெளிவந்து வெற்றிநடை போட்டது. வெற்றி விழாவில் தமிழக முதல்வர் கலந்துகொண்டு விருதுகள் வழங்கினார். அப்போது எம்.ஜி.ஆருக்கு வழங்கப்பட்ட நான்கடி உயர வெள்ளி பதிப்புருவம் அவர் நினைவில்லத்தில் இன்றும் இருக்கிறது.

காவல்காரன் படத்துக்கு பெண்கள் கூட்டம் அலைமோதியது எனவே பெண்களுக்காக திரையரங்குகளில் தனி காட்சி திரையிடப்பட்டது. சென்னை சேலம் போன்ற ஊர்களில் இதுபோன்ற காட்சிகள் பெண்களுக்காக பிரத்தியேகமாக திரையிடப்பட்டன. பெண்கள் காலையில் பத்து மணிக்கு வந்து டிக்கெட் கிடைக்காமல் மதிய காட்சிக்கும் டிக்கெட் கிடைக்காமல் முதல் காட்சியும் பார்க்க முடியாமல் இரவு காட்சி பார்த்துவிட்டு இருட்டில் தனியாக போவதில் இருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்காக அவர்களுக்கு பகலில் 2 மணி காட்சி தனியாக போடப்பட்டது. இது பெண்கள் பாதுகாப்பாக வந்து செல்வதற்கு உதவியாக இருந்தது. இவ்வாறான ஏற்பாடுகள் வேறு எந்த நடிகருக்கும் வேறு எந்த காலத்திலும் நடந்தது கிடையாது.

எம்.ஜி.ஆர். தன் ரசிகர்களின் மீது கொண்டிருந்த அன்பும் அவர்களின் பாதுகாப்பின் மீது கொண்டிருந்த அக்கறையும் அவர்கள் பத்திரமாக நேரத்தோடு வீடு திரும்ப வேண்டும் என்ற பாதுகாப்புணர்ச்சியும் அவர்களுக்கு என்று தனி காட்சி திரையிடப்பட்டதற்கு முக்கிய காரணம் ஆகும்.

இந்த அக்கறையை உணர்ந்து கொண்டதால்தான் பெண்கள் எம்.ஜி.ஆர். மீது மிகுந்த பற்றும் பாசமும் வைத்திருந்தனர். ஆனால், இதை தவறாக புரிந்து கொண்ட சில ஆண்கள் பெண்களின் அன்பை கொச்சைப்படுத்தி அவர்கள் எம்.ஜி.ஆர். மீது வைத்துள்ளது ஒருதலைக் காமம் எனக் கருதி அதை எம்.ஜி.ஆர். தன் சினிமா படங்கள் மூலமாக மேலும் வளர்த்து விடுவதாகவும் அவர் மீது குற்றம் சுமத்தி சில மேடைகளில் பேசியும் நூல்களில் எழுதியும் வந்தனர். அவர்களுக்கும் இந்த நூல் பதில் சொல்லவேண்டிய பொறுப்புணர்வை கொண்டிருக்கின்றது.

தொல்காப்பியம் காட்டும் உலா

ஒரு நாயகனை பெண்கள் அவனுடைய சிறப்பு குணங்களுக்காக காதலிப்பது நம்முடைய பாரம்பரியத்தில் காணப்படுகின்ற ஒரு இலக்கிய பண்பாட்டு கூறாகும். தொல்காப்பியம்

'ஊரோடு தோற்றம் உரித்தென மொழிப'

என்று ஒரு நாயகன் ஊர்வலம் வருவதை பாராட்டி இலக்கியம் அமைக்கலாம் என்பது இலக்கணம். இவ்வாறு ஊர்வலமாக வரும் நாயகனை அவ்வூர் பெண்கள் எட்டு வயது முதல் 42 வயது வரை உள்ளவர்கள் அவரவர் வயதுக்கும் அனுபவத்துக்கும் பருவத்துக்கும் தக்கவாறு ரசித்து இன்புறுவது இலக்கியத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிற்றிலக்கிய வகை ஆகும்.

உலா இலக்கியம்

உலா இலக்கிய வகையில் இறைவன் அல்லது மன்னன் நாயகனாக ஊர்வலம் வர அவனை பெண்கள் கண்டு ரசிப்பதும் அவன் மீது உள்ள காதலால் அவனை பார்க்க ஓடி வரும்போது அவர்களின் கை வளையல்கள் கழன்று

விழுவதும் இடுப்பில் அணிந்திருக்கும் மேகலைகள் நெகிழ்வதும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

இறைவன் உலா வரும்போது அவனைக் கண்டு ரசிக்கும் பெண்களைப்பற்றிய இலக்கிய வகையாக 'ஞான உலா' சோழ மன்னர்கள் உலாவரும் போது அவர்களை கண்டு ரசித்த பெண்களை விளக்கும் இலக்கியமாக 'மூவருலா' போன்ற நூல்கள் தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்றன. வீரதீர செயல்களில் ஈடுபட்டவர்களை கண்டு பெண்கள் ரசிப்பது இலக்கியங்களில் காணப்படுகின்ற ஒரு விஷயமாக இருப்பதனால் சினிமாவும் ஒரு கலைப்படைப்பாக இருப்பதனால் சினிமாவில் கதாநாயகனாக நடிக்கும் எம்.ஜி.ஆரை அவருடைய சினிமா தொடர்பான ஆடல் பாடல் வீரதீர காட்சிகளுக்காக ஆண்களைப் போல பெண்களும் ஒரு கலை நோக்கத்துடன் ரசிப்பதில் தவறு ஒன்றும் இல்லை. கலையை ரசிப்பது நம் பாரம்பரியத்தில் இருந்து வந்துள்ளது.

மடலேறுதல்

ஒரு ஆண் தான் விரும்பிய பெண்ணை மணப்பதற்கு அவளுடைய சம்மதம் கிடைக்காதபோது ஊராரிடம் அந்த வழக்கை கொண்டு செல்வதற்காக பனங்கருக்கினால் செய்த குதிரையின் மீது ஏறி அந்த குதிரையின் முகத்தில் தான் விரும்பும் பெண்ணின் படத்தை ஓவியமாக வரைந்து தொங்கவிட்டு ஊருக்குள் சுற்றி வருவான். அப்போது அந்த பனங்கருக்கு அவனுடைய கால்களை உடம்பை அழுத்தி இரத்தமாகக் கொட்டும். இதைக் கண்ட ஊர் பெரியவர்கள் அவன் அவள் மீது வைத்திருக்கும் காதலை அவளுக்கு எடுத்துரைத்து அவனை திருமணம் செய்து கொள்ளும்படி அறிவுறுத்துவார்கள். இந்த மடலேறுதல் வழக்கம் ஆண்களுக்கு மட்டுமே உரியதாகும். பெண்களுக்கு கிடையாது.

பெண்கள் தான் விரும்பிய ஒருவனை தனக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று ஊராரை பார்த்து கேட்கும் பழக்கம் பண்டைய தமிழ்ச் சமூகத்தில் இல்லை. ஆனால் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கையாழ்வார் மடலேறுதல் பெண்ணுக்கும் உண்டு என்பதை நிரூபித்துள்ளார்.

திருமடல் காட்டும் இறைமை காதல் (நாயக – நாயகி பாவம்)

திருமங்கையாழ்வார் பெருமாளின் மீது காதல் கொண்டு தன்னை பெண்ணாக பாவித்து திருமாலோடு சேர வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட இரண்டு பக்திநூல்கள் பெரிய திருமடல் சிறிய திருமடல் என்று அழைக்கப்படுகின்றன. இது தவிர வேறு சில மடல் நூல்களும் உண்டு. மடல் நூல் வளமடல் என்றும் அழைக்கப்படுவதுண்டு. இங்கு பக்தர் இறைவனோடு சேரும் நிலையை ஜீவாத்மா பரமாத்மாவோடு சேர்வதாக பக்திமார்க்கத்தில் இருப்பவர்கள் விதந்து ஓதுகின்றனர்.

கண்ணன் என் காதலன்

பாகவதத்தில் கண்ணன் அனைத்து கோபிகையருடனும் இருப்பதாக ராஸ லீலை குறிப்பிடுகின்றது. கிருஷ்ணனின் வேணு கானத்தில் மயங்கிய ராதை மற்றொரு மேய்ப்பனின் மனைவி. கண்ணனை பாரதியார் அம்மா, அப்பா, சேவகன், ஆண்டான் அடிமை, காதலன், காதலி என பலவகையிலும் உருவகப்படுத்தி கண்ணன் பாட்டு என்ற நூலை எழுதியுள்ளார். இதில் அவர் தன்னை ஆணாக கொண்டு கண்ணனைப் பெண்ணாக கொண்டு கண்ணம்மா என் காதலி என்று பாடல்கள் எழுதி இருக்கிறார். அவை நம்மிடையே மிகவும் பிரபலமானவையாகும். பின்னர் தன்னை பெண்ணாக

உருவகப்படுத்தி கண்ணனை ஆணாகக் கொண்டு கண்ணன் என் காதலன் என்ற பெயரில் கவிதைகள் எழுதியுள்ளார். எம்.ஜி.ஆரும் கண்ணன் என் காதலன் என்ற பெயரில் ஒரு படத்தில் நடித்திருக்கிறார்.

பாண்டி சாமி வழிபாடு

இறைவனை அவனுடைய இயல்புகளுக்காக பெண்கள் காதலிக்கும் பழக்கம் நம்மிடையே இருந்து வந்திருக்கிறது. இன்றைக்கும் மதுரை பகுதியில் பல கிராமங்களில் பெண்கள் தங்களை பாண்டி சாமி பிடித்திருப்பதாக கூறுவதுண்டு. இவர்களிடம் சாமி இருப்பதால் இவர்களை மற்றவர்கள் மிகுந்த மதிப்போடும் மரியாதையோடும் நடத்துவார்கள். இப்பெண்கள் தன் கணவனோடு சேர்ந்து குடும்பம் நடத்துவது கிடையாது. தீட்டு வீடு சாவு வீட்டில் சாப்பிடுவது கிடையாது

வெள்ளிக்கிழமை மாலை வேளையில் வீட்டை கழுவி மெழுகி தானும் குளித்து முழுகி பாண்டி சாமி வரவுக்காக சாம்பிராணி புகைய விட்டு காத்திருப்பார்கள். இரவில் பாண்டி சாமி வந்து தங்கி திரும்ப காலையில் சென்று விடுவதாக ஒரு நம்பிக்கை உள்ளது காலையில் இவர்களிடம் கேட்கும்போது பாண்டி சாமி தன்னோடு இருந்து உறவாடியது, ஊஞ்சலாடியது என்று மறுநாள் காலையில் சொல்வார்கள். அருகில் யாரும் இல்லாத போது ஆள் இருப்பதாகக் கருதிக் கொண்டு பேசுவதை சிரிப்பதை ஸ்கிசோஃப்ரினியா என்ற மனநோய் என உளவியல் நிபுணர்கள் கூறுவதுண்டு. ஆனால் இந்த பாண்டி சாமி பிடித்தவர்கள் சிலர் குறி சொல்வதும் உண்டு; பிறருக்கு விபூதி கொடுத்து பிறருடைய குறையை ஆற்றுகின்றனர். இதுபோன்ற சில விஷயங்களை

பார்க்கும் பொழுது இவர்கள் ஒரு *sorceress* போல விளங்குகின்றனர்.

பாண்டி முனி பிடித்தவர்களில் 'பட்ட முனி பிடித்தவர்கள்' என்று ஒரு சிறு பிரிவினர் உண்டு. அந்தப் பட்ட முனி பிடித்தவர்கள் எந்த நாளிலும் கணவனை அருகில் அனுமதிப்பது கிடையாது. கணவன் என்று ஒருவர் அந்த வீட்டிற்குள் நுழையவே முடியாது. இப்பெண்களும் பாண்டி சாமியுடன் கற்பனையில் ஒரு வாழ்க்கை நடத்துகின்றனர். மன நோய் நிபுணரிடம் இவர்கள் குறித்து கேட்டால் 'இவர்கள் வழிபடப் பட வேண்டியவர்கள் அல்லர் சிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்கள்' என்பார்.

இயேசு கிறிஸ்துவின் வின் மணவாட்டி நான்

கிறிஸ்தவ மதத்தில் இயேசுவை மணவாளனாக கொண்டு தன்னை மணவாட்டியாக கொண்டு பாடல்கள் பாடுவதும் ஜெபிப்பதும் திருமறையில் இது சார்ந்த சில வசனங்கள் இருப்பதும் நடைமுறையில் உள்ளது. உன்னதப்பாட்டு என்ற பகுதி மிஸ்டிக் லவ் என்று சொல்லப்படும். இது இறைமை காதலை பற்றியது. இதில் ஆண்டவர் தான் தேர்ந்தெடுத்து அன்பு செலுத்திய இஸ்ரவேலரை நேசித்த விதம் ஒரு காதலன் தன் காதலியை நேசித்தது போல் இருக்கின்றது என்பதாகவும் ஆண்டவரை ஆணாகக் கொண்டு திருச்சபையை பெண்ணாக கொண்டு பாடப்பட்ட பாடல் என்றும் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

உன்னதப்பாட்டதில் தன் நேசரைத் தேடும் ஒரு பெண்ணிடம்

உன் நேசர் மற்றவர்களை விட சிறந்தவரா? என்று கேட்கும் போது அவள்

என் நேசர் சிவப்பானவர்;

அவரது தலை சுத்தமான தங்கத்தை போன்றிருக்கும்;

அவரது கன்னங்கள் மணம் மிகுந்த வாசனை பூக்கள் நிறைந்த தோட்டம் போல் இருக்கும்;

அவரது உதடுகள் லீலி மலர்களைப் போல் இருக்கும்

அவரது கைகள் ஸ்படிக பச்சை நகைகளால் அலங்கரிக்கப் பட்டது போல இருக்கும்

என்கிறாள். அந்த நேசர் இந்த பெண்ணைப்பற்றி வருணிக்கும்போது

என் அன்பே என் மணமகளே

உன் அன்பு மிக அழகானது

உன் அன்பு திராட்சை ரசத்தை விட சிறந்தது

என் அன்பே நீ எருசலேமை போன்று இனிமையானவள்

கம்பீரமான நகரங்களை போன்றவள்

எனக்காக ஒரே ஒரு பெண்ணே இருக்கிறாள்;

எனது புறாவே

நீயே எனது பரிபூரணமானவள்

என்று கூறுகிறார். இதில் வரும் திராட்சை ரசம் இறையன்பை குறிக்கும் குறியீடாகும். சூஃபி தத்துவத்தில் இறையன்பு திராட்சை ரசமாகவே குறிக்கப்படுகிறது. உமர் கய்யாமின் பாடல்கள் *epicurean philosophy* பற்றியது அல்ல. அவை இறைவனும் மனிதனும் ஆணும் பெண்ணுமாக காதல் கொள்வது போல புனையப்பட்டவை ஆகும்.

ஆண்டவர் காட்டும் பொது அன்பும் தனி அன்பு



கிறிஸ்தவ சமயத்தில் ஆண்டவர் எல்லோரிடத்திலும் காட்டும் பொதுவான அன்பு அகபே [agabe] என்ற சொல்லால் பழைய ஏற்பாட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேலரை மட்டும் தேர்ந்தெடுத்து அவரிடத்தில் காட்டும் அன்பு kerene என்ற கிரேக்கச் சொல்லால் புதிய ஏற்பாட்டில் விளக்கப்பட்டுள்ளது. அவன் அருளால் அவன் தாள் வணங்கி என்று சைவ சமயக்குரவர் சொல்வது போல அவன் அருள் இருந்தால் மட்டுமே அவனை வணங்கவும் அவன் திருப்பாதங்களை சென்றடைய முடியும் என்பதால் அவன் அருளால் அவனை வணங்குதல் என்பது kerene என்ற அன்பு வகையைச் சார்ந்ததாகும். இந்த வகையைச் சார்ந்தது தான் இறைமை காதலை விவரிக்கும் காதல் பாட்டான உன்னதப்பாடல்கள்.

உரோம கத்தோலிக்க சமயத்தில்...

இறைவனை மணவாளனாகவும் தன்னை மணவாட்டியாக கருதுகின்ற போக்கும் கத்தோலிக்க மதத்தில் உண்டு. கத்தோலிக்க மதத்தில் கன்னியாஸ்திரியாக மடத்தில் சேரும் பெண்கள் தங்களை மணவாட்டியாகக் கருதி கோயிலுக்கு மணவாளனுக்கு திருமணத்தின் போது எடுத்துச் செல்கின்ற தூப கலசங்களைக் காணிக்கையாகக் கொண்டு செல்வர். இவர்கள் இறைவனையே மணவாளனாக ஏற்றுக் கொண்டதால் வேறு மானிடரை திருமணம் முடிக்க மாட்டார்கள்.

முஸ்லிம் மதத்தில் இறைக் காதல்

இந்து கிறிஸ்தவ மதங்களைப் போல முஸ்லிம் மதத்திலும் பெண்கள் தங்கள் கணவன்மார் அல்லாத ஒரு மாற்று சக்தியிடம் காதல் கொள்ளும் பாரம்பரியம் இருந்து வந்துள்ளது. அவர்கள் பள்ளிவாசலில் அடங்கியுள்ள அவுலியாக்கள் மீது காதல் கொள்ளும் சம்பவங்கள் நாவல்களில் காணக்கிடைக்கின்றன. மதுரை அருகே திருப்பரங்குன்றத்தில் உச்சியில் காணப்படும் சிக்கந்தர் பள்ளிவாசலில் சிக்கந்தர் என்ற தளபதி அடங்கியுள்ளார். அந்தத் தளபதி அங்கு வந்து தங்கும் ஒரு இளம் பெண்ணிடம் காதல் கொண்டு இருப்பதாக சம்பவங்கள் உண்டு.

மதுரை இஸ்மாயில் புரத்தைச் சேர்ந்த எழுத்தாளர் எஸ். அர்ஷியா தன்னுடைய இஸ்லாமிய சமுதாயத்தைப் பற்றி விரிவாக இரண்டு மூன்று நாவல்கள் எழுதியுள்ளார். அதில் அப்பாஸ்பாய் தோப்பு என்ற நாவலில் ஒரு பெண் எவ்வாறு சிக்கந்தர் பள்ளிவாசலில் இரவில் அடிக்கடி தங்குவதும் அப்போது சிக்கந்தர் அவுலியாக்கள் அவளோடு வந்து உறவாடுவதும் விளக்கப்பட்டுள்ளது. அவளுக்கு வரன்

பார்த்த காலத்தில் இருந்து அவள் கணவன் இறக்கும் வரை இச்சம்பவம் நடந்துள்ளது. நாவலில் விளக்கப்படும் அந்த பகுதி வருமாறு

“வரன் வேண்டும் என்று வேண்டிக்கொண்டு அடுத்தடுத்து அவள் போய் மலைமேல் தங்கும்போது அவளால் புதுப்புது விஷயங்களை உணர முடிந்தது. அவள் அருகில் சிக்கந்தர் அவுலியா இருப்பதாக அவளுக்குள் நினைவு தளும்பும்; அவர்களுக்குள் அவள் தஞ்சம் புகுந்து இருப்பது போலவும் பாதுகாப்பு வளையத்தில் அவளை ஆகர்ஷித்து வைத்து அவர் அபயம் அழிப்பது போலவும் உணர்வு எழும்பும்.

பல இரவுகளில் அவள் மடியில் அவர் தலை வைத்துப் படுத்திருப்பார். அதை அவள் யாரிடமும் சொன்னதில்லை. சொன்னால் நம்ப மாட்டார்கள் என்பதை விட தன்னை பொறாமையுடனும் அல்லது தள்ளிவைத்து பார்ப்பார்கள் என்பதை அவர் உணர்ந்திருந்தாள். சொல்லாமல் இருப்பதே அவளுக்கும் சௌகரியமாக இருந்தது அதனாலேயே அவளை ஏற்றிருந்தாள்.” [அப்பாஸ்பாய் தோப்பு, ப.70]

இவ்வாறான விஷயங்கள் அனைத்து மதங்களிலும் கம்பீரமாக ஆணின் மீது பெண்கள் காதல் கொள்ளும் பழக்கம் இருந்திருப்பதால் ஆண் படைப்பாளிகள் எம்.ஜி.ஆரை ரசிக்கும் பெண்களை அவர் மீது காதல் கொள்ளும் பெண்களாகவே கண்டு விமர்சனங்களை எழுதி குவித்துவிட்டனர்.

எம் ஜி ஆர் மீது பெண்களுக்கு காதலா?

கம்யுனிச எழுத்தாளர்கள் எம்.ஜி.ஆர். மீதும் பெண்கள் காதல் கொள்வதாக கருதி பல படைப்புகளை படைத்துள்ளனர். ஆனால் உண்மையில் எந்தப் பெண்ணும் எம்.ஜி.ஆர். ‘என் ஆத்ம நேசர்’ என்று நினைப்பது

கிடையாது. எம்.ஜி.ஆரை போல ஒரு மகனோ சகோதரனோ ஒரு பொறுப்பான கணவனோ இருந்திருந்தால் வாழ்க்கை நன்றாக இருக்குமே என்று நினைப்பார்களே தவிர எம்.ஜி.ஆரையே தன்னுடைய கணவனாக காதலனாக மாற்றிக் கொள்வது கிடையாது. எங்கேயோ ஓரிரு விதிவிலக்குகள் இருக்கலாம். விதிவிலக்குகள் எல்லாம் விதிகள் ஆகிவிடாது. இவற்றை உணராமல் எம்.எஸ்.எஸ் பாண்டியன் என்பவர் தனது இமேஜ் ட்ராப் என்ற நூலில் எம்.ஜி.ஆர். படங்களை பார்க்கும் பெண்கள் பாலியல் பரவசநிலை பெறுவதாக சுட்டி இருப்பது தவறான நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த கருத்தாகும்.

சினிமாவுக்கு போன சித்தாளு

ஜெயகாந்தனின் சினிமாவுக்கு போன சித்தாளு கதையில் சித்தாள் வேலை பார்க்கும் ஒரு பெண் ரிக்ஷா ஓட்டும் தன் கணவனை எம்.ஜி.ஆர். ஆகவே கருதி நேசிப்பாள். அவள் மனதில் எம்.ஜி.ஆர். என்ற பிம்பம் மிக ஆழமாக பதிந்து விட்டால் அவள் எம்.ஜி.ஆரை தான் நேசிக்கிறாள் என்று நினைத்து அவள் கணவன் அவளை வெறுத்து பேசுவான். எம்.ஜி.ஆர். கொலை முயற்சிக்கு ஆளானது தெரிந்ததும் அந்தப் பெண்ணுக்கு பைத்தியம் பிடித்துவிடும். ஆனால் அவள் கணவன் அவளை ஏற்றுக் கொள்வான். இவ்வாறாக அந்த கதை முடிந்தது.

இந்தக் கதை பற்றி எம் ஜி ஆரிடம் சொன்னபோது எம்.ஜி.ஆர். "எங்கேயோ ஓரிரண்டு இடங்களில் இவ்வாறு நடக்கலாம்; அதை ஏன் நாம் பெரிதுபடுத்த வேண்டும். விட்டுவிடுங்கள்" என்று சொல்லிவிட்டார். இதனால் ஜெயகாந்தன் மீது அவர் எந்த ஒரு எதிர்ப்பையும் காட்டவில்லை. ஆனால் ஒரு சில வருடங்களுக்குப் பிறகு ஜெயகாந்தன் எழுத்துலகை விட்டு விலகிவிட்டார்.

சு சமுத்திரத்தின் தொடர் கதை

எம்.ஜி.ஆர் .இறந்த பிறகு சு. சமுத்திரம் ஒரு தொடர் கதையை வார இதழில் எழுதினார். அதில் எம்.ஜி.ஆரை நேசிக்கும் ஒரு பெண் அவர் இறந்ததும் அவருடைய உடலை பார்க்க சென்னைக்கு வந்து சென்னை கடற்கரையில் அவருடைய சமாதி அருகில் அழுதுகொண்டே இருப்பாள். அப்பொழுது குப்பத்து ஆண்களால் அவளுடைய பெண்மைக்கு பங்கம் ஏற்படும். அவ்வமயம் அவள் எம்.ஜி.ஆர். வந்து தன்னைக் காப்பாற்றுவார் என்று கதறி அழுவதும் ஆனால் எம்.ஜி.ஆர். வந்து அவளை காப்பாற்றாததால் அவள் பைத்தியம் பிடித்து அங்கு அலைவதாகவும் அந்தக் கதையை எழுதி இருப்பார்.

எம்.ஜி.ஆர். ரசிகை என்றால் வேண்டாம்

பல ஆண்கள் எம்.ஜி.ஆரை ரசிக்கும் பெண்களை தவறானவர்கள் என்று கருதுவது ஒரு நடைமுறை போக்காக இருந்தது. ஒரு நல்ல ஆண்மகன் அல்லது ஒரு லட்சியவாதி அல்லது ஒரு முன் மாதிரியாக விளங்கும் கதாபாத்திரத்தில் நடிப்பதால் பெண்கள் அவரை காதலிக்கின்றனர் என்று நினைப்பது தவறான நம்பிக்கை ஆகும். இது ஒருவகையான ஆணாதிக்க போக்கு.

கற்பு பற்றி பழந்தமிழ் இலக்கியங்களில் புராணங்களில் விளக்கும்போது பிறர் நெஞ்சு புகா கற்பு என்று ஒரு சொற்றொடர் வரும். ஒரு பெண் தன் கணவனைத் தவிர வேறு ஒருவனை நினைப்பது தவறு என்பது போல பிற ஆடவனும் தன்னை நினைப்பதும் தன்னுடைய கற்புக்கு களங்கம் என்ற கருத்தாக்கம் ஒரு காலத்தில் இருந்தது. எனவே, எந்த பெண்ணும் தன் கணவனைத் தவிர வேறு எவரையும் தன் மனதளவில் கூட விரும்பக் கூடாது என்ற ஆழமான எண்ணம் ஆண்களிடையே ஏற்பட்டது.

‘உனக்கு பிடித்த நடிகர் யார் என்று கேட்டால் கூட 30 ஆண்டுகளுக்கு முன்பு பெண்கள் எவரும் ஆண் நடிகர்களின் பெயரை சொல்ல மாட்டார்கள். நடிகைகளின் பெயர்களை மட்டும் தான் குறிப்பிடுவர். ஆனால் இன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பெண்களிடம் உங்களுக்கு பிடித்த நடிகர் யார் என்று கேட்டால் அவர்கள் சூர்யா, விஜய், அஜித் என்று தாராளமாக சொல்கின்றனர். அருகில் கணவரை வைத்துக் கொண்டே செல்கிறார்கள். எந்த கணவரும் இதற்காக கோபித்துக் கொள்வது கிடையாது. இப்போது இருக்கும் சிந்தனை மாற்றம் எம்.ஜி.ஆர். நடிக்கும் காலத்தில் இல்லாததால் எனக்கு பிடித்த நடிகர் எம்.ஜி.ஆர். என்று சொல்வதற்கு பெண்கள் தயங்கினர்.

பொய் பிம்பத்தை உடைத்தெறிந்த பெண்கள்

ஒரு பெண் எம்.ஜி.ஆர். பிடிக்கும் என்று சொன்னாலே அந்தப் பெண் தவறானவள் என்று கருதி எம்.ஜி.ஆர். படத்துக்கு போகும் பெண்ணை திருமணம் செய்யக் கூடாது என்று சில எழுதப்படாத சட்ட திட்டங்களையெல்லாம் இளைஞர்கள் கொண்டிருந்த காலம் ஒன்றிருந்தது. எம்.ஜி.ஆர். படத்தில் காதல் காட்சிகளில் எம்.ஜி.ஆர். நெருங்கி நடிப்பார் என்பதால் அவர் படத்திற்கு பெண்களை அழைத்துச் செல்லக் கூடாது என்று பேசி வந்த காலமும் இருந்தது. ஆனால் இந்த போலியான எண்ணங்களை, தவறான நம்பிக்கைகளை எல்லாம் முறியடித்து எம்.ஜி.ஆரை முதலமைச்சர் ஆக்கியவர்கள் அவருடைய ரசிகைகள் என்பது முற்றிலும் உண்மை. எம்.ஜி.ஆர் என்பவர் சினிமா பிம்பம் அல்ல அவர் நிஜத்தில் நல்லவர் என்பதை சமூகத்தின் கண்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டியவர்கள் அவரது ரசிகைகள். உறுதியான முடிவெடுத்து அவருடைய கட்சிக்கு அமோக ஆதரவளித்து

அவரை வெற்றி படிக்கட்டில் ஏற்றிவிட்டவர்கள் அவர்களே.

ஆன்மிகப் புரட்சியும் அரசியல் புரட்சியும் செய்த பெண்கள்

ஆண்களின் ஆணாதிக்க சிந்தனைகளை கட்டுப்பாடுகளை உடைத்து நொறுக்கி அவருக்காக கடவுளிடம் வேண்டி அவரை இரண்டு முறை பிழைக்க வைத்தவர்கள் அவருடைய ரசிக ரசிகைகள். அவர் காலத்தில் நல்லவர் என்று பெயர் பெற்ற நடிகர்களையும், தலைவர்களையும் விட இன்றுவரை அவரை நல்லவர் என்று மக்களின் நினைவில் நிறுத்தி அவருக்கு கோயில் கட்டி அவரை தெய்வமாகவும் வாழ்வின் வழிகாட்டியாக முன்னோடியாகவும் கொண்டு அடுத்த தலைமுறையினரை அதற்கு தயார்படுத்தி வைத்திருப்பவர்கள் ரசிகையர் மட்டுமே. இது வேறு எந்த நடிகருக்கும் தலைவருக்கும் உலகில் எங்கேயும் யாருக்கும் கிடைக்காத பெரும்பேறு ஆகும் .

ரசிக வாரிசுகள்

பெண்கள், தங்கள் பிள்ளைகளையும் பேரக் குழந்தைகளையும் எம்.ஜி.ஆர். ரசிகர்களாக வளர்த்தனர். ஒரு பெண் படித்தால் ஒரு குடும்பமே படித்ததாகும் என்றார் ராஜாஜி. ஒரு பெண் எம்.ஜி.ஆர். ரசிகையாக இருந்தால் அவருடைய பிள்ளைகளும் பேரக்குழந்தைகளும் எம்.ஜி.ஆர். ரசிகர்களாகவே வளர்க்கப்படுவர். அதனால்தான் எம்.ஜி.ஆர். காலத்துக்கு பிறகு பிறந்த ஆண்கள் கூட எம்.ஜி.ஆர். ரசிகர்களாக இருக்கின்றனர். இன்றும் எம்.ஜி.ஆர். விழாக்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகின்றன. எம்.ஜி.ஆர். நினைவு நாள் மற்றும் பிறந்த நாளன்று அவரை ஏழை எளிய மக்களும் நினைவு கூர்கின்றனர்.

ரசிப்பில் இருந்து பக்தி என்ற ஏற்றம்

எம்.ஜி.ஆர். ரசிகைகள் ரசிப்பது ஏதோ கற்புக்கு கேடு விளைவிக்கும் செயல் என்ற நிலை மாறி எம்.ஜி.ஆர். ஒரு தலைவர் ஒரு தெய்வம் என்ற நிலைக்கு அவரை உயர்த்தியவர்கள் அவருடைய ரசிகர்கள் மற்றும் அதில் சம பங்கு கொண்ட அவருடைய ரசிகைகள் என்று உறுதியாகச் சொல்லலாம். எம்.ஜி.ஆர். இரசிப்பது கற்புக்கு கேடான செயல் அல்ல ஒரு நல்ல மனிதருக்கு அளிக்கும் நியாயமான ஆதரவு என்பதை இன்றைக்கு புரியவைத்தவர்கள் எம்.ஜி.ஆர். ரசிகைகள். அவர் நடித்த காலத்தில் எம்.ஜி.ஆர். ரசிகர்களை பற்றி எம்.ஜி.ஆர். புரிந்து கொண்டிருந்த அளவுக்கு எதிர்க்கட்சியினரும் எதிரணியினரும் புரிந்து கொள்ளவில்லை.

எம்.ஜி.ஆர். தன்னை ரசிக்கும் பெண்கள் மற்றும் தாய்க்குலம் தன்னை கைவிட மாட்டார்கள் என்றும் தன்னை நினைவில் வைத்திருப்பர் என்று நம்பினார். பெண்களின் அன்பு என்றைக்கும் வாழவைக்கும் என்பதை என்றும் எம்.ஜி.ஆர். உறுதியாக நம்பியதால் தான் என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே என்று கூட்டங்களில் அவர்களை குறிப்பிட்டார். அவர் நம்பிக்கை உண்மை ஆயிற்று. இன்றளவும் ஒரு தாய் தன் பிள்ளைகள் மற்றும் தனது பேரப் பிள்ளைகள் மனதில் எம்.ஜி.ஆர். நல்லவர் என்ற விதையை விதைத்தார். அந்த விதையே தலைமுறை தலைமுறையாக எம்.ஜி.ஆரை மக்கள் தலைவராக இதய தெய்வமாக வாழவைத்துக் கொண்டிருக்கிறது.


எம்.ஜி.ஆர். நல்லவர் என்ற பெயர் பெற்றதோடு கெட்டவன் என்ற பெயர் பெறாமல் வாழ்ந்தார். அவர் இறந்த பின்பு கருணாநிதி முதல்வரானதும் எம்.ஜி.ஆர். தன பெயரிலோ தனது உறவினர்கள் பெயரிலோ எங்கேனும் சொத்து வாங்கியிருக்கிறாரா என்று தன் கட்சியினரை அனுப்பி

தகவல் சேகரிக்க சொன்னார். அவர்கள் வெறுங்கையுடன் திரும்பி வந்தனர். எம்.ஜி.ஆர். முதல்வரான பிறகு ஒரு இடத்தில் கூட தன் பெயரிலோ தனது உறவினர்கள் பெயரிலோ சொத்து வாங்கியிருக்கவில்லை. தனது சொத்துக்களை மக்களுக்கும் கட்சிக்கும் எழுதி வைத்து விட்டு இறந்தார்.

பெண்கள் எம்.ஜி.ஆரை நல்லவர் என்று நினைத்தே ரசித்தனர் மதித்தனர். அவருடைய உடல் நலத்துக்காகவும் வெற்றிக்காகவும் கடவுளை வேண்டினர். ஆணாதிக்க உணர்வுடைய ஆண்கள் எம்.ஜி.ஆர். மீது பெண்கள் வைத்திருந்த அன்பையும் மதிப்பையும் தவறான கண்ணோட்டத்தில் விமர்சித்தனர். அவர்களுடைய விமர்சனமும் கண்ணோட்டமும் தவறு என்பதை காலம் அவர்களுக்கு தெளிய வைத்துவிட்டது. பெண்களின் கணிப்பு சரி என்பதை காலம் நிரூபித்துவிட்டது.



எம்.ஜி.ஆர். பெண்கள் மீது வைத்திருந்த அன்பும் மதிப்பும் நம்பிக்கையும் வீண் போகவில்லை. அதை போல பெண்களும் எம்.ஜி.ஆர். மீது வைத்திருந்த நம்பிக்கையை அவர் எக்காலத்திலும் கெடுத்துக் கொள்ளவில்லை. அவர்களின் ஆழமான நம்பிக்கைக்கு உரிய மக்கள் தலைவராகவே அவர் கடைசி வரை வாழ்ந்தார்; இன்றைக்கும் அவர்களின் இதய தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.



5. எம்.ஜி.ஆர் படத்தில் முத்தக்காட்சி

நடிகை ஸ்ரீதேவியிடம் எடுத்த பேட்டி ஒன்றில் எம்.ஜி.ஆர் பற்றிக் கேட்டபோது அவர் எம்.ஜி.ஆர் படத்தில் காதல் காட்சிகள் 'ஸ்வீட்டாக' இருக்கும்' எனக் குறிப்பிட்டார். இதற்கு மேல் துல்லியமாக எம்.ஜி.ஆர் படக் காதல்காட்சிகளை வருணிக்க இயலாது. அவர் ஒரு நடிகை என்பதாலும் சிவாஜி, என்.டி.ஆர், நாகேஸ்வரராவ் போன்ற மூத்த நடிகர்களோடு காதல் காட்சிகளில் நடித்தவர் என்பதாலும் எம்.ஜி.ஆர் படக் காதல்காட்சிகளை 'ஸ்வீட்' என்று குறிப்பிட்டிருந்தார்.

எம்.ஜி.ஆர் படங்களில் காதல் பாடல்களில் முத்தக்காட்சிகள் இலைமறைக் காயாக, பூடகமாக இடம் பெற்றன. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

தெய்வத்தாய் படத்தில் இன்ஸ்பெக்டர் மாறனாக நடித்தார் எம்.ஜி.ஆர். இப்படத்தில் ஒரு பாடல் காட்சியில் இரண்டு முத்தக் காட்சிகள் வரும். எம்.ஜி.ஆர், சரோஜாதேவியிடம் ***"அத்திப்பழக் கன்னத்திலே கிள்ளிவிடவா"*** *என்று கேட்டதற்கு, அவர் கோபமாக* ***'இந்த ஊரை'எல்லாம் நானழைத்துச் சொல்லிவிடவா'*** *என்பார். அதற்கு எம்.ஜி.ஆர்* ***'அல்லிவிழி துள்ளிவிழ கோபம் என்னவோ'*** *என்று 'இதற்கு ஏன் கோபித்துக் கொள்கிறாய்' என்பார். அதற்கு சரோஜாதேவி,*

"அஞ்சி அஞ்சி கொஞ்சுவதில் லாபம் என்னவோ' *என்று பதில் கூறுவார். இந்தப் பாடலில் சரோஜாதேவி கோபிப்பதற்கான 'லாஜிக்' புரியவில்லை. 'அத்திப்பழக் கன்னத்திலே' பாட்டில் எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் இருபுறமும் கையை நீட்டி விரல்களைக் கோத்து முகமுகமாகப் பார்த்து நிற்பார்கள். அப்போது எம்.ஜி.ஆரின் முதுகுப்பகுதி நமக்குத் தெரியும் இருவரின் முகமோ முகபாவங்களோ படம் பார்ப்பவருக்குத்*

தெரியவில்லை என்றாலும் அப்போது முதல் முத்தம் பரிமாறப்பட்டது என்பதை ஊகிக்கலாம். அடுத்து ஒரு காட்சியில் இருவரும் ஒரு மறைப்புக்குப் பின்னிருந்து வெளியே வருவார்கள் அப்போது முத்தம் பெற்றதற்கான முகபாவம் சரோஜாதேவியிடம் வெளிப்படும் காட்சியில் மகிழ்ச்சியுடன் தோன்றும் சரோஜாதேவி பாடலில் கன்னத்தில் கிள்ளியதற்கு கோபம் தெரிவிப்பது என்பது சமீப காலம் வரை புரியாத புதிராக இருந்தது.

அண்மையில் அத்திப்பழக்கன்னத்திலே என்ற பாடல் சென்சார் செய்யப்பட்ட பாடல் என்பதைப் படித்த பின்புதான் மூடிக்கிடந்த ரகசியம் வெளிப்பட்டது. 'அத்திப்பழக் கன்னத்திலே முத்தம் இடவா' என்று முதலில் பாடல் எழுதப்பட்டு ஒலிப்பதிவு செய்யப்பட்டு பாடல்காட்சியும் எடுத்துவிட்டனர். அதனால் பாடல் காட்சியில் முத்தக் காட்சிகளும் சேர்க்கப்பட்டன. சென்சாரில் 'முத்தம் இடவா' என்ற தொடரை அனுமதிக்காததால் பின்பு 'கிள்ளி விடவா' என மாற்றினார்.

'முத்தம் இடவா' என்று கேட்டதற்கு சரோஜாதேவி கோபப்பட்டு, இந்த ***'ஊரை எல்லாம் நான் அழைத்துச் சொல்லிவிடா'*** என்று கேட்டிருக்கிறார். அதற்கு மறுமொழியாக எம்.ஜி.ஆர் 'ஏன் இந்தக் கோபம் என்று கேட்க திருமணம் செய்யாமல் இப்படிப் பயந்து பயந்து கொஞ்சிக் கொண்டிருக்க முடியுமா என்று பதிலளித்துள்ளார். இப்போது பாட்டின் கருத்தும் கதாநாயகியின் கோபத்துக்குக் காரணமும் தெளிவாயிற்று.

பணக்காரக் குடும்பத்தில்

'பணக்காரக் குடும்பம்' படத்தில் ஒரு பாடல் முத்தத்தில் தொடங்கி அதன் உணர்வுகளை விளக்குவதாகத் தொடரும். ஆனால், முத்தமிடும் காட்சிப் பூடகமாகக் கூடக்

காட்டப்பட்டிருக்காது. வெளியே ஒரே மழை. ஒரு மாட்டுவண்டியின் அடியே எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் மழைக்கு ஒதுங்கி உட்கார்ந்திருப்பார்கள். எம்.ஜி.ஆர் சரோஜாதேவியை முத்தமிட நெருங்கி வருவார். அடுத்த காட்சியில் சரோஜாதேவி பாடத்தொடங்குவார்.

"இதுவரை நீங்கள் பார்த்த பார்வை இதற்காகத்தானா? இப்படியென்று தெரிந்திருந்தால் தனியே வருவேனா? என்று கேட்கும்போது 'இதற்காக' என்பது 'முத்தத்திற்காக' என்பது பார்வையாளருக்குத் தெரிந்துவிடும்.

"அதுவரை வந்தால் போதும் போதும்

அடுத்தது என்னம்மா?

ஆரத்தி மேளம் மணவறை கோலம்

வருமா சொல்லம்மா?

என்று கேள்வியாகவே பதில் அளிப்பார் 'அதுவரை' என்று குறிப்பிட்டது 'முத்தம் மட்டும்' பெற்றால் போதும் என்று சொல்வதாகப் பார்வையாளர் உணர்ந்துகொள்ளலாம்.

சரோஜாதேவி இந்தப் பாட்டில் தான் பெற்ற முத்தத்தின் மகிழ்ச்சியை

"அம்மம்மா இது புதுமை – நான்

அறியாதிருந்த ...... (சிரிப்பார்)

பேச முடியாத பெருமை – இந்த

இனிமை இனிமை இனிமை

என்று இனிமையான முத்தத்தை ரசித்துப் பாடியிருப்பார். இந்தப்பாட்டில் முத்தம் இடம் பெற்றதை சரோஜாதேவியின் முகபாவத்திலும் மகிழ்ச்சியிலும் ஊகித்து அறியலாம்.

பணம் படைத்தவனில்

"அந்த மாப்பிள்ளை காதலிச்சான் கையைப் புடிச்சான்" எனத் தொடங்கும் பாடல் எம்.ஜி.ஆரும், கே.ஆர்.விஜயாவும் பாடுவதாக 'பணம் படைத்தவன்' படத்தில் இடம் பெற்றது. குளித்துக் கொண்டிருக்கும் விஜயா வீட்டுக்குள் வரும்வரை காத்திருந்தவரை அவர் சீவி முடித்து கொண்டைபோட்டு பூ வைத்து அழகாக சேலை கட்டி வந்தவுடன் ஒரு பீரோ மறைவில் அவருக்கு முத்தம் கொடுப்பார். இந்தக் காட்சியும் அந்த மறைவிடத்துக்குச் செல்வதும் பின்பு வெளியே வரும்போது அவர்களின் முகபாவமும் அங்கு என்ன நடந்திருக்கும் என்பதை ஊகிக்க வைக்கும். இந்த ஊகத்துக்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் ரேடியோவில் கேட்ட பாடல் வரிகள் அமையும்.

"அம்மம்மா என்ன சுகம்

அத்தனையும் கன்னி சுகம்'

என்று எம்.ஜி.ஆர் பாடுவது ஊகித்தது சரிதான் என்று உறுதிப்படுத்தும். ஆனால், சென்சார் இந்த வரிகளை அனுமதிக்கவில்லை எனவே படத்தில் இவை.

"அம்மம்மா என்ன சொல்ல

அத்தனையும் கண்டதல்ல"

என்று மாற்றப்பட்டிருக்கும் இதுபோன்ற சென்சார் தொல்லைகள் காங்கிரஸார் காலத்தில் எம்.ஜி.ஆருக்கு ஏராளமாக இருந்தன.

'அன்னமிட்ட கையில்'

'அன்னமிட்ட கை' படத்தில் தேயிலைத் தோட்டத் தொழிலாளியாக வரும் ஜெயலலிதாவும் எம்.ஜி.ஆரும் ஒரு மலையருவியில் நனைந்து மகிழ்ந்தபடி ***'அழகுக்கு***

மறுபெயர் பெண்ணா’ என்ற பாடலைப் பாடுவர். அப்போது ஒரு பாறையில் இருவரும் சாய்ந்து நின்றபடி முகமுகமாக முத்தம் கொடுக்கும் காட்சி இடம்பெறும். ஜெயலலிதாவின் முகம் தெரியாமல் முதுகுப் படம் பார்ப்பவருக்குத் தெரியும் வகையில் இக்காட்சி அமைக்கப்பட்டிருக்கும். அப்போது எம்.ஜி.ஆரை ஒருதலையாகக் காதலிக்கும் டாக்டர் பாரதி இக்காட்சியைக் கண்டு அதிர்ச்சிக்குள்ளாவார். இதனால் பார்வையாளர் இக்காட்சியை ரசிக்க முடியாதபடி பின்னால் இசையும் நம்முள் அதிர்ச்சி உணர்வுகளைப் பரப்பிவிடும்.

இதயக்கனியில்

இதயக்கனி படத்தில் ஆடியில் அவசரக் கல்யாணம் முடித்து ஆவணி மாதம் ‘அஞ்சாம் தேதிக்கு’க் காத்திருக்கும் இளம் தம்பதிகளாக எம்.ஜி.ஆரும், ராதா சலூஜாவும் நடித்திருப்பர். ஆவணி மாதம் ஐந்தாம் தேதி பிறந்ததும் விமானத்தில் தேனிலவுக்குப் பறந்துவிடுவர் அடுத்து ***“இன்பமே உந்தன் பேர் பெண்மையோ”*** என்ற பாடல் உச்சஸ்தாயியில் தொடங்கும்’’ இந்தப் பாடல் தொடங்குவதற்கு முன்பு ஒரு முத்தச்சத்தம் கேட்கும். கேட்காதவர்கள் இனிக் கேட்டுப்பாருங்கள். இந்தப் பாடல் காட்சியில் எம்.ஜி.ஆர் தன் கைகளால் இருவரின் வாய்ப்பகுதியையும் மூடியபடி காட்டப்படும் காட்சியில் அவர் ராதா சாலூஜாவுக்கு முத்தம் கொடுப்பார். இந்தக் காட்சிகள் ஏறத்தாழ நொடிக் காட்சி போலவே அமைந்திருக்கும்.

இதழே இதழே தேன் வேண்டும்

‘இதயக்கனி’யில் மனைவியைச் சிறையில் அடைத்ததும் அவரோடு இருந்த சந்தோஷ தருணங்களை எம்.ஜி.ஆர் நினைத்துப் பார்க்கும் காட்சி ‘இதழே இதழே தேன் வேண்டும்’ என்ற முதலிரவுக் காட்சி ஆகும். இப்பாடலில்

சோபாவில் உட்கார்ந்திருக்கும் தன் மனைவியை நோக்கி முகம் குனிந்த எம்.ஜி.ஆர் நிமிரும்போது அவரைப் பார்த்து ராதா சலூஜா கேலியாகச் சிரிப்பார். காரணம், ராதா சலூஜாவின் நெற்றிப் பொட்டு எம்.ஜி.ஆரின் நெற்றியில் ஒட்டியிருக்கும். அந்தக்காட்சி முத்தம் கொடுக்கப்பட்டதை நமக்குக் குறிப்பாக உணர்த்தும்.

சிரிப்பும் சிலிர்ப்பும்

'குடியிருந்த கோயில்' படத்தில் "நீயேதான் எனக்கு மணவாட்டி என்னை மாலையிட்டு கைபிடிக்கும் சீமாட்டி" என்ற பாடலில் செடி மறைவில் எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவுக்கு முத்தமிட நெருங்கும்போது ஜெயலலிதா சட்டென்று விலகிவிடுவார். செடியிலிருந்த ரோஜாப்பூ தான் எம்.ஜி.ஆர் வாயில் சிக்கும். எம்.ஜி.ஆர் ரோஜாமலரைக் வாயில் கவ்வியபடி செடியிலிருந்து வெளியே நகர்வார். இது ஒரு சிரிப்புக் காட்சியாக அமைந்துவிட்டது.

இதுவரை எம்.ஜி.ஆர் தன் காதலிக்கு முத்தம் கொடுத்த மறைமுகக் காட்சிகளைப் பார்த்தோம். இனி எம்.ஜி.ஆருக்குக் கதாநாயகி முத்தம் கொடுக்கும் காட்சியைப் பார்ப்போம். அன்னமிட்ட கையில் எம்.ஜி.ஆர் ஒரு காட்சியில் ஜெயலலிதா அவருக்குக் கன்னத்தில் முத்தமிடுவதாக நாம் உணரத்தக்க வகையில் நடித்திருப்பார். அப்போது முத்தம் பெற்ற கூச்சத்தில் தன் கண்ணைச் சட்டென்று மூடி இதழ்க் கடையோரத்தில் ஒரு புன்னகை காட்டி முத்தத்தினால் பெற்ற சிலிர்ப்பை ஓர் இளைஞரைப் போல தன் முகபாவத்தால் உணர்த்துவார். அனைவரும் ரசிக்கத் தக்க காட்சியாக அது அமைந்திருக்கும்.

ஸ்ரீதேவி ஏன் எம்.ஜி.ஆர் படக் காதல்காட்சிகள் ஸ்வீட்டாக இருக்கும் என்றார் என்பது இப்போது புரிகிறதா..!!

6. *திருமணத்திற்கு 12 ஆண்டுகள் காத்திருந்த எம்.ஜி.ஆர்...!*

திமுக பிரமுகர்களின் முக்கியஸ்தர்களின் பெயர்களும் அவர்களது மனைவிமார்களின் பெயர்களும் வெகு பொருத்தமாக இருப்பதைக் குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. அண்ணாதுரை - ராணி அம்மையார் அடுத்ததாக கருணாநிதி - தயாளு அம்மாள், பின்பு நெடுஞ்செழியன் - விசாலாட்சி (இது முரண் வகையைச் சேர்ந்தது) என்ற பெயர்களின் வரிசையில் ஜானகி - ராமச்சந்திரனும் இயற்கையிலேயே பொருத்தமான பெயராக அமைந்தது. கருணாநிதியும் (தட்சணாமூர்த்தி) நெடுஞ்செழியனும் தம் இயற்பெயரை, கட்சிக்கு வந்ததும் மாற்றிக்கொண்டனர். ஆனால் ஜானகி - ராமச்சந்திரன் என்ற பெயர்கள் பெற்றோரால் அவர்களுக்குச் சூட்டப்பட்ட இயற்பெயர்கள் ஆகும்.



எம்.ஜி.ஆர் - ஜானகி

வி.என். ஜானகி கேரளாவில் உள்ள வைக்கம் என்ற ஊரைச் சேர்ந்தவர். நாராயணனின் மகள். பிராமண குலத்தில் பிறந்தவர். இவரது தந்தையின் சகோதரரான (சித்தப்பா) பாபநாசம் சிவன் கர்நாடக சங்கீத நிபுணர். பல பாடல்களை எழுதி இசையமைத்தவர். இவர் சில காலம் பாபநாசத்தில் வசித்ததால் அந்த ஊர்ப்பெயர் அவர் பெயரோடு ஒட்டிக்கொண்டது. கலைக் குடும்பத்தைச் சேர்ந்த ஜானகி தோழிப்பெண் வேடத்தில் நடிக்கத் தொடங்கி ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணியில் உச்ச நட்சத்திரம் ஆனார். எம்.ஜி.ஆர் திரையுலகில் வாய்ப்புத் தேடிக்கொண்டிருந்த போது ஜானகி பெரிய ஸ்டாராக விளங்கினார். இவர் 1950ல் மருதநாட்டு இளவரசி படத்தில் எம்.ஜி.ஆருடன் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தமானார். அப்போது இருவரது சந்திப்பும் தொடங்கியது.

எம்.ஜி.ஆரின் ஆரம்ப கால சினிமா பயணம்

1936-ல் சதிலீலாவதி படத்தில் இன்ஸ்பெக்டர் வேடத்தில் எம்.ஜி.ஆர் அறிமுகமானார். இந்தப் படம் காப்புரிமை மீறலைப் பற்றிய படம். 28-3-1936இல் வெளிவந்தது. இதைத் தொடர்ந்து சிறு வேடங்களை ஆனால் முக்கியமான துணைக் கதாபாத்திரங்களை ஏற்று எம்.ஜி.ஆர் நடித்து வந்தார். 1947ல் ராஜகுமாரியில் கதாநாயகன் அந்தஸ்து கிடைத்தது. ஆனால், அதன் பிறகும் அவர் அபிமன்யூவில் (1948) அர்ச்சுனன் வேடம், ராஜமுக்தியில் தளபதி வேடம் ரதன்குமாரியில் (1949) பாலதேவன் என்ற துணை கதாபாத்திரங்களில் தான் நடித்தார்.

முதல் ஜோடிப் படம்

ராஜகுமாரிக்கு அடுத்து அவர் கதாநாயகனாக நடித்த படம் மோகினி. இதில் வி.என்.ஜானகி இவருக்கு ஜோடியாக

நடித்தார். டி.எஸ்.பாலையா வில்லனாக நடித்தார். படம் திட்டமிடப்பட்ட போது எம்.ஜி.ஆர் வில்லனாகவும் பாலையா கதாநாயகனாகவும் நடிப்பதாக இருந்தது. ஆனால், எம்.ஜி.ஆர் தயாரிப்பாளர் மனதை மாற்றி ஜானகியை ஜோடியாக ஏற்றார். அப்போதே அவருக்கு ஜானகியை மிகவும் பிடித்திருந்தது. ஆனால் அவருடன் பேச முடியாதபடி அவருக்குக் காவல் பலமாக இருந்தது. அவருடைய தாய்மாமா ஜானகியைக் கைதி போல நடத்தினார். ஜானகிக்கு ஓர் ஆண் குழந்தையும் இருந்தது.

மருத நாட்டு இளவரசி (1950)

காண்டிபன் என்ற சாதாரணக் குடியானவனாக எம்.ஜி.ஆர் நடித்திருந்தார். மாறுவேடத்தில் காட்டுக்கு வந்து அவரைக் காதலிக்கும் இளவரசியாக ஜானகி நடித்திருந்தார். கலைஞர் கருணாநிதியை திருவாரூரிலிருந்து வரவழைத்த எம்.ஜி.ஆர் இயக்குநர் காசிலிங்கத்திடம் அறிமுகப்படுத்தி அவரையே கதை,வசனம் எழுத வைத்தார். இந்தப் படம் ஏறத்தாழ அடிமைப் பெண்ணுக்கு முன்னோடி எனலாம். இதில் ஜானகி எம்.ஜி.ஆருக்கு சண்டைப் பயிற்சி அளித்து அவரை ஒரு வீரராக மாற்றுவார். இந்தப் படத்தின் படப்படிப்பின் போது எம்.ஜி.ஆர் ஜானகி காதல் வளர்த்தார். அவரையும் அவர் மகன் சுரேந்திரனையும் கடைசிவரை கண்கலங்காமல் காப்பாற்றுவதாக வாக்குறுதி அளித்தார். ஜானகியின் கொடுமைக்கார மாமாவிடமிருந்து வெளியே கொண்டுவர முனைந்தார். பல பிரச்னைகளை, தடைகளைச் சந்தித்தார்.

தேவகி படப்பிடிப்பில் ஜானகி

ஜானகியும் எம்.ஜி.ஆரும் நேரில் சந்தித்துக் காதலை வளர்க்க முடியாமல் சிரமப்பட்டனர். ஜானகி தேவகி படத்தில் நடிக்க மைசூர் புறப்பட்டபோது அவரைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை இயக்குநர் ஜுபிடர்

சோமுவிடம் ஒப்படைத்தார். சேலத்தில் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் படப்பிடிப்பு நடந்த நாள்களில் அவர் கவனித்துக்கொண்டார். மைசூருக்கு அவுட்டோர் படப்பிடிப்புக்கு ஜானகியுடன் அவரால் போக இயலவில்லை. மைசூரிலிருந்து ஜானகி எம்.ஜி.ஆருக்கு தினமும் கடிதம் எழுதினார். திட்டமிட்டதற்கு ஒருநாள் முன்னாடி படப்பிடிப்பு முடிந்துவிட்டதால் குழுவினருடன் சேர்ந்து மறுநாள் சென்னைக்கு வர விரும்பாமல் அன்றே எம்.ஜி.ஆரைப் பார்க்க கிளம்பி வந்து விட்டார்.

திருமணப் பேச்சுவார்த்தை

எம்.ஜி.ஆர் ஜானகியைத் திருமணம் செய்து கொள்வதில் உறுதியாக இருப்பதை அறிந்த அவர் மாமா சில நிபந்தனைகளை விதித்தார். ஜானகி அதிக சம்பளம் பெறும் டாப் ஸ்டார் என்பதால் அவரது வருமானம் முழுக்க எம்.ஜி.ஆர் தனக்கும் தன் அண்ணனின் பெரிய குடும்பத்துக்கும் (சக்கரபாணிக்கு 9 பிள்ளைகள்) செலவழித்து விடுவாரோ என்று பயந்த ஜானகியின் மாமா எம்.ஜி.ஆரோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள முன்வந்தார். தனது பயம் நியாயமானது என்பதையும் எம்.ஜி.ஆரிடம் தெரிவித்தார். அந்த ஒப்பந்தத்தில் ஜானகி தொடர்ந்து திருமணத்துக்குப் பிறகு நடிக்கலாம். பத்து வருடங்கள் வரை மாமா சொல்லும் படங்களில் ஜானகி நடித்துவர வேண்டும். வருமானத்தையும் அவரிடம் கொடுத்துவிட வேண்டும் என்ற நிபந்தனைகளைக் கேட்டதும் எம்.ஜி.ஆர் கொதித்தெழுந்தார். ஜானகி படத்தில் நடிப்பதை அவரோ விரும்பவில்லை. திருமணத்துக்குப் பிறகு அவள் படத்தில் நடிக்கமாட்டாள் என்று எம்.ஜி.ஆர் உறுதியாகத் தெரிவித்துவிட்டார்.

படப்பிடிப்பில் பேசாத ஜானகி

எம்.ஜி.ஆர் ஜானகியின் மாமாவிடம் கோபித்துக்கொண்டு வந்தபிறகும் இருவரும் இணைந்து நடிக்கும்போதும் ஜானகி எம்.ஜி.ஆரிடம் எதுவும் பேசுவதில்லை. எம்.ஜி.ஆரிடம் பேசுவதில்லை என்று தன் மாமாவிடம் சத்தியம் செய்து கொடுத்திருந்தார். ஆனால், வேலைக்காரப் பையனிடம் "அவர் சாப்பிட்டு விட்டாரா" என்று கேட்டபிறகே, தான் சாப்பிடுவார். புதன், சனிக்கிழமைகளில் "எண்ணெய் தேய்த்துக் குளிக்கச் சொல்" என்று சொல்லி அனுப்புவார். ஜானகியின் மாமா கால தாமதம் செய்து வருவதற்கான காரணம் எம்.ஜி.ஆருக்குப் புரிந்துவிட்டது. இன்னும் சில மாதங்களில் பலதாரமணத் தடை சட்டம் நடைமுறைக்கு வருகிறது. இந்நிலையில் எம்.ஜி.ஆர் ஜானகியைத் திருமணம் செய்வது நடக்காத காரியம். எனவே எம்.ஜி.ஆர் தன்னிடம் பேசாத ஜானகிக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டார். இதற்கிடையே ஜானகியின் மாமா ஜானகியின் வங்கியிருப்பு போன்றவற்றை தன் பெயருக்கு மாற்றிவிட்டார். எம்.ஜி.ஆர் வக்கீலிடம் ஆலோசித்து எந்தப் பத்திரத்திலும் கையெழுத்து போடாதே என்று எச்சரிப்பதற்கு முன்பே மாமா பல பத்திரங்களில் ஜானகியிடம் கையெழுத்து வாங்கிவிட்டார். சொத்தும் பணமும் கைமாறிவிட்டது. பலதாரமண தடைச் சட்டமும் அமலாகிவிட்டது. அதன்பின்பு படப்பிடிப்பின்போது ஜானகியோடு அவரது தந்தை வி. இராசகோபலய்யர் வந்திருக்கிறார். ஜானகியிடம் கால்ஷீட் பெறுவதில் கூட பல பிரச்னைகள் தோன்றின.

ஜானகியைக் காதலித்தது ஏன்?

எம்.ஜி.ஆர்., ஜானகி காதலுக்கு அவரது வீட்டுச் சூழ்நிலையும் முக்கியக் காரணமாக இருந்தது. ஜானகிக்கு அவரது மாமாவால் நிம்மதி இல்லை. எம்.ஜி.ஆருக்கு வேறு

சிக்கல். அவரது மனைவி சதானந்தவதிக்கு கருக்குழாயில் கருத்தங்கி வளர்வதால் கருச்சிதைவு செய்யாவிட்டால் உயிருக்கு ஆபத்தாகும் நிலை. இதைத் தொடர்ந்து அவருக்குக் காச நோயும் வந்துவிட்டது. அன்பும் அழகும் பொறுமையும் கொண்ட சதானந்தவதிக்கு எம்.ஜி.ஆரால் உடனிருந்து பணிவிடை செய்ய முடியாத சூழல். அந்தச் சமயத்தில் அவருடன் படங்களில் நடித்த ஜானகி போகக்போக அவருடன் நட்பாகிறார். அப்போது சதானந்தவதியை ஜானகி உடனிருந்து கவனிக்கத் தொடங்கினார். ஜானகி மீது அவர் காதல் கொண்டதற்கு இதுவும் ஓர் அடிப்படைக் காரணம்.

எம்.ஜி.ஆர் வீட்டில் ஜானகி

எம்.ஜி. சக்கரபாணிக்குத் தன் தம்பி ஜானகியை விரும்புவதும் திருமணம் முடிக்கத் துடிப்பதும் விருப்பமில்லை என்றாலும் தம்பியின் காதலுக்கு அவர் தடை விதிக்கவில்லை. எம்.ஜி.ஆரும் ஜானகியும் ஒருவரை ஒருவர் ஆழமாக நேசிப்பதால் தன் வீட்டுக்கு எதிரே ஒரு வீட்டில் ஜானகியைக் குடியமர்த்தியதை ஏற்றுக்கொண்டார். 1958ல் நாடகமேடையில் எம்.ஜி.ஆர் காலில் அடிப்பட்டதும் எம்.ஜி.ஆர் படுத்த படுக்கையானார். அப்போது அவர்களைப் புரிந்து கொண்ட சக்கரபாணி, எம்.ஜி.ஆர் ஜானகியை வீட்டுக்கு அழைத்து வருவதற்கு சம்மதித்தார். ஜானகியும் சதானந்தவதியும் எம்.ஜி.ஆரின் அண்ணன் அண்ணி பிள்ளைகளும் பல வருடங்கள் ஒன்றாகவே வாழ்ந்தனர்.

எம்.ஜி.ஆர் மனைவி மரணம்

சதானந்தவதி காசநோயால் மிகவும் அவதிப்பட்டபோது எம்.ஜி.ஆரின் குடும்ப வைத்தியர் பி.ஆர்.சுப்பிரமணியம் ஒரு முரட்டு வைத்தியம்

செய்தார். காசநோய் நிபுணர்கள் கைவிட்ட நிலையில் பி.ஆர்.எஸ் போட்ட ஊசிகள் சதானந்தவதியின் ஆயுளைப் பல வருடங்கள் நீடித்தன. கேமராமேன் நாகராஜராவும் எம்.ஜி.ஆரும் தங்கள் மனைவிமாருக்கு ஒரே டாக்டரிடம் காட்டி சிகிச்சையளித்தனர். பிழைத்துக் கொள்வார் என்று சொல்லப்பட்ட நாகராஜராவின் மனைவி மரணம் அடைந்தார். இறந்துவிடுவார் என்று கணிக்கப்பட்ட சதானந்தவதி பிழைத்துக் கொண்டார். 1962ல் எம்.ஜி.ஆர் கலைஞருக்காக தஞ்சையில் பிரசாரம் (பரிசுத்த நாடாரை எதிர்த்து) செய்தபோது சதானந்தவதி இறந்த செய்தி அவருக்குக் கிடைத்தது. அவர் காருக்குப் பின்னால் ஒரு காரில் விரட்டி வந்து நள்ளிரவில் இந்தச் செய்தியைத் தெரிவித்தார்கள். கலங்கிய எம்.ஜி.ஆர் கலைஞரின் பிரசாரக் கூட்டத்தில் பேசி நண்பருக்குரிய கடமையை முடித்துவிட்டு மனைவிக்குரிய இறுதிக்கடனை நிறைவேற்ற சென்னைக்குப் புறப்பட்டார்.

12 வருடம் காத்திருந்த காதலர்கள்

1950ல் காதலிக்கத் தொடங்கி 1962ல் சதானந்தவதி மறைந்த பிறகு இயக்குநர் கே.சுப்ரமணியம் (பத்மா சுப்ரமணியத்தின் தந்தை) தலைமையில் எம்.ஜி.ஆரும் ஜானகியும் திருமணம் செய்து கொண்டனர். அதன் பிறகு இருவரும் ராமாவரம் தோட்டத்துக்குத் தனிக் குடித்தனம் நடத்தக் கிளம்பினர்.

ராமாவரம் தோட்டத்தில்

ஜானகியின் அண்ணன் குழந்தைகள் லதா, சுதா, கீதா, மற்றும் ராதா, அப்புவின் மனைவை நிர்மலா ஆகிய ஐந்து பெண்களும் அங்கு விசக்கின்றனர். இவர்களுக்குத்தான் எம்.ஜி.ஆர் தன் ராமாவரம் வீட்டை உயில் எழுதி வைத்தார்.

எம்.ஜி.ஆர் உயிலில் சொல்லியிருந்தபடி இப்போது ராமாவரம் தோட்டத்தில் காதுகேளாதோர் வாய்பேச இயலாதோர் பள்ளியை ஜானகியின் அண்ணன் மகள் லதா ராஜேந்திரன் நடத்தி வருகிறார்.

பெண் முதலமைச்சர் ஜானகி

இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சராக ஜானகி அம்மையார் தமிழகத்தை 28 நாள்கள் ஆட்சி செய்தார். எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பின்பு முதலமைச்சரான ஜானகிக்கு ராஜீவ்காந்தியும் காங்கிரஸும் சட்டசபையில் ஆதரவு தராததால் நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றிபெற்று அவர் பதவியிழந்தார். தன் பேரில் இருந்த (கட்சி அலுவலகமாக) கட்டடத்தை அதிமுக கட்சி பெயருக்கு மாற்றிக் கொடுத்தார். ஜெயலலிதா அதிமுகவின் பொதுச் செயலாளராகவும் சம்மதித்தார். அவர் இறந்ததும் அவர் உடல் ராமாவரம் தோட்டத்தில் புதைக்கப்பட்டது.

எம்.ஜி.ஆர் ஜானகிக்கு ஜோடி சிலை

ஜானகியின் சகோதரர் ஜானகி பிறந்த ஊரான வைக்கத்தில் எம்.ஜி.ஆர் - ஜானகி ஜோடியாக நிற்பது போல சிலையமைத்துள்ளார். இதுபோன்ற நடிகர்கள் மற்றும் முதல்வர்கள் சிலை உலகத்திலேயே இது ஒன்று மட்டுமே. “ஜானகியின் நாயகனே ராமச்சந்திரா - தர்மம் வெல்லும் என்று சொன்னவனே ராமச்சந்திரா" என்ற திரைப்பாடல் இப்போது நம் காதுகளில் ஒலிக்கிறது.

ஜானகியின் மகன் சுரேந்திரன்

ஜானகியைத் திருமணம் செய்து எம்.ஜி.ஆர் அழைத்து வந்த போது அவர் மகன் சுரேந்திரனையும் சேர்த்து அழைத்து வந்தார். தன் அண்ணன் சக்கரபாணியின் குழந்தைகளுடன் சுரேந்திரனும் சேர்ந்து படித்து வளர்ந்தார். அவருக்கு

ஒளிப்படத்துறையில் அபார அறிவு இருந்தது. ஆயிரத்தில் ஒருவன் படம் பிடிக்கும்போது கப்பல் அசைவதைக் காட்டுவதற்கான கேமரா உத்தி ஒன்றை சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

சுரேந்திரன் தற்போது அமெரிக்காவில் வசிக்கிறார். அவருடைய குழந்தைகளுக்கு செங்குட்டுவன், இளங்கோ, கவிதா என்று எம்.ஜி.ஆர் தமிழ்ப் பெயர்களைச் சூட்டினார். அவர்களில் ஒருவர் மட்டும் வெளிநாட்டுப் பெண்ணை மணந்துள்ளார். எம்.ஜி.ஆரை நம்பி வந்த ஜானகியின் மகனும் அவரது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் நல்லநிலையில் உள்ளனர். எம்.ஜி.ஆரின் ஆதரவில் சிறப்பான வாழ்வைப் பெற்றனர். அவரை நம்பிக் கெட்டவர் எவரும் இல்லை என்ற தொடர் இப்போது நமக்கு நினைவுக்கு வருகிறது. எம்.ஜி.ஆரின் சுயசரிதமான நான் ஏன் பிறந்தேன் நூலின் பதிப்புரிமை எம்.ஜி.ஆருக்குப் பிறகு அவரது மனைவி ஜானகிக்கும் அதன் பின்பு ஜானகியின் மகனான சுரேந்திரனுக்கும் சட்டப்படி மாறியுள்ளது. அந்நூலில் சுரேந்திரனின் குடும்பத்தார் படங்களும் இடம் பெற்றுள்ளன.





7. காதல் பாடல்களில் பெண்களைக் கவர்ந்த எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். நடித்த படங்களில் வரும் காதல் பாடல்களையும் காட்சிகளையும் நாம் மூன்று வகையாக பிரிக்கலாம். முதலாவது 1951 ஒன்று முதல் 1967 வரையிலான காலகட்டம்; இரண்டாவது 1967 முதல் 1972 வரையிலான காலகட்டம்; மூன்றாவது 1972 முதல் 1977 வரையிலான காலகட்டம். அல்லது காங்கிரஸ் ஆட்சிக்காலம்; திமுக ஆட்சிக் காலம்; அண்ணா திமுக காலம் என்று மூன்றாகப் பிரிக்கலாம்.

காங்கிரஸ் காலத்தில் எம்.ஜி.ஆரின் படப் பாடல்கள் காதலின் மேன்மையை எடுத்துக் கூறுவனவாக இயற்கை வர்ணனைகளை அதிகம் கொண்டவையாக இருந்தன. திமுக ஆட்சிக் காலத்தில் காதல் பாடல்களில் காதலி காதலனிடம் வந்து வலிய கொஞ்சி பேசுவதாக பாடல்கள் அமைந்திருந்தன; திமுக ஆட்சிக் காலத்தில் அரசின் சாதனைகளை நாங்க புதுசா கட்டிக்கிட்ட ஜோடிதானுங்க என்ற பாடல் விளக்கியது.

"படியரிசி கிடைக்கிற காலத்தில நாங்க

படியேறி பிச்சை எடுக்க போறதில்ல;

குடிசை எல்லாம் வீடாகும் நேரத்தில நாங்க

தெருவோரம் குடியேற தேவையில்ல"

போன்ற வரிகள் திமுக அரசின் படியரிசி திட்டத்தையும் எடுத்துரைத்தன, இதுவே திமுக ஆட்சிக்கு விளம்பரமாக அமைந்தது.

அண்ணா திமுக 1972இல் தொடங்கிய பிறகு இடையில் 1975இல் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. இதனால் எம்.ஜி.ஆரின் சண்டை காட்சிகளும் காதல் பாடல்களும் கடுமையான தணிக்கைக்கு உள்ளாயின.

காதல் உணர்ச்சி பரிமாற்றம்

ஷேக்ஸ்பியர் காலத்தில் டிராஜெடி எனப்படும் சோகக் காவியங்களை நாடகமாக்கி கொடுத்தனர். அதை கண்டு பார்வையாளர்கள் கண்ணீர் சிந்தினர். இதை ஆங்கிலத்தில் vicarious suffering என்றனர். அது போல தமிழ்ப் படங்களும் சோக சித்திரங்களாக வந்தன. அவற்றை கண்டு சில பெண்கள் கண்ணீர் விட்டு அழுவதுண்டு. இது சினிமா பார்ப்பதில் ஒரு வகை அனுபவம். மகிழ்ச்சியான பாடல்களை பார்ப்பவர் மனதில் மகிழ்ச்சியான உணர்வு இடம் பெற்றது. அதற்காக அவர்கள் படத்தில் வரும் நடிக நடிகையரை காதலித்தனர் என்று சொல்வது அர்த்தமற்ற கருத்தாகும். காதல் உணர்ச்சியை அறிவியல் பூர்வமாக அறிந்துகொண்டால் இந்த குழப்பங்கள் உண்டாகாது.

காதல் உணர்வு பற்றிய அறிவியல் விளக்கம்

காதல் உணர்வு என்பது ஒருவர் மீது மற்றொருவருக்கு ஏற்படும் ஈர்ப்பு [attraction] என்கிறது அறிவியல். இதனால் உண்டாகும் மகிழ்ச்சிக்கும் சுகமான உணர்வுக்கும் காரணம் டோபோமின், செரட்டோனின், ஆக்சிடோசின் போன்ற ஹார்மோன்களின் சுரப்பு தான் என்று அறிவியல் கூறுகின்றது. டோபோமின் என்ற சுரப்பி மூளையின் ஹய்போதேலமஸ் பகுதியில் இருந்து சுரக்கிறது, அது அதிகாலை வேளையில் அதிகமாக சுரக்கும் என்பதால் இச்சுரப்பு மனிதனுக்கு உற்சாகத்தை அளிக்கிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் ஈர்ப்பின்தன்மை உண்டாகும் போது இந்தச் சுரப்பு தான்

சுரக்கிறது. அதனால் தான் அவர்களுக்கு ஒரு வித மயக்கம் தோன்றுகிறது. இந்த சுரப்பு ஆண் பெண் ஈடுபாடு, தவிர விளையாட்டு, இசை அல்லது பாடல் கேட்டல், இசைக்கருவி மீட்டல், நடனமாடுதல் ஆகியவற்றின் போதும் டோபோமின் சுரக்கும். இதனாலும் மனிதர்களுக்கு அதே மகிழ்ச்சி பிறக்கும். இந்த டோபோமின் மனிதனின் மனச்சோர்வை அகற்றி உற்சாகத்தை ஊட்டுவதால் பலரும் காதல் பாடல்களை கேட்க விரும்புகின்றனர். காதல் காட்சிகளை ரசிக்கின்றனர்.

எடுப்பு தொடுப்பு முடிப்பு

எம்.ஜி.ஆர். படத்தின் காதல் பாடல்கள் அழகான ஒழுங்குமுறையுடன் காணப்படும். பல்லவி அனுபல்லவி சரணம் போல எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்ற அமைப்பில் இருக்கும். இருவரிடையிலான ஆவல் எடுப்பு எனப்படும். அந்த ஆவலை நமக்கு புலப்படுத்தும் வகையில் காதல் காட்சியின் ஆரம்பம் அமைந்திருக்கும்.

எடுப்பு – பாடலின் ஆரம்பம்

எம்.ஜி.ஆர். படம் ஆவலை தெரிவிப்பதாகத் தொடங்கும் அந்த ஆவல் வார்த்தைகளால் வசனமாகவோ அல்லது எதிரெதிர் வரும் ஓட்டமாகவோ அமைந்திருக்கும்.

பாடல் ஆரம்பிக்கும் போது எம்.ஜி.ஆரும் கதாநாயகியும் ஒருவரை ஒருவர் பார்க்க ஆவலோடு ஓடி வருவதாக சில பாடல்கள் உள்ளன. அவ்வாறு ஓடிவரும் இருவரும் அருகே வந்ததும் பாட்டைத் தொடங்குவதில்லை. ஒருவரை ஒருவர் நிதானமாக நின்று பார்த்து ரசித்து பின்பு பாடலைப் பாடத் தொடங்குவர். படகோட்டி படத்தில் வரும் ‘தொட்டால் பூ மலரும்’ பாட்டு, இதயக்கனி இல் வரும் ‘இன்பமே உந்தன் பேர் பெண்மையோ’ என்ற பாட்டு

போன்றவற்றை எடுத்துக்காட்டாக கூறலாம். இவ்வாறு ஓடி வந்து நின்று ஒருவரை ஒருவர் நிதானமாக பார்த்தும் ரசித்ததும் எம்.ஜி.ஆர். தன் கதாநாயகியின் தலையை தடவி முகத்தை பார்த்து புன் சிரிப்பு சிரித்து தோள்களை தடவி தன் ஆவலை அவளை கண்டதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார். கூந்தலை நுகர்வார். அப்போது கதாநாயகி வெட்கத்துடன் அவ்விடத்தை விட்டு ஓடுவார். அவரை விரட்டி பிடிக்கும் வகையில் எம்.ஜி.ஆர். பாடல் தொடங்குவார்.

தொடுப்பு –அனுபல்லவி

பார்த்ததும் இருவரும் பாடத் தொடங்குவதில்லை. சில படங்களில் வசனங்கள் வரும் அவை அற்புதமானவை. படகோட்டியில் சரோஜாதேவியை எம்.ஜி.ஆர். தொட வரும்போது அவர் விலகி விடுவார். அப்போது எம்.ஜி.ஆர். கேட்கும் தொடக் கூடாதா என்று கேட்பார். பின்பு தொட்டால் பூ மலரும் என பாடுவார். தேர்த்திருவிழாவில் உன் அன்பு *(anbu)* வாழ்க என்று எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவை பார்த்து சொல்வார். அதற்கு ஜெயலலிதா உங்கள் ஆசை வாழ்க உங்கள் அழகு வாழ்க என்பார் எம் ஜி ஆர், நான் அவ்வளவு அழகாகவா இருக்கிறேன் என்று ஒரு ஐய வினா எழுப்பியதும் ஜெயலலிதா

“அடிக்கட்டுமா முரசு அடிக்கட்டுமா

அழகன் நீதான் நீதான் நீ தான்

என்று அடிக்கட்டுமா” என பாட தொடங்குவார்.

ராணி சம்யுக்தாவில்

எம்.ஜி.ஆரும், பத்மினியும் பேசும் வசனம் வருமாறு:

சம்யுக்தை இனி உலகம் என் கையில்

நானும் கூட

பகைவர்கள் பழித்து பேசுவார்கள்

நண்பர்கள் உயர்த்தி பேசுவார்கள்

காதலன் அணைத்து பேசுவான்

காதலி அழைத்து பேசுவாள் ஆனால் 'நிலவென்ன பேசும்' என்று பாடத் தொடங்குவார்.

தர்மம் தலைகாக்கும் படத்தில் எம்.ஜி.ஆருக்கு ஃபோன் பேசும் சரோஜாதேவி எம்.ஜி.ஆர் பேசாமல் அமைதியாக இருப்பதை கண்டு இப்ப பேசப் போறிங்களா இல்லை ஃபோனை வச்சுடட்டுமா என்று சொன்னதும் எம்.ஜி.ஆர்.,

'ஹலோ ஹலோ சுகமா' என கேட்டு பாடுவார். உடனே 'ஆமா நிங்க நலமா' என பாட்டிலேயே பதில் தருவார் சரோஜா தேவி. இது போன்ற வசனங்கள் மிகுந்த வரவேற்பை பெற்றன.

காதலியை வருணித்தல், நலம் பாராட்டுதல்:

தலைவன் தலைவி என்ற பெயரில் காதலன் காதலியின் வருணனை தொல்காப்பியம் தொட்டு இன்று வரை நலம் பாராட்டல் என்று ஒரு துறை வெகு சிறப்பாக கவிஞர்களால் கையாளப்பட்டு ரசிகர்களால் ரசிக்கப்பட்டு வருகிறது. இறைவனை வர்ணிக்கும்போது பாதாதி கேச வர்ணனை எனப் பாதம் தொட்டு கேசம் வரை வர்ணித்துக் கொண்டே செல்ல வேண்டும். ஒரு மனிதனை வர்ணிக்கும்போது கேசாதிபாத வருணனை முறையில் தலைமுடியில் இருந்து தொடங்கி பாதம் வரை வர்ணிக்க

வேண்டும். இவ்வாறான வர்ணனைகள் எம்.ஜி.ஆர். படங்களில் சிறப்பாக இருக்கும்.

பெண் வர்ணனை பாட்டுக்களில் மிகச் சிறந்ததாக திகழ்வது குற்றால் குறவஞ்சியின் சாயலில் எழுதப்பட்ட உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் வரும் நிலவு ஒரு பெண்ணாகி என்ற பாடலை குறிப்பிடலாம்.

"நிலவு ஒரு பெண்ணாகி நீந்துகின்ற எழிலோ

நீரலைகள் இடம் மாறி உலவுகின்ற அழகோ", என்ற பாடலில்

'புருவம் ஒரு வில்லாக,

பார்வை ஒரு கணையாக,

பருவம் ஒரு காலமாக,

போர் தொடுக்க பிறந்தவளோ'

என்று பாடலாசிரியர் புருவத்தையும் பார்வையையும் கூட வருணித்திருப்பார்..

'மடல் வாழை துடை இருக்க

மச்சம் ஒன்று அதில் இருக்க

படைத்தவனின் திறமை எல்லாம்

முழுமை பெற்ற அழகி என்பேன்'

என இப்பாடல் நிறைவு பெறும்.

எம் ஜி ஆரை காதலி வருணித்துப் பாடுதல் :

காதல் பாடல்களில் ஒருவரை ஒருவர் வர்ணித்தும் ஆண்மை பெண்மை நலன்களை பண்புகளை புகழ்ந்தும் பாடுவதுண்டு. நிஜத்தில் இருவருக்குள்ளும் நடக்கும் உரையாடலை போலவே இப்பாடல்கள் அமைகின்றன.

எம் ஜி ஆரை காதலிகள் வருணித்து பேசுவதற்கென்று சில கருத்துக்களை கவிஞர்கள் வைத்திருந்தனர். அவரது பொன் நிறம் கோடை குணம் இயலாமை கட்டுடல் ஆகிய கருத்துக்களை திரும்ப திரும்ப காதலியின் வருணனையாக பாடச் செய்தனர்.

கதாநாயகி தனது காதல் தலைவனின் அதாவது எம்.ஜி.ஆரின் குணநலன்களை அவரது உறுதியான உடற்கட்டை, இளமை துடிப்பை, பொன் வண்ண மேனியை ரசித்து பாடுவதாக பாடல்கள் எழுதப்பட்டன. சான்றாக பின் வரும் வரிகளை குறிப்பிடலாம்.

“என்றும் இளமை மாறாமல்

வாழும் சரித்திரமே –நீ

எந்தன் தலைவன் என்றென்னும்

எண்ணம் இனித்திடுமே”.

“மன்னவன் உங்கள் பொன்னுடல்

அன்றோ இந்திரலோகம்

அந்தி மாலையில் அந்த மாறன்

கணையில் ஏனிந்த வேகம்”.

“அழகில் நீ ஒரு புதிய கலை- உன்னை

அணைத்து கண்டேன் இன்ப கனவுகளை”

“பொன்னின் நிறம் பிள்ளை மனம்

வள்ளல் குணம் யாரோ

மன்னன் என்ற பேரில் வரும்

தேவன் மகன் நீயோ”

என்ற வரிகள் எம்.ஜி.ஆருக்காகவே எழுதப்பட்டன. இவை எம்.ஜி.ஆருக்கு விளம்பரமாக அமைந்தன.

எம் ஜி ஆருக்கு விளக்கம் அளித்த புலமைப்பித்தன்:

பொதுவாக எம்.ஜி.ஆர். காதல் பாடல்களில் தலையிடுவது இல்லை என்றாலும் கூட மேற்குறிப்பிட்ட பண்புகள் அவரது பாடல்களில் திரும்ப திரும்ப இடம் பெற்றதன் காரணம் இவை ரசிகர்களால் மிகவும் விரும்பப்பட்டதனால் ஆகும்.

“நீ என்னென்ன சொன்னாலும் புதுமை

உன்னை எங்கெங்கு தொட்டாலும் இளமை”

என்று மஞ்சுளா எம்ஜிஆரை பார்த்து பாடுவதாக அமைந்த பாடல் வரிகள் புலமைப்பித்தன் இயற்றிவை ஆகும். அவர் எம் ஜி ஆரிடம் இந்தப் பாடல் வரியில் உள்ள நுட்பத்தினை எடுத்துக் கூறியபோது எம்ஜிஆர் கையில் இருந்த துண்டால் அவரை செல்லமாக அடித்து ‘’நீங்கள் உங்கள் வீட்டில் பேசுவதை எல்லாம் இங்கே எனக்கு பாட்டாக எழுதி விட்டீர்களா’’ என்று சிரித்தபடியே கேட்டாராம்.

முடிப்பு

ஓரிரு சரணங்கள் பாடிய பின்பு சில பாடல்களில் கடைசியில் இருவரும் அருகருகே படுத்து உறங்கி விடுவதாகவும் காட்சிகள் அமைவதுண்டு இதைத்தான் எடுப்பு தொடுப்பு

முடிப்பு என்கிறோம். வேட்டைக்காரன் படத்தில் இப்படி பாலத்தின் மீது படுத்து இருவரும் தூங்கி விடுவர். நம்பியார் வந்து சாவித்ரியை தூக்கிகொண்டு போய்விடுவார்.

எம்.ஜி.ஆரின் இளமையை எடுத்துக்காட்டும் காட்சி சண்டைக்காட்சிகளில் எம்.ஜி.ஆர். காஞ்சித்தலைவன் அன்பே வா போன்ற படங்களில் தன்னுடன் மோதும் வில்லனை தூக்கி தோளின் மீது வைத்து சுற்றி கீழே போடும் காட்சிகள் உண்டு. காதல் காட்சிகளில் கதாநாயகியை தூக்கி தன் பலத்தை காட்டுவதாக தன் இளமைத் துடிப்பை நிரூபிப்பதாக எம்.ஜி.ஆர். படங்களில் காட்சிகள் அமைந்துள்ளன. வில்லனை தூக்குவது போல முதுகு பக்கமாக தோள்பட்டையில் வைத்து தூக்கி கீழே போடாமல் முன்பக்கமாக விதவிதமாக கதாநாயகியை அவர் தூக்கி இறக்குவார். உழைக்கும் கரங்கள் படத்தில் ‘வாரேன் போய் வாரேன்’ பாட்டின் போது தன் வலது பக்கமாக லதாவை தூக்கி பின்பு இறக்கி விடுவார். ரிக்ஷாக்காரன் படத்தில் மஞ்சுளாவை முன்பக்கமாக சிறு குழந்தையை மேலே தூக்கி போட்டு பிடிப்பது போல முகத்துக்கு நேரே தூக்கிப் பிடித்து இறக்கி விடுவது உண்டு. மீனவ நண்பன் படத்தில் கனவு காட்சியின்போது கதாநாயகியை இரண்டு கைகளாலும் ஏந்தியபடி தூக்கிக் கொண்டுவந்து ஒரு நீண்ட நூல் தொட்டிலில் படுக்க வைத்தார். இந்த காட்சிகள் எல்லாம் எம்.ஜி.ஆரின் இளமையை நிரூபிக்க உதவிய காட்சிகளாகும். அவர் வயதானவர் என்றாலும் இளமையானவர் என்பதை ரசிகர்கள் ஏற்று கொள்வதற்காக புகுத்தப்பட்ட காட்சிகளாகும்.

கனவில் காதல்

எம்.ஜி.ஆர். படங்களில் கனவுக் காட்சிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. கனவில் எம்.ஜி.ஆரும் அவரது காதலியும் ஏழையாக இருந்தாலும் ஒரு கற்பனையாக

கனவில் தன்னை ஒரு ஏழை ராஜாவாகவும் தன் காதலியை ராணியாகவும் கற்பனை செய்து கனவில் ஆடிப்பாடி மகிழ்வதாக்க காட்சிகள் எடுக்கப்படும். இக்கனவுக் காட்சிகள் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றன. 'சிறிது நேரம் ராஜா ராணியாகவே வாழ்ந்த ஓர் உணர்ச்சியை இந்தப் பாடல்கள் அவனுக்கு தருகின்றன. எனவே இதுபோன்ற காட்சிகளை வைக்கின்றேன்' என்று எம்.ஜி.ஆர். ஒரு பேட்டியின் போது குறிப்பிட்டார்.

எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் ஜோடியாக நடித்த என் அண்ணன் படத்தில் ஒரு இசை பாடல் நிகழ்ச்சிக்கு வந்த இருவரும் தங்களையே அந்த நடன கலைஞர்களின் உருவில் கனவில் கண்டு தாங்களே அந்த மேடையில் பாடி ஆடுவதாக கனவு காண்பர்.

'நீல நிறம் வானுக்கும் கடலுக்கும் நீல நிறம்

காரணம் ஏன் பெண்ணே உன் கண்ணோ'

நீல நிறம் ம் ம் ம் என தொடங்கும் இப்பாடல் காட்சியில் இதில் ஒரு முக்கிய கருத்து உண்டு. மேடை கலைஞர்களின் உடையில்தான் இருவரும் காதலித்து பாடுவார்களே தவிர, அவர்களின் உருவத்தில் அல்ல. அதாவது படம் பார்க்கும் ஒரு பெண் எம்.ஜி.ஆரின் உருவத்தை கனவில் கண்டு காதலிக்க மாட்டாள். அவளது காதலனை அல்லது கணவனை எம்.ஜி.ஆர். கனவு பாட்டில் வரும் ராஜ உடையுடன் கற்பனை செய்து கனவில் காதலித்து ஆடி பாடுவாள். எனவே பெண்கள் எம்.ஜி.ஆரை காதலிப்பதாகக் கனவு கண்டு மகிழ்கின்றனர் என்ற குற்றச்சாட்டு பொய் ஆகிறது. எம்.ஜி.ஆர் இந்த பாட்டின் மூலமாக எப்படி காதல் கனவு அமைய வேண்டும் என்பதையும் சொல்லி கொடுத்துள்ளார்.

நாடோடி மன்னன் படத்தில் வண்ணத்தில் எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் கனவு காணும் பாடல் அமைந்திருக்கும் இந்தப் பாடலில் கடலின் அடித்தளத்தில் இருவரும் ஆடிப்பாடி மகிழும் காட்சி கனவு காட்சியாக இடம்பெறும்.

''கண்ணில் வந்து மின்னல் போல் காணுதே, இன்பக் காவியக் கலையே ஓவியமே'' என்ற பாடல் ரசிகர்களின் வரவேற்பு பெற்றதற்கு முக்கிய காரணம், அது முதல் வண்ணக் கனவு பாடலாகும். அதற்கு முன்பு புதுமைப்பித்தன் படத்தில் உலக உருண்டையை சுற்றி எம்.ஜி.ஆர்., பி. எஸ்.சரோஜாவும் நடந்தபடி பாடி மகிழும் காட்சி.

'உள்ளம் இரண்டும் ஒன்று நம்

உருவம் தானே ரெண்டு

உயிர் ஓவியமே

இனி நீயும் நானும் ஒன்று' என்ற பாடல் காட்சி உலக உருண்டையை சுற்றி வருவதாக வானத்தில் அமைக்கப்பட்டிருக்கும்.

மதுரை வீரன் படத்தில் வெள்ளையம்மா மதுரைவீரனுக்கு முதுகில் பச்சை குத்தும் காட்சியின்போது பச்சை குத்தும் வலி தெரியாமல் இருக்க ஒரு பாட்டை பத்மினி பாடுவதாக அமைந்த காட்சி ஒரு கனவு காட்சியாக விரிந்திருக்கும். அப்போது பத்மினியின் கண்கள் க்ளோசப்பில் படபடவென்று அடித்து ''நாடகமெல்லாம் கண்டேன் உந்தன் ஆடும் விழியிலே ஆடும்விளியிலே கீதம் பாடும் மொழியிலே''

தேடிய இன்பம் கண்டேன்

கண்ணா வாழ்விலே கண்ணா வாழ்விலே

உயர் அன்பால் நேரிலே

என்று பத்மினியும், எம்.ஜி.ஆரும் ஒரு சோலையில் பாடுவதாக இந்த கனவு பாட்டு அமைந்திருக்கும்.

எம்.ஜி.ஆர் .படங்களின் கனவு பாடல்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இன்னொரு முக்கியமான பாடல் உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் வரும் 'அவள் ஒரு நவரச நாடகம்' என்ற பாட்டாகும். இப்பாட்டில் எம்.ஜி.ஆரும் லதாவும் இடம்பெற்ற காட்சிகள் மிகச்சில. ஆனால் தண்ணீருக்குள் சாகசம் செய்யும் காட்சிகளை ஜப்பானிலிருந்து படம் எடுத்து வந்த எம்.ஜி.ஆர். அவற்றோடு தானும் லதாவும் மீண்டும் நடித்து ஒரு சில காட்சிகளை எடுத்து அவற்றையும் இணைத்து ஒரு முழு நீள பாட்டு காட்சி ஆக்கிவிட்டார். இந்த காட்சிக்காக சத்யா ஸ்டூடியோவில் மிகப்பெரிய தண்ணீர் தொட்டி கட்டப்பட்டு அதில் ஹைட்ரோ போட்டோகிராபி எனப்படும் தண்ணீருக்குள்ளிருந்து படம்பிடிக்கும் முறையில் மிகுந்த முயற்சியில் சில காட்சிகள் எடுக்கப்பட்டன. எம்.ஜி.ஆர். நினைத்தபடி அந்த காட்சிகளை வெளிநாட்டு சாகச காட்சிகளோடு இணைக்க இயலவில்லை. அதனால் எம்.ஜி.ஆர் நிறைய காட்சிகளை நீக்கிவிட்டு ஒரு சில காட்சிகளை மட்டுமே இணைத்தார்.

யாருக்கு கனவு வரும்

எம்.ஜி.ஆர். படங்களில் எப்போதும் எம்.ஜி.ஆரை காதலிக்கும் கதாநாயகிதான் கனவு காண்பார். எம்.ஜி.ஆர். ஒரு போதும் பெண்ணை நினைத்து கனவு கண்டதில்லை. இது ஒரு சிறந்த ஆண்மை பண்பாக கருதப்பட்டு எம்.ஜி.ஆர். படங்களில் இடம் பெற்றுள்ளது.

வினையே ஆடவருக்கு உயிரே மனையுறை

மகளிர்க்கு ஆடவர் உயிரே

என்று குறுந்தொகை குறிப்பிட்டது போல கடமையே ஆணுக்கு உயிராகக் கருதப்பட்டது. அவன் பெண்ணை நினைத்து கனவு காண்பது அடாது. பெண்களே அவரை நினைத்து அவரோடு ஆடி பாடுவதாக கனவு காண்கின்றனர்.

ராஜா ராணி கனவுக் காட்சி

எம்.ஜி.ஆர். படங்களில் காதல் கனவு காட்சியாக இருப்பவற்றில் பல ராஜா ராணி கனவு காட்சியாக இருக்கும். அன்பே வா, தேடி வந்த மாப்பிள்ளை, மீனவ நண்பன் படங்களில் ராஜா ராணி காதல் கனவு காட்சிகள் மிகவும் சிறப்பிடம் பெற்றன.

காதல் காட்சிகளில் கண்ணியம்

காதல் காட்சிகளில் நடிகையரிடம் அத்து மீறும் பழக்கம் அன்று நடிகர்களிடம் இருந்து வந்தது, ஆனால் எம்.ஜி.ஆர். ‘செட்’களில் தீவிர கட்டுப்பாடுகள் இருக்கும் அவர் படங்களில் காதல் காட்சிகளில் பெண்கள் ரசிக்கும் வகையில் தான் காட்சிகள் அமையுமே தவிர அவர்கள் முகம் சுளிக்கும்



வகையில் எந்த காட்சியும் வைத்திருக்க மாட்டார். பெண்களை குறைவாக மதிக்கும் வகையில் நடந்துகொள்ள மாட்டார். குறிப்பாக, எம்.ஜி.ஆர். பெண்களை பார்த்து கண் அடிக்க மாட்டார்; பெண்களிடம் திருமணம் குழந்தை பிறப்பு போன்றவற்றை கூட சைகையில் காட்ட மாட்டார். காதலியிடமும் மரியாதையாகப் பேசுவார், பழகுவார். போடி வாடி என்று காதலியை மனைவியை அழைக்க மாட்டார். மூன்றாமவர் முன்னிலையில் காதலியிடம் வணக்கம் சொல்லி விடை பெறும் காட்சிகள் கூட உண்டு. பெண்ணை பார்த்து உதட்டை கடிப்பதோ, உதட்டை நாக்கால் தடவுவதோ அவரிடம் காண முடியாது. பெண்களை அணைக்கும் போது மிகச் சரியாக தன உள்ளங்கையை நடிகையரின் வயிற்றில் பதித்திருப்பார். ஒரு விரல் கூட அவர்களின் மேல் பாகத்தில் படாது. தோளின் மீது கை வைத்திருந்தால் விரல்களை மேல் நோக்கி மடித்து வைத்திருப்பார். [எடு. சிரித்து சிரித்து என்ன சிறையில் வைத்தாய் பாட்டு] பெண்களை மிதிக்க மாட்டார். சில முன்னணி நடிகர்கள் பாட்டு காட்சியில் பெண்ணை காலால் எத்துவதும் உருட்டுவதும் உண்டு. இது போன்ற அநாகரிகமான செயல்களில் எம்.ஜி.ஆர். ஈடுபட மாட்டார்.

இந்த நல்ல பழக்கங்கள் பெண்களிடம் அவருக்கு தனி மரியாதையை ஏற்படுத்தி கொடுத்தன, பின்னர் வாக்கு வங்கியாகவும் மாறி வெற்றியை அளித்தன.

8. நிஜத்திலும் நடிகையரின் காவலர் எம்.ஜி.ஆர்

'துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலன' என்பது இறைவனுக்கு மட்டுமல்ல எம்.ஜி.ஆருக்கும் பொருந்தும். இக்கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் அவர் வாழ்வில் பல நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. எம்.ஜி.ஆர் திரையுலகில் இருந்த போதும் முதல்வரான பிறகும் தன்னை வளர்த்துவிட்ட திரையுலகுக்கு ஒரு காவலனாக இருந்தார். யாருக்குக் கஷ்டம் என்றாலும் நஷ்டம் என்றாலும் அத்தகவல் இவர் கவனத்துக்கு வந்தால் உடனே அவர்களை அந்த சிரமத்திலிருந்து மீட்கும் ரட்சகராக இருந்திருக்கிறார் என்பது பலரது பேட்டி வாயிலாகத் தெரிகிறது.

எம்.ஜி.ஆரை நம்பினோர் கைவிடப்படார்

சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் இருக்கும் பிரபல ஜுவல்லரி ஒன்றில் நகை வாங்கிக்கொண்டு காரில் வந்த சரோஜாதேவியிடம் இருந்து திருடர்கள் அந்த நகையைக்



கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர். காவல் நிலையம் சென்று புகார் அளித்த சரோஜாதேவி 'எம்.ஜி.ஆர் இருந்திருந்தால் இப்படி நடந்திருக்குமா' என்று கவலையுடன் தெரிவித்தார். எம்.ஜி.ஆர் இருப்பது தனக்கு ஒரு பாதுகாப்பு என்று அவர் நம்பியிருந்தார். இதுபோன்ற நம்பிக்கை பலருக்கும் இருந்திருக்கிறது.

நடிகை என்கிற ஒரே காரணத்தால் பெண்களுக்கு மற்றவர்கள் நெருக்கடி கொடுத்தபோது அவர்களை அந்தக் கயவர்களின் பிடியிலிருந்து எம்.ஜி.ஆர் விடுவித்த சம்பவங்கள் ஏராளம். இவரும் நடிகையரிடம் மிகவும் கண்ணியத்துடன் நடந்து கொண்டார் என்பதற்கும் சான்றுகள் உண்டு. அவர்களின் கண்ணியத்தைக் காக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் அவர் உறுதியுடன் இருந்தார். எனவே, அந்தக் காலத்தில் எம்.ஜி.ஆர் தங்களின் காவலராக இருக்கிறார் என்ற நிம்மதி நடிகையருக்கு இருந்தது.

உடம்பை பார்த்துக்கொள்

சாவித்திரி சொந்தப்படம் எடுத்து தன் சொத்தை எல்லாம் இழந்தார். சென்னை ஹபிபுல்லா ரோட்டில் இருந்த பெரிய மாளிகையும் ஏலத்தில் போய்விட்டது. இந்நிலையில் ஒரு நாள் அவர் எம்.ஜி.ஆரின் மாம்பலம் ஆஃபிஸுக்கு வந்து அவரைச் சந்தித்தார். எம்.ஜி.ஆர் அவரிடம் ஒரு குட்டிச்சாக்கில் ஒரு லட்சம் ரூபாயைப் போட்டுக் கொடுத்தார். அத்துடன் அவர் வசிப்பதற்கு ஒரு வீடும் ஏற்பாடு செய்து கொடுத்தார். உடம்பை கவனித்துக் கொள்ளம்மா என்று கூறி அனுப்பிவைத்தார். இந்த ஒரு லட்சம் ரூபாயை வைத்து சாவித்திரி முன்னேறிவிடப் போவதில்லை. அவர் எப்படிச் செலவழிப்பார் என்பது எம்.ஜி.ஆருக்குத் தெரிந்திருக்கும் எனினும் ஒரு மாபெரும் நடிகை உதவி என்று கேட்கும்போது அவருக்கு உதவுவதே மனுஷத்தனம் என்பது எம்.ஜி.ஆரின் கொள்கை.

திருமணம் செய்துகொள்

ஒரு முறை லட்சுமி வந்து எம்.ஜி.ஆரை பார்த்தார். அவருக்குத் திருமண வாழ்வு தோல்வியில் முடிந்திருந்தது. குழந்தையை அவரது அம்மா வைத்துக்கொண்டார். தனிமையில் இருந்த லட்சுமிக்குத் தொல்லைகள் ஏராளம் சூழ்ந்தன. எம்.ஜி.ஆரிடம் வந்து தன் பிரச்சனையைக் கூறினார். எம்.ஜி.ஆர், நீ பொது வாழ்க்கைக்கு வா அல்லது குடும்ப வாழ்க்கையை ஏற்படுத்திக்கொள். அதுதான் உனக்குப் பாதுகாப்பு என்று ஆலோசனை தெரிவித்தார். லட்சுமியிடம் அரசியலுக்கு வருகிறாயா என்று கேட்டார். 'அது தன்னால் முடியாது' என்றார் லட்சுமி. 'எந்தச் சாமி எந்தப் பட்டணம் போனாலும் நான் பத்து மணிக்கு தூங்கப் போய்விடுவேன். எனவே பொதுக்கூட்டங்களில் பேசுவது இயலாத காரியம்' என்றார் லட்சுமி. 'அப்படியென்றால் திரும்பவும் திருமணம் செய்துகொள். ஒரு பிள்ளையைத் தத்தெடுத்து வளர்த்து வா. உனக்கு வாழ்வில் ஒரு பிடிப்பு இருக்கும். பாதுகாப்பாகவும் உணர்வாய்' என்றார் எம்.ஜி.ஆர். அப்படியே செய்தார் லட்சுமி. இன்றைக்குக் கணவர் குழந்தை என லட்சுமி நிம்மதியாக வாழ்கிறார்.

தெலுங்கு கத்துக்கலாம்

'கொக்கு சைவ கொக்கு' பாட்டில் ரஜினியுடனும் 'கானக் கருங்குயிலே கச்சேரிக்கு வர்றியா வர்றியா' என்ற பாட்டில் விக்ரமுடனும் ஆடிய ஜோதிலட்சுமி ஆடல் பாடல் கலைகளில் கை தேர்ந்தவர். தமிழில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர். அவர் பாட்டி தமயந்தியும் அம்மா தனலட்சுமியும் நடிகையராய் இருந்தவர்கள். எம்.ஜி.ஆருக்கு இவர்கள் நல்ல பரிச்சயம் ஆனவர்கள்.

ஒரு நாள் ஜோதிலட்சுமியின் தாயார் எம்.ஜி.ஆரிடம் பேசும்போது 'இப்போது தமிழில் ஜோதிக்கு அதிக

வாய்ப்பில்லை. தெலுங்கில் அழைப்பு வருகிறது, ஆனால் இவள் நடிக்க மறுக்கிறாள்' என்று குறைபட்டுக்கொண்டார். அப்போது எம்.ஜி.ஆர் ஜோதிலட்சுமியிடம் 'ஏன் உனக்குத் தெலுங்கில் நடிச்சா கசக்குதா' எனக் கேட்டார். அதற்கு பதிலளித்த ஜோதிலட்சுமி 'இல்லண்ணே தெலுங்கு பாஷை தெரியாது. என்ன பேசுறாங்கன்னே எனக்குப் புரியாது' என்றார். 'அதெல்லாம் புரியும் புரியும். போய் நடி அப்படியே தெலுங்கு கத்துக்கலாம்' என்று தைரியம் கொடுத்தார். அதன்பிறகு சண்டை காட்சி நிறைந்த படங்களில் ஜோதிலட்சுமி ஒரு ரவுண்ட் வந்தார். 'நடிகைக்கு ஃபீல்டில் இருந்தால்தான் மதிப்பு. ஃபீல்ட் அவுட் ஆகிவிட்டால் யாரும் அவரை தேடப் போவதில்லை' என்பதால் கிடைக்கும் வாய்ப்பை தவற விடக் கூடாது என்று எம்.ஜி.ஆர் கூறிய அறிவுரையைக் கேட்டதால் அவர் சாகும்வரை நடித்தார். விவேக்குடன் நகைச்சுவை பாத்திரத்திலும் நடித்து பேர் வாங்கினார்.

நடிகையும் குடும்பப் பெண்தான்

எம்.ஜி.ஆர் நடிகர் சங்கத் தலைவராக இருந்த போது மாதந்தோறும் பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தினார். நடிகர் சங்க பொறுப்பாளர்கள் பத்திரிகையாளரின் கேள்விகளுக்குப் பதில் கூறினர். ஒரு நிருபர் எம்.என்.ராஜத்திடம் ஏன் குடும்பப்பெண்கள் நடிக்க வருவதில்லை என்றார். இதற்கு பதிலளிக்க ராஜம் தடுமாறினார். உடனே எம்.ஜி.ஆர் எழுந்து 'ஏன் வருவதில்லை. இப்போது ராஜம் வந்திருக்கிறாரே. இவரும் குடும்பப் பெண்தானே. இவருக்கும் குடும்பம் இருக்கிறது. கணவர் குழந்தைகள் இருக்கின்றனர்' என்றார்.

நடிகை எப்படி இருக்க வேண்டும்?

நடிப்பு என்பது நடிகையருக்கு வாழ்வாதாரம் தரும் ஒரு தொழில் என்பதை எம்.ஜி.ஆர் அடிக்கடி மற்றவர்களுக்கு நினைவுபடுத்தினார். நாடக நடிகையர், நாடகம் முடிந்ததும் மறுநாள் ஊரைச் சுற்றிப் பார்க்க போகக் கூடாது. ஜவுளி எடுக்க வேண்டும் என்றால். வீட்டுக்கு கொண்டுவரச் சொல்லி சேலை துணிமணிகளை எடுக்க வேண்டும். அனாவசியமாக வெளியே போய் ரசிகர்களின் மத்தியில் தொல்லைக்கு ஆளாகக் கூடாது என்பதில் அவர் கவனமாக இருந்ததை ஜி.சகுந்தலாவின் பேட்டி வாயிலாக அறிகிறோம்.

வீண் அரட்டை கூடாது

சினிமாவிலும் தன் செட்டில் இருக்கும் நடிகையரும் பெண்ணின் பெருமை காப்பவராக இருக்கவேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர் கவனமாகவும் இருந்தார். பெண்கள் யாரோடும் பேசி சிரித்து அரட்டை அடிப்பது எம்.ஜி.ஆருக்குப் பிடிக்காது. நடிக்க வந்தால், தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்தார். நடிகையரிடம் யாரும் கதையளந்தால் அவருக்கு அடி விழும்; நடிகையருக்கும் திட்டு விழும்.

இருப்பதை கொண்டு சிறப்பாக வாழ்க

நடிகையர் ஆண்களை வெட்டி அதிகாரம் செய்வது தகாது என்றும் எம்.ஜி.ஆர் கருதினார். ஒரு முறை சரோஜாதேவி ஷாட் முடிந்ததும் 'ஏ ஃபேனை போடுப்பா' என்று ஆயாசமாக வந்து நாற்காலியில் உட்கார்ந்தார். உடனே எம்.ஜி.ஆர், 'உன்னால் செய்யக்கூடிய வேலையை ஏன் அடுத்தவருக்கு ஏவுகிறாய்' என்று கடிந்து கொண்டார். லட்சுமி ஒரு நாள் மதிய இடைவேளையின் போது உறங்கிக்கொண்டிருந்தார். எம்.ஜி.ஆர் என்ன உறக்கம் என்று

எழுப்பிக் கேட்டதற்கு, 'நேற்று வீட்டில் கரண்ட் இல்லை ஃபேன் ஓடவில்லை' என்றார். 'அப்படிச் சொல்லாதே வீட்டில் இருக்கும் வசதியைக் கொண்டு இருக்க பழகிகொள்ள வேண்டும்' என்று அறிவுறுத்தினார். ஒருமுறை ஏ.வி.எம் சரவணனிடமும் இது போன்ற ஓர் அறிவுரையைக் கூறினார். 'வசதியாக வாழலாம் ஆனால் ஆடம்பரம் கூடாது' என்பார். எனவே நடிகைகள் கண்ணியமாக வாழ வேண்டும். மற்றவர்களும் அவர்களை மதிக்க வேண்டும் என்பது எம்.ஜி.ஆரின் கொள்கையாக இருந்தது.

குடும்ப உறவை மதித்த எம்.ஜி.ஆர்

நடிகையும் குடும்பப் பெண்தான் என்பதில் தீவிர நம்பிக்கை கொண்ட எம்.ஜி.ஆர் திருமணமான பெண்களுடன் ஜோடி சேர்வதை தவிர்த்தார். ஈ.வி.சரோஜாவின் சொந்தத் தயாரிப்பான கொடுத்து வைத்தவளில் நடித்தபோது காதல் காட்சிகளை மட்டும் ப.நீலகண்டன் இயக்கட்டும். சரோஜாவின் கணவர் இயக்க வேண்டாம். அது சரோஜாவுக்கு அசௌகரியமாக இருக்கும் என்று ராமண்ணாவை தவிர்த்துவிட்டார். அந்தளவுக்கு எம்.ஜி.ஆர் திருமண உறவை மதித்தார்.

முழங்காலுக்கு மேல் ஏறிய பாவாடை

சர்வாதிகாரி படப்பிடிப்பில் அஞ்சலிதேவி ஒரு சுற்று சுற்றி கீழே விழும் காட்சியில் நடித்தபோது எம்.ஜி.ஆர் ரீடேக் எடுக்கும்படி கூறினார். இயக்குனரும் அஞ்சலி தேவியும் ஏன் சரியாகத்தானே இருந்தது என்றனர். எம்.ஜி.ஆர் இயக்குனரிடம் அஞ்சலி சுற்றி வந்து கீழே விழுந்தபோது அவர் பாவாடை முட்டிக்கு மேலேறிவிட்டது என்றார். சட்டென்று அதிர்ந்து போனார் அஞ்சலிதேவி. தனது மானத்தை காப்பாற்றிய எம்.ஜி.ஆருக்கு நன்றி கூறினார்.



முற்காலத்தில் உயர் குடிப்பெண்கள் மட்டுமே முட்டியை மறைத்து உடை அணியும் அதிகாரம் பெற்றிருந்தனர். சினிமாவில் கதாநாயகிகளும் முழங்காலை மறைத்து தான் உடை அணிவர். எனவே முட்டி தெரிவது ஆபாசம் என்பதால் எம்.ஜி.ஆரை ஆபத்பாந்தவனாக அஞ்சலி கருதினார். உடனே ரீடேக் எடுக்கப்பட்டது. கதாநாயகியின் நடை உடையில் ஒரு கண்ணியம் இருக்க வேண்டும் என்பதை எம்.ஜி.ஆர். விரும்பினார். நடிகை என்றாலும் அவளும் பெண் தானே? அவருக்கும் மானம் மரியாதை உண்டல்லவா? என்று எம் ஜி ஆர் கருதியதை இன்றும் நன்றியோடு நினைவுகூர்கிறார் அஞ்சலிதேவி.

அவர் குணச்சித்திர நடிகை

பணம் படைத்தவன் படத்திற்காக "கண் போன போக்கிலே கால் போகலாமா" என்ற பாட்டுக்கான படப்பிடிப்பு நடந்த போது அந்தப் பாட்டு ஒரு கிளப் டான்ஸ் என்பதால் சௌகார் ஜானகிக்கு கால்கள் தெரியும்படியான குட்டை பாவாடை தரப்பட்டது. செட்டுக்கு வந்த எம்.ஜி.ஆர். சௌகார் ஜானகியின் உடையை பார்த்துவிட்டு காஸ்டியூமரை அழைத்தார். "அவர் கவர்ச்சி நடிகை அல்ல. குணச்சித்திர நடிகை. அவருக்கு பெண் குழந்தைகள் உண்டு. இந்த டிரஸ் வேண்டாம் உடம்பை மூடியிருக்கும் உடை



கொடுங்கள்" என்றார். பின்பு கணுக்கால் வரை தொங்கும் நீண்ட பாவாடையும் மேல் சட்டையும் அணிந்து சௌகார் ஜானகி நடித்தார். பாட்டு இன்றும் எம்.ஜி.ஆரின் புகழுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

வெளியூர்களில் நடிகையர்களுக்கு பாதுகாப்பு

நாடகத்தில் நடிக்க நடிகையரை வெளி ஊர்களுக்கு அழைத்துச் செல்லும்போது எம்.ஜி.ஆர். மிகவும் கவனமாக இருப்பார். அவர்கள் வெளியில் வரக் கூடாது ரசிகர்களால் தொந்தரவு எதுவும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருப்பார். எம்.ஜி.ஆர். சினிமாவில் நடிக்க ஆரம்பித்த பிறகு தான் தன் பெயரில் நாடக மன்றம் ஒன்றை தொடங்கினார். அதில் அவருக்கு ஜோடியாக ஜி.சகுந்தலா நடிப்பார். அப்போது நடிகையர் கோவிலுக்கு போகவோ ஷாப்பிங் போகவோ எம்.ஜி.ஆர். அனுமதிக்க மாட்டார். அவர்களை காரில் ஏற்றி அனுப்பிய பிறகே எம்.ஜி.ஆர். தன் காரை எடுக்க சொல்வார்.

சினிமாவிலும் வெளிப்புற படப்பிடிப்புக்கு போகும் போது யாராவது தன் குழுவில் உள்ள பெண்களை கேலி செய்தால் அடித்து உதைத்து அந்த இடத்தை விட்டு அவர்களை அப்புறப்படுத்திவிடுவார். நடிகை என்றால் என்ன வேண்டுமானாலும் பேசலாம் செய்யலாம் என்பதை அவர் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை.

காஷ்மீரில்

எம்.ஜி.ஆர். லட்சுமி, மஞ்சுளாவுடன் காஷ்மீர் நகர் வீதியில் இதயவீணைக்காகப் படப்பிடிப்பு நடத்தியபோது பொதுமக்கள் படப்பிடிப்புப் பகுதிக்குள் வராமல் இருக்க கயிறு கட்டியிருந்தனர். அதையும் மீறி சில இளைஞர்கள் உள்ளே புகுந்து பெண்களிடம் சில்மிஷம் செய்தனர். எம்.ஜி.ஆர். உடனே நடிகைகளை அருகில் இருந்த கடைக்குள் தள்ளி விட்டு ஷட்டரை இழுத்துவிட்டார். அவர்கள் உள்ளே இருந்த ஒரு கண்ணாடி வழியாக வெளியே பார்த்தனர். அங்கே எம்.ஜி.ஆர் அந்தக் காலிப் பசங்களோடு மூர்க்கமாக சண்டை போட்டுக்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அவர்கள்



அனைவரும் அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டனர். 'எம்.ஜி.ஆர் படத்தில் வருவதைப் போலவே இந்த நிஜ சண்டை இருந்தது' என்கிறார் லட்சுமி.

மைசூரில்

கங்கா கௌரி படத்தின் ஷூட்டிங் மைசூரில் நடந்தபோது சிலர் அங்கிருந்த ஜெயலலிதாவிடம் வந்து நீங்கள் கர்நாடகாவில் தானே பிறந்தீர்கள் அதனால் 'கன்னடம் வாழ்க, தமிழ் ஒழிக' என்று சொல்லுங்கள் என்று வற்புறுத்தினர். ஜெயலலிதா தமிழ் ஒழிக என்று சொல்ல மறுத்துவிட்டார். கூட இருந்த படப்பிடிப்புக் குழுவினர் வற்புறுத்தியும் ஜெயலலிதா சொல்லவில்லை. கன்னடர்கள் படப்பிடிப்பு நடத்தவிடமாட்டோம் என்று கலாட்டா செய்தனர். இந்த விஷயம் தெரிந்து அருகில் வேறு ஊரில் ஷூட்டிங்கில் இருந்த எம்.ஜி.ஆர் அங்கு வந்துவிட்டார். இப்போது படப்பிடிப்பு குழுவினர் அனைவரும் பாதுகாப்பாக உணர்ந்தனர். எம்.ஜி.ஆர் இங்குதான்



இருக்கிறார் அவர் பார்த்துக்கொள்வார் என்று நம்பினர். ஜெயலலிதாவிடம் பேசி ஆறுதல் கூறினார். தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கும்படி தயாரிப்பாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

ஒரு சமயம் மைசூரில் எம்.ஜி.ஆரும் லதாவும் நடிக்கும் காட்சிகள் படமாக்கப்பட்டன. அப்போது படப்பிடிப்பு இடைவேளை விடப்பட்டது. எம்.ஜி.ஆர். சற்று தூரத்தில் அமர்ந்திருந்தார். அதை கவனிக்காத சில வாலிபர்கள் லதாவையும் மற்ற நடிகைகளையும் பார்த்து ஆபாசமாக பேசி சிரித்தனர். இதை கவனித்த எம்.ஜி.ஆர் விரைந்து வந்து அவர்களை அடித்து உதைத்தார். அநியாயம் நடக்கும்போது ஸ்டண்ட் நடிகர்களை அழைத்து அடிக்கச் சொல்வோம் என்று எம்.ஜி.ஆர் காத்திருக்க மாட்டார். எதிரிகள்மீது விழும் முதல் அடி அவர் அடியாகத்தான் இருக்கும். அவர்கள் தம் வாழ்நாளில் திரும்பவும் அந்தத் தப்பை செய்ய நினைக்காத அளவுக்குப் பாடம் புகட்டுவதில் அவர் ஒரு நிஜ வாத்தியார்.



ஜப்பானில்

வெளியூர் வெளிமாநிலம் என்றில்லை வெளி நாடாக இருந்தாலும் எம்.ஜி.ஆர். நடிகையரிடம் சில்மிஷம் செய்பவர்களை அடித்து உதைக்க தயங்கியதே இல்லை. ஜப்பானில் எஃக்ஸ்போ 70-ல் உலகம் சுற்றும் வாலிபன் படப்பிடிப்பு நடந்த போது அங்கு ஒருவர் சந்திரகலாவை கேலி செய்தார். 'அவரை தன் கறுப்புக் கண்ணாடி வழியாக தூரத்திலிருந்து கவனித்துவந்த எம்.ஜி.ஆர். அருகில் வந்து பட்டென்று அடித்தார். அடி வாங்கியவர் அங்கிருந்து ஓடிப் போய்விட்டார். இது வெளிநாடாயிற்றே, சட்டம் ஒழுங்குப் பிரச்சனை வருமோ என்றெல்லாம் யோசித்துப் பார்க்காமல் அநியாயத்தைக் கண்டவுடன் வழக்கம் போல எம்.ஜி.ஆர். பொங்கிவிட்டார். அவர் நல்ல குணத்துக்கு எந்தப் பிரச்சனையும் வரவில்லை மாறாக அடி வாங்கியவர் தன் தவறை உணர்ந்து திரும்பி வந்து மன்னிப்புக் கேட்டார். இதனால்தான் எம்.ஜி.ஆருடன் நடிக்கும்போது நாங்கள் பயமின்றி பாதுகாப்பாக உணர்வோம்' என்கிறார் ஜி.சகுந்தலா.

யாராக இருந்தாலும் கண்டித்தார்

நடிகைகளுக்குத் துன்பம் கொடுப்பவர் யாராக இருந்தாலும் எம்.ஜி.ஆர். அவர்களைக் கண்டிக்க தயங்கியதே இல்லை. ஓர் அமைச்சரால் தனக்குத் தொல்லை என்று முறையிட்ட ஓர் இளம் நடிகைக்கு ஆதரவாக அந்த அமைச்சரை அழைத்துக் கண்டித்தார்.

நடிகைகள் கண்ணியமாக நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த எம்.ஜி.ஆர், நடிகர்கள் பெண்களிடம் தவறு செய்த போது அதைக் கண்டிக்கத் தயங்கவில்லை. 'கல்லூரிப் பெண்களுக்கு போதை மருந்து கலந்த குளிர்பானத்தைக் கொடுத்து பாலியல் வன்முறையில்

ஈடுபட்ட நடிகர் சுமன்’ மீது உரிய நடவடிக்கை எடுத்து அவருக்கு ஏழாண்டு சிறைத்தண்டனை கிடைக்கச் செய்தார். சுமனும் நடிகர்தானே என்று எம்.ஜி.ஆர் அவருக்கு இரக்கம் காட்டவில்லை வாழ்க்கை வீணாகப் போன இளம் பெண்களுக்காக எம்.ஜி.ஆர். கவலைப்பட்டார். நடிகன் என்றால் இளம் பெண்களை மயக்கி அவர்கள் வாழ்வைச் சீரழிக்கலாம் என்பதை எம்.ஜி.ஆர். ஏற்கவில்லை. நடிகருக்குக் கட்டுப்பாடு மிகவும் அவசியம் என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

ஆயிரம் ரூபாய் பந்தயம்

ஒரு பட தயாரிப்பு நிறுவனம் எம்.ஜி.ஆரை, தன் படத்துக்கு ஒப்பந்தம் செய்தபோது மூத்த தயாரிப்பாளர் முக்தா ஸ்ரீனிவாசன் ஒரு தகவலை தெரிவித்தார். ‘இந்த நிறுவனம் அழகான சாகசமான பெண்களைக் காட்டி கதாநாயக நடிகர்களைக் கவிழ்த்துவிடும். உங்களையும் கவிழ்த்துவிட திட்டமிடுவார்கள்’ என்றார். அதற்கு பதிலளித்த எம்.ஜி.ஆர், ‘என்னை யாரும் அப்படிக் கவிழ்க்க முடியாது. எவ்வளவு பந்தயம்’ என்றார். முக்தாவும் ‘ஆயிரம் ரூபாய்’ என்றார். இது நடந்து பல வருடங்கள் கழித்து ஒரு மேடையில் முக்தா இந்தச் சம்பவத்தைச் சொல்லி, ‘எம்.ஜி.ஆர் மிகுந்த கட்டுப்பாடு உடையவர் அவரை யாரும் கவிழ்க்க முடியாது’ என்றார். எம்.ஜி.ஆர். உடனே அவரை ஆழமாக பார்த்தார். முக்தா, ‘என்னண்ணே’ என்றார். ‘அந்த ஆயிரம் ரூபாய் எங்கே’ என்றார் எம்.ஜி.ஆர். கூட்டம் வெடித்துச் சிரித்தது.

கடமை கண்ணியம் கட்டுப்பாடு

எம்.ஜி.ஆர் தான் சார்ந்திருந்த திரையுலகில் நடிகையரின் கண்ணியத்தைக் காப்பதை தன் கடமையாகக் கருதினார். அவர்களுக்கு எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் அவற்றை

தன்னால் முடிந்தவரை தீர்த்துவைத்தார். இவ்வாறு எம்.ஜி.ஆர். படத்திலும் நிஜ வாழ்விலும் பெண்களிடம் கண்ணியத்தோடு நடந்து கொண்டதால் பெண்களை அவர் தாய்க்குலம் என்று அழைத்தபோது மக்கள் அதை நம்பி ஏற்றுக்கொண்டனர். எம்.ஜி.ஆர். ஆட்சியில் அரசுப் பணியாளர் முதல் பேருந்து ஓட்டுநர், நடத்துநர் வரை பெண்களைத் தாய்க்குலம் என்றே அழைத்தனர், மதித்தனர். காவல் நிலையத்திலும் பெண்கள் அளிக்கும் புகார்கள் உடனுக்குடன் கவனிக்கப்பட்டன. நடிகையருக்கும் சரி சாதாரணப் பெண்களுக்கும் சரி எங்கெங்கு அக்கிரமங்கள் நடக்கிறதோ அங்கே நான் வந்து இரட்சிப்பேன் என்று கூறிய கண்ண பரமாத்மாவாக எம்.ஜி.ஆரைக் கருதியதில் வியப்பொன்றும் இல்லை.



9. எம்.ஜி.ஆர். வருகையில் ரசிகைகளின் ஆர்வம்

'எம்.ஜி.ஆர் வருகை என்பது, எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிப்பது' எனச் சொல்வதைவிட, ரசிகர்களுக்கான திருவிழா என்றுதான் சொல்லவேண்டும். நாங்கள், மதுரையின் பிரதான சாலையில் குடியிருந்தோம். அந்த வழியாகத்தான் அவர் தங்கியிருக்கும் பாண்டியன் ஹோட்டல் மற்றும் சர்க்கியூட் ஹவுஸுக்குப் போய் வருவார். எம்.ஜி.ஆர் மதுரைக்கு வந்துவிட்டால், எங்கள் மனம் துள்ளும். ஆண்கள், பெண்கள் என அனைவரும் அவருடைய அன்றைய நிகழ்ச்சி விவரத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, அதற்கேற்ப தங்களின் பணிகளை வரைமுறைப்படுத்திக்கொள்வர். எம்.ஜி.ஆர் அந்தச் சாலை வழியாக வரும் - போகும் நேரங்களில் அவரைப் பார்ப்பதற்காக தங்களைத் தயார்படுத்திக்கொள்வர்.

எந்தப் பக்கம் உட்காருவார் எம்.ஜி.ஆர்?

எம்.ஜி.ஆர் கார் ஓட்டுநருக்கு அருகில் உட்கார மாட்டார். அவர் பின் இருக்கையில் இடதுபுறம் மக்கள் தன்னைப் பார்க்க வசதியாக உட்கார்ந்து கும்பிட்டபடியோ, டாட்டா காட்டியபடியோ போவார். இதில் என்ன விசேஷம் என்கிறீர்களா? எம்.ஜி.ஆர் பாண்டியன் ஹோட்டலுக்குப் போகும்போது எங்கள் வீட்டுப் பக்கமாக உட்கார்ந்திருப்பார். எங்கள் வீடு இருக்கும் பகுதியில் சுமார் 17 வீடுகள் இருந்தன. அடுத்த இரண்டு தெருக்களிலும் அதே மாதிரி பத்து பதினைந்து வீடுகள் இருந்தன. ஏறத்தாழ அனைவரும் எம்.ஜி.ஆரைப் பார்க்க நடைபாதையில் குழுமிவிடுவர். இதில் எங்கள் தெருக்காரர்கள் எம்.ஜி.ஆர். எந்தப் பக்கம் உட்கார்ந்து இருக்கிறாரோ, அந்தப் பக்கம் போய் நின்று அவரைப் பார்க்க ஆவலாகச் செயல்படுவார்கள்.

பைலட் வண்டி, சைரன் சத்தம் எல்லாம் சென்றபிறகு, எம்.ஜி.ஆர் கார் வரும் நேரத்தில், ஒருத்தி கைப்பிள்ளையோடு ரோட்டைக் கடந்து ஓடுவாள். பாதுகாப்புக்கு நிற்கும் போலீஸ்காரருக்கு உயிரே போய்விடும். அடுத்து அவளின் சிறிய பிள்ளைகள் இருவர் ஓடுவார்கள். அதாவது இப்போது எம்.ஜி.ஆர். பாண்டியன் ஹோட்டல் அல்லது சர்க்கியூட் ஹவுஸில் இருந்து புறப்பட்டு செல்லப்போகிறார். அதனால் அவர் அந்தப் பக்கம் அமர்ந்து எதிர் நடைபாதையில் இருப்பவர்களைத்தான் பார்க்க வாய்ப்பு அதிகம். எனவே, ஆண்களும் பெண்களும் இந்த ஞாபகம் வந்தவுடன் இந்த பிளாட்பாரத்திலிந்து அந்த பிளாட்பாரத்துக்கு ஓடுவார்கள்.

ஒருமுறை கன்னியாகுமரிப் பகுதியைச் சேர்ந்த இளம் போலீஸ் ஒருவர் பந்தோபஸ்துக்கு வந்திருந்தார். அவருக்கு 'சி.எம் வர்ற நேரத்தில் இந்தப் பெண்கள் ஏன் இங்கும் அங்கும் ஓடுகிறார்கள்?' என்று புரியவில்லை. மக்களின் ஆர்வத்தை அவரால் புரிந்துகொள்ளவே இயலவில்லை. 'எங்கு இருந்து பார்த்தாலும் எம்.ஜி.ஆர்-தானே!' என அவர் நினைத்தார். முடிந்தவரை அருகில் இருந்து பார்க்கும் மனதிருப்தி, தொலைவில் இருந்து பார்க்கும்போது கிடைக்குமா என்பது அந்த போலீஸ்காரருக்குப் புரியவில்லை. பெண்களிடம் திட்டு வாங்கினார்.

இரவில் வரும் எம்.ஜி.ஆர்.

தேர்தல் பிரசாரப் பணிகளில் எம்.ஜி.ஆர். ஈடுபடும்போது, இரவு இரண்டு மூன்று மணிக்குக்குத்தான் இருப்பிடம் திரும்புவார். வயதானவர்களும் இளைஞர்களும் பத்து பதினொரு மணி வரை பேசிக்கொண்டு இருப்பார்கள். 'சரி, போய் தூங்குவோம். அவர் வரும்போது வருவோம்!' என்று சொல்லிக்கொண்டே தூங்கப் போய்விடுவார்கள்.

மக்கள் ஆழ்ந்து உறங்கும் வேளையில் திடீரென சைரன் ஒலிக்கும். அவ்வளவுதான், சேலையை மேலிலும் தோளிலும் அள்ளிப் போட்டுக்கொண்டு பெண்கள் ஓடிவருவார்கள். அப்படி ஒரு பரபரப்பு. அம்மாவோடு தூங்கும் கைக்குழந்தைகளை அப்படியே கையில் ஏந்திக்கொண்டு வந்து நிற்பார்கள். இவர்கள் ஓடி வந்ததில் மற்ற பிள்ளைகளும் மாமியார் மாமனார்களும் விழித்தெழுந்து தட்டுத் தடுமாறி வந்துவிடுவார்கள். பிளாட்பாரத்துக்கு வந்த பிறகு, சேலை ரவிக்கையைச் சரிசெய்து சீலையை இழுத்துக்கட்டிக்கொள்வார்கள். குழந்தைகளை இடுப்பில் வைத்துக்கொள்வார்கள். எம்.ஜி.ஆருக்குத் தெரியும், இங்கு நம் ரசிகர்கள், அபிமானிகள் நிற்பார்கள் என்பது. சில மீட்டர் தொலைவிலேயே காருக்குள் லைட் போடப்படுவதைப் பார்க்கலாம். இங்கு நிற்கும் ரசிகர் ஒருவர், 'எம்.ஜி.ஆர். வாழ்க' என்று கோஷம்போடுவார். எம்.ஜி.ஆரும் சிரித்தபடியே கையை அசைத்துச் செல்வார்.

அப்பாடா... பார்த்துவிட்டோம்!

'எம்.ஜி.ஆரைப் பார்த்தாகிவிட்டது. இனி தூங்கப்போகலாமே!' என்று பெண்கள் வீட்டுக்குப் போக மாட்டார்கள். உடனே கணவன்மாரை காபி வாங்கி வரச் சொல்வார்கள். அந்தப் பகுதியில் காபி கடைகள் இரவு இரண்டு இரண்டரை மணி வரை திறந்திருக்கும். பிறகு, அதிகாலை நான்கு மணிக்குத் திறந்துவிடும். அதுவும் எம்.ஜி.ஆர். வந்திருக்கிறார் என்றால், அவர் ஹோட்டலுக்குத் திரும்பிப் போகும் வரை திறந்துதான் இருக்கும். இனி சில்வர் தூக்குவாளியை எடுத்துக்கொண்டு இரண்டு மூன்று பேர் காபி வாங்கி வருவார்கள். அதை ஆளுக்கு அரை டம்ளர் ஊற்றிக் குடிப்பார்கள். அரை மணி நேரம் எம்.ஜி.ஆரைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள்.

பிறகு, ‘அவர் தூங்கட்டும் காலையில் வருவார் பார்ப்போம்’ என்று சொல்லிவிட்டு, தூங்கப் போய்விடுவார்கள்.

இவ்வாறாக மதுரைக்கு வரும் எம்.ஜி.ஆர். ஒரு வாரம் வரைகூட இருப்பார். அந்த வாரம் முழுக்க மதுரை மக்களுக்கு உற்சாகமும் பரபரப்பும் தொற்றிக்கொள்ளும். அந்தச் சாலையில் நேருஜி, காமராஜர், இந்திரா காந்தி, சஞ்சீவ ரெட்டி, பக்ருதீன் அலி அகமது, நேப்பாளத்து ராஜா, தானே கார் ஓட்டிகொண்டு வந்த ராஜீவ் காந்தி, அண்ணா, கலைஞர், ஜெயலலிதா எனப் பலரையும் பார்த்திருந்தாலும் எம்.ஜி.ஆரின் வருகை மட்டுமே வீட்டு விசேஷம்போல கலகலப்பாக இருக்கும்.

‘அடிமைப்பெண்’ திரைப்பட விழாவுக்கு வந்த எம்.ஜி.ஆர்

‘அடிமைப்பெண்’ படம் சிந்தாமணியில் வெளியிடப்பட்டு வெற்றிநடைபோட்டது. அப்போது எம்.ஜி.ஆர். மதுரைக்கு வருகை தருவதாக செய்தி வந்தது. எம்.ஜி.ஆருடன் நடித்த மற்ற கலைஞர்களும் மேடையில் தோன்றுவார்கள் என்பது தெரிந்ததும், எல்லோரும் ஜெயலலிதாவைப் பார்க்கத் தயாரானார்கள். மே தினத்தன்று (1969) வெளியான இந்தப் படம், 25 வாரங்கள் ஓடிய பிறகு அக்டோபர் 22 அன்று வெற்றி விழா கொண்டாடப்பட்டது. எம்.ஜி.ஆர்., விமான நிலையத்திலிருந்து நீல நிற வேனில் வந்துகொண்டிருந்தார். புஷ்குல்லா வைத்த எம்.ஜி.ஆர்., பச்சையும் இல்லாமல் நீலமும் இல்லாமல் ஒரு கலரில் சேலை கட்டி தலையில் பன் கொண்டை போட்ட ஜெயலலிதா, அவருக்குப் பின்னால் பண்டரிபாய் ஆகியோர் வேனில் வந்துகொண்டிருந்தனர்.

ஜெயலலிதாவைப் பார்த்தோம்

‘அடிமைப்பெண்’ விழாவுக்குப் பிறகு எம்.ஜி.ஆர். முதலமைச்சராகி ஜெயலலிதாவை சத்துணவுத் திட்டத்தில்

ஈடுபடுத்திய சமயம். வெள்ளை நிறத்தில் கட்சி பார்டர் போட்ட சேலை அணிந்து எங்கள் பகுதி வழியாக ஒருநாள் காரில் சென்றார். அப்போது அவரை நன்றாகப் பார்த்தோம். அவர் கழுத்தில் அணிந்திருந்த செயின் ‘வெள்ளி’ என சிலர் சொல்ல, படித்த இளைஞர் ஒருவர் ‘அது பிளாட்டினம் தங்கத்தைவிட விலை அதிகம்’ என்றார். எம்.ஜி.ஆரைப் பார்த்த மகிழ்ச்சியோ மன நிறைவோ இல்லை. ஒருவித பயமும் அந்நியத்தன்மையும் ஏற்பட்டன. ஜெயலலிதா, காருக்குள் கைகுவித்து கும்பிட்டபடி உட்கார்ந்திருந்தார். எம்.ஜி.ஆர் மாதிரி கார் சைடில் நின்றவர்களைப் பார்க்கவோ கை அசைக்கவோ இல்லை. அது, அன்று எங்கள் பகுதியினரால் பெரிதும் விமர்சிக்கப்பட்டது. “அந்தப் புண்ணியவான் ராத்திரி எந்நேரமானாலும் முழிச்சு, கையைக் காட்டிட்டுப் போவாரு. இது என்ன திரும்பிக்கூட பார்க்க மாட்டேங்குது!” என்று பேசினர்.

குங்குமப்பொட்டு வைத்த எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். வரும்போது அவரைப் பார்க்கும் பலருக்கும் ‘அவரைப் பார்த்துவிட்டோம்!’ என்ற மகிழ்ச்சியும் மனதுக்குள் ஒரு துள்ளலும் ஏற்படுமே தவிர, என்ன பார்த்தோம், அவர் கறுப்பா சிவப்பா, என்ன சட்டை போட்டிருந்தார், என்ன வாட்ச் கட்டியிருந்தார் என்றெல்லாம் தெரிவது கிடையாது. அது ஒரு தெய்வ தரிசனம். என்ன பார்த்தோம் என்பது தெரியாது. ஆனால், பார்த்துவிட்டோம் என்ற பரவசம் தோன்றும். அது ஒரு மனநிறைவைத் தரும்.

இதில் நடுவயதுப் பெண் மட்டும் சற்று வித்தியாசமானவர். அவர் திருமணத்துக்கு முன்பு சிவாஜி ரசிகை. அவர் அப்பா ஒரு காங்கிரஸ்காரர். ஆனால், கணவர் எம்.ஜி.ஆர் ரசிகர். கணவரோடு சேர்ந்து மெள்ள மெள்ள ஒவ்வொரு எம்.ஜி.ஆர். படமாகப் பார்த்து எம்.ஜி.ஆர். ப்ரியர் ஆகிவிட்டார். இதற்கிடையே எம்.ஜி.ஆரும் முதலமைச்சராகிவிட்டார். இவர்

கணவரும் கட்சிப் பொறுப்புக்கு வந்துவிட்டார். எனவே, இந்தப் பெண் எம்.ஜி.ஆரை 'பெரியாம்பிளை' என்றுதான் அழைப்பார். பெயர் சொல்லவும் பதவியை வைத்தும் குறிப்பிட மாட்டார்

இந்த நடுவயதுப் பெண் சில சமயம் 'எம்.ஜி.ஆர். வெற்றிலை போட்டிருக்கிறார். வாயெல்லாம் சிவந்திருக்கிறது' என்பார். சில சமயம் 'பெரியாம்பிளை நெற்றியில் குங்குமம் வைத்திருக்கிறார்' என்பார். மற்றவர்கள் 'ஐயய்யோ... அதை கவனிக்கவில்லையே!' என்பர். ஒருவேளை இவர் சிவாஜி ரசிகராக இருந்து எம்.ஜி.ஆர்' ரசிகர் ஆனதால், இவரால் மட்டுமே இப்படி கவனிக்க முடிந்ததோ என்னவோ என்ற சந்தேகம் பலருக்கும் இருந்தது. மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தக்கார் வி.என்.சிதம்பரம் செட்டியார், எம்.ஜி.ஆர். மதுரை வரும்போது மீனாட்சி அம்மன் கோயிலின் ஸ்தானிகபட்டர் விமான நிலையத்தில் அவருக்கு பூரணக் கும்பமரியாதை செலுத்தி திருவிளையாடல் புராணத்திலிருந்து...

மல்குக வேதவேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எல்லாம் பரவுக அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட்கெல்லாம் நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உலகமெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க

என்ற பாடலைப் பாடி வாழ்த்தி, நெற்றியில் குங்குமம் இடுவாராம். அந்தக் குங்குமத்துடன் எம்.ஜி.ஆர் வந்திருக்கலாம். இவற்றைப் படித்த பிறகு, எம்.ஜி.ஆரின் நெற்றியில் குங்குமம் இருக்க வாய்ப்பு இருந்ததாக உணர்ந்தேன்.

வெற்றிலை போட்டு வாய் சிவந்த எம்.ஜி.ஆர்.

'எம்.ஜி.ஆர்., வெற்றிலை போடுவாரா... மாட்டாரா?' என்ற கருத்து எங்களிடம் இருந்ததால், அந்த நடுவயதுப் பெண்

கூறியதை பலரும் அப்போது மறுத்துப் பேசினர். எம்.ஜி.ஆர் ஒருமுறை சாப்பாடு ஜீரணிக்கவேண்டி வெற்றிலை கேட்டிருக்கிறார். அப்போது வழியில் ஒரு பெண் வெற்றிலை விற்றதைப் பார்த்தவர்கள், அந்த அம்மாவிடம் சென்று 'எம்.ஜி.ஆருக்கு வெற்றிலை வேண்டும்' என்று கேட்டிருக்கிறார்கள் . அந்த அம்மா காசு வாங்க மறுத்தும், கையில் ஐந்து ரூபாயைக் கொடுத்துவிட்டு வெற்றிலை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தைப் படித்த பிறகு, 'அவருக்கு வெற்றிலை போடும் பழக்கம் இருந்தது. அதனால் அன்றுகூட அவர் வெற்றிலை போட்டிருக்கலாம்' என்று என் மனம் அமைதி அடைந்தது.

எம்.ஜி.ஆரின் கைராசி

எங்கள் பகுதியைச் சேர்ந்த இரு சகோதரர்கள், அக்காள் தங்கையை திருமணம் செய்துகொண்டு அசைவ உணவகம் ஒன்றை நடத்திவந்தனர். அந்தப் பெண்களில் இளையவர் எம்.ஜி.ஆர் ரசிகை. அவர் எம்.ஜி.ஆருடன் கை குலுக்க வேண்டும் என்று தன் கணவரிடம் தன் ஆசையைத் தெரிவித்தார். அவரும் சரியென ஒப்புக்கொண்டு, எம்.ஜி.ஆர். வரும் பாதையில் அவர் காரின் வேகம் குறையும்படி தன் பணியாளர்களைக் கூட்டமாக நிற்குமாறு சொல்லிவிட்டார். எம்.ஜி.ஆர் வந்தார். கூட்டமாக நின்றவர்கள், எம்.ஜி.ஆரின் காருக்கு அருகில் ஓடினர். இந்தப் பெண்ணும் கூடவே ஓடிசென்று காருக்குள் இருந்த எம்.ஜி.ஆரிடம் கை கொடுத்தார். எம்.ஜி.ஆர் சிரித்துவிட்டார். இந்தப் பெண்ணுக்காகத்தான் இந்த ரகளை என்பது அவருக்குப் புரிந்துவிட்டது. இந்தப் பெண் கை கொடுத்ததும் அந்தப் பணியாளர்கள் விலகி நின்றுவிட்டனர். எம்.ஜி.ஆர் கைராசி, இன்று அவர்கள் உணவகம் மதுரையிலேயே டாப் உணவகமாக இருக்கிறது. மதுரையின் நவீன அடையாளங்களில் ஒன்றாகிவிட்டது.

எம்.ஜி.ஆரிடம் ஓர் ஆசை

ஒரு பெண்ணின் தாயார் மட்டுமல்ல, அவர் குடும்பமே எம்.ஜி.ஆர் ரசிகர்கள்தான். அவர்களும் எங்கள் பகுதியில்தான் குடியிருந்தனர். இந்தப் பெண்ணின் சகோதரர் மற்றும் கணவரும் எம்.ஜி.ஆர் ரசிகர்களே. இந்தப் பெண்ணின் முதல் குழந்தைக்கு எம்.ஜி.ஆரின் அம்மா பெயரான 'சத்யா' என்பதைச் சூட்டியிருந்தனர். 1972-ம் ஆண்டுக்குப் பிறகு பிறந்த பெண் குழந்தைகளில் பலருக்கு 'சத்யா' என்று பெயர் சூட்டியிருப்பர்.

ஒருநாள் எம்.ஜி.ஆர். மதுரை வந்தபோது இந்தப் பெண்ணின் கணவர் தன் மனைவியிடம் 'வா, நாம் எம்.ஜி.ஆரைப் பார்த்து நம் சத்யாவை அவரிடம் கொடுத்து வாழ்த்து பெறலாம்' என்றார். இந்தப் பெண்ணும் குழந்தையைத் தூக்கிக்கொண்டு கணவருடன் கிளம்பினார். அப்போது அவர் மனம் சலனமற்று இருந்தது. எம்.ஜி.ஆர் தன் அறையில் பல கட்சிக்காரர்கள் சூழ, ஒளி பொருந்திய முகத்துடன் இருந்தார். அவரை நெருங்கியதும் இந்தப் பெண்ணுக்கு அந்தச் சூழ்நிலையே மறந்துவிட்டது. குழந்தை சத்யாவை எம்.ஜி.ஆர் காலடியில் போட்ட அந்தப் பெண், எம்.ஜி.ஆரை அப்படியே கட்டிப்பிடித்துக் கொண்டார். கண்களை மூடிக்கொண்டார். வெகுநேரம் அப்படியே இருந்தார். யார் விலக்கினார்கள். யார் வீட்டுக்கு அழைத்து வந்தார்கள் என அவருக்கு ஒன்றுமே தெரியவில்லை.

வீட்டுக்கு வந்ததும், ஏதோ பித்து பிடித்ததுபோல் இருந்தார். ஒரு வாரம், பத்து நாள் கழித்துதான் இயல்பு நிலைக்குத் திரும்பினார். அவருக்கு அப்போதும் பெரிய கவலை, 'எம்.ஜிஆரைக் கட்டிப்பிடித்தோமே, அப்படியே அவரைத் தூக்கி ஆலவட்டம் சுற்றியிருக்கலாமே!' என்று. எம்.ஜி.ஆரைப் பற்றி யார் அவரிடம் பேசினாலும், இந்தச் சம்பவத்தைச் சொல்லி மாய்ந்துபோவார்.




வெற்றி திருமகன்
எம்.ஜி.ஆர்
முனைவர் செ. இராஜேஸ்வரி
வெற்றித் திருமகன்
நூல் வரிசை - 2
MG.R
வெற்றித்திருமகன் நூல் வரிசை - 3
சிக்குமங்கு சிக்குமங்கு
சச்ச பாப்பா...
வீரமகன் போராட
வெற்றிமகள் பூச்சூட
மகளிர் போற்றும்
மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்
எம்.ஜி.ஆர் ஒரு ஜீவ நதி
முனைவர் செ. இராஜேஸ்வரி
பதிப்பகம்